கல்கி



புதிய பிலிப்ஸ் மேஜர்

பாருங்கள் - மிகமிகப் புதிய
'லோ-லைன்' காபினெட்

கேளுங்கள் - உங்கள்
அறையில் தத்ரூபமான
இசை நிகழ்ச்சி





பிலிப்ஸ் மேஜர் அழகிய அமைப்பு, ஒலித்தன்மை, இரண்டிலும் மிகப் புதுமையானது. அது நீண்டு, தாழ்ந்து, கவினச் சிறப்புடன் விளங்குகிறது... கவின் மான, ஒளி பொருந்திய 'டாப் போர்டு' டயலைக் கொண்டுள்ளது. புதுமை இல்லங்களின் அழகுக்கு அழகு செய்யுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

பிலிப்ஸ் மேஜர் செயல்திறத்திலும் அதுபோலவே தனிச் சிறப்புடன் விளங்குகிறது. நேரடியாகக் கேட்கின்ற சிறந்த ஒலி சுகத்தையும் உணர்வையும் பெறும் பொருட்டு ஒலியியல் முறைப்படி இரண்டு ஒலிபெருக்கிகள் இரண்டு பக்கங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. 'சூப்பர் ஸ்டெராயாசார்' டயலிங் கண்டென்சர், அதனுடைய விரிந்து பரந்த டயலில் அமைந்துள்ள ஸ்டேஷன்களை முறையாகப் பல வாக்குகளுடன், அமைவுகளைச் சரியாகப் பெற்றுத் தருகிறது.

இயக்கிக் காட்டும் பொருட்டு பிலிப்ஸ் விற்பனையாளரை அணுகுங்கள்
இன்றே ஓர் உபயோக முடிவெடுங்கள்!

மாடல்: பி5எக்ஸ்37ஏ
ஏ.ஸி. மெயின்களுக்கு;
6 நோவல் வால்வுகள்;
4 வேவ்-பாண்டுகள்.
விலை ரூ. 645/-
சர்க்கார் வரி உட்பட
(இதர வரிகள் தனி)

உங்கள் பிலிப்ஸ் ரேடியோ விற்பனையாளர் நம்பகமானவர். தேவைக்கேற்ற சரியான ரேடியோவைத் தேர்ந்தெடுப்பதிலும், அதனின்று முழுமையான பயனைப்பெறுவதற்கும் உங்களுக்கு உதவி புரிய அவர் எப்பொழுதும் காத்திருக்கிறார். அதிகார பூர்வமான ஒவ்வொரு பிலிப்ஸ் விற்பனையாளரிடமும் பிலிப்ஸ் தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற தொழில் நிபுணர்கள் இருக்கின்றனர்; பிலிப்ஸின் அசல் உதிரி பாகங்களும் கிடைக்கின்றன.

பிலிப்ஸ் ரேடியோ

IWT PHR 3409


கல்கி

பொருளடக்கம்



- "கல்கி"யில் வெளியாகும் கதைகளில்
- வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப்
- பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புதிய மேய்ச்சல் நிலங்கள்!





மலர் 24 • இதழ் 38

சர்க்கார் சர்வாதிபத்தியம் சாஸனப்படி செல்லுமா?

பத்திரிகை விளம்பரங்களைக் குறைக்கும் வகையில் சமீபத்தில் வருமான வரி விதி மாற்றப்பட்டு, பின்னர் பலத்த ஆட்சேபணைக்குப் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகை விளம்பரங்களைக் கட்டுப்படுத்தினால் அது சுதந்திரத்தின் மீது சர்க்கார் நடத்தும் இரு முனைத் தாக்குதலாகும். தனியார் தொழில்களில் சர்க்காரும் அதன் சிப்பந்திகளும் சர்வப் பிரவேசம் செய்து அவை எந்தெந்த இனங்களில் எப்படி எப்படிச் செலவிடலாம் என்று கட்டளை இடுவதன் மூலம் தொழில் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது ஒரு முனை. விளம்பர வருமானம் குறைந்தபின் பத்திரிகைத் தொழில் நாசமாகாதிருக்க வேண்டுமானால் அவை அரசாங்க விளம்பரங்களை அதிகமாகப் பெற முயல வேண்டும். அரசாங்க விளம்பரம் பெற வேண்டுமெனில் அரசாங்கத்தை ஆதரித்தே எழுத வேண்டும். இதனால் அரசியல் சாஸனத்தின் முகவுரையில் அழுத்தம் திருத்தமாக அளிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பது இரண்டாவது முனை.

விளம்பரச் செலவுகள் மிகவும் பெருகினால் அதைத் தொழிலகங்களின் பாகஸ்தர்கள்தான் ஆட்சேபிக்க உரிமை பெற்றவர்கள். இவ்விஷயம் ஜனநாயக சர்க்காரின் தலையீட்டுக்கு ஒருபோதும் இடமளிக்காது. தொழிலகங்களின் சகல விவகாரங்களையும் சர்க்கார் இச்சைப்படி இயக்க இடமளித்தால், தொழிலாளிகளின் ஊதியத்துக்குக் கூடச் சர்க்கார் வரம்பு விதித்து, தொழிலகத்தின் செலவுகளைக் குறைத்து, சர்க்கார் வரிவிதிக்கக் கூடிய வருமானத் தொகையை உயர்த்த முற்படும். ஃபோர்ட் போல் தரும சிந்தனை படைத்த ஒரு தொழிலதிபர் தொழிலாளிகளுக்குத் தாராளமாக ஊதியம் வழங்கினால் அதைச் சர்க்கார் சட்ட விரோதமாக்கி விடும். அதிகாரத்தைச் சுவைக்கச் சுவைக்க அதிகாரப் பசி அதிகரித்துக் கொண்டே போவது போல், ஒரு துறையில் சர்க்கார் தலையிடுவதற்கு இடமளித்தோமாயின் அது தொடர்ந்து பல தலையீடுகள் செய்வதற்குத் தூண்டுகோலாகும்.

விளம்பரக் கட்டுப்பாட்டு விதிகளும் புதிய கம்பெனிச் சட்டமும் சர்க்கார் சர்வாதிபத்தியத்தின் அடையாளங்களே யாகும். இந்தச் சர்வாதிபத்தியப் போக்கு அரசியல் சாஸனத்தின் நோக்கத்துக்கே முரணானது எனக் கருதுகிறேன்.

அரசியல் சாஸனத்தில் கூறப்பட்டுள்ள தேசிய லட்சியங்கள் அதன் நான்காம் பாகத்திலுள்ள பதினைந்து பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை எல்லா அரசியல் கட்சிகளும் பூரணமாக ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் நாற்பதுகோடி ஆன்மாக்கள் வாழும் நமது ஜனநாயக நாட்டில் மேற்படி இலட்சியங்களை அடையப் பல மார்க்கங்கள் இருப்பதாகக் கருதுவது இயற்கை. தேசிய இலட்சியங்களை அடையப் பல மார்க்கங்களில் பல அரசியல் கட்சிகள் முயலுவதே ஜனநாயகம். இதற்கேற்ப அரசியல் கட்சிகள்

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா

— பாரதியார்

ஒன்றுக் கொண்டு மாறுபட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து, அவற்றுக்கு மக்களின் ஆதரவைப் பெறத்தான் பார்லிமெண்ட் ஜனநாயக முறையும், பொதுத் தேர்தல்களும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டன.

தேசிய இலட்சியங்களை அடைவதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாமென சாஸனம் அனுமதித்தபோதிலும், மக்களின் ஜீவாதார உரிமைகளைப் பற்றி எந்த மாறுபாடும் இருக்கலாகாது; அவற்றை எந்த அரசியல் கட்சி பதவிக்கு வந்தாலும் மாற்றலாகாது என்று சாஸனத்தை உருவாக்கியவர்கள் கருதினார்கள். இதனாலேயே, மக்களின் ஜீவாதார உரிமைகளைத் தேசிய இலட்சியங்களுக்கு முன்னதாக சாஸனத்தின் மூன்றும் பாகத்தில் உறுதிப்படுத்தினார்கள். மக்களுக்கு நீதியும், சுதந்திரமும், சம வாய்ப்பும் அளிக்கும் இலட்சியத்தைச் செயலாக்கும் போது எந்த ஆள்கிற கட்சியும் மக்களின் ஆதார உரிமைகளைப் பறிக்கக் கூடாது என சாஸனத்தை வகுத்த ஸ்ரீ கோபாலஸ்வாமி அய்யங்காரும், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரும், டாக்டர் அம்பேத்காரும், பி. என். ராவும் மற்றவர்களும் கருதினார்கள். சர்க்கார் தம் இலட்சியத்தை நிறைவேற்ற முயலும்போது **என்னென்ன செய்யக் கூடாது** என்பதைத் தெளிவாகவும் திட்ட வட்டமாகவும் விதித்தார்கள். தனி மனிதர்களின் ஊக்கத்துக்கும் போட்டிக்கும் பதிலாகச் சர்க்காரின் அதிகார நிர்வாகமே நம்பி, நாட்டு வாழ்வின் சகல அம்சங்களிலும் சர்க்கார் பிரவேசித்து அதன் பொருளாதாரத்தை இயக்க வேண்டும் என்று கருதுகிற கம்யூனிஸ, சோஷலிஸ சித்தாந்திகள் நமது தேசத்தில் வளர்ந்து வருவதை அரசியல் சாஸனகர்த்தர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இத்தகைய அரசாங்க சர்வ பிரவேசத்தைத் தடுக்க வேண்டும் என்றே மூன்றும் பாகத்தில் மக்கள் உரிமைகளைப் பிரகடனப்படுத்தினார்கள். **சர்க்கார் இன்னின்ன செய்யக் கூடாது என்று கூறும் சாஸனத்தின் மூன்றும் பிரிவு ஷரத்துக்களை மீறாமலே,** சாஸனத்தின் முகவுரையில் சுருக்கமாகவும் அதன் நான்காம் பாகத்தில் விரிவாகவும் கூறப்படும் லட்சியங்களை அடைய வேண்டும் என்பது அரசியல் சாஸன சபை முடிவு. மீறிச் செய்கிற எந்தச் சட்டமும் செல்லாது என விதிக்கப்பட்டது.

பார்லிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் அரசியல் சாஸன ஷரத்துக்களுக்குத் திருத்தம் கொண்டு வரவும் சாஸனத்திலே இடமளிக்கப்பட்டது. சாஸனத் **திருத்தம்** என்பது மூல ஷரத்தை மாற்றுவதை மட்டுமே குறிக்கும்; மூல ஷரத்தை அடியோடு நிராகரிப்பதற்கு இடமளிக்காது. ஆனால் சர்க்கார் இவ்வாறு கருதவில்லை. மக்களின் ஜீவாதார உரிமைகளைக்கூட சாஸனத் திருத்தத்தின் மூலம் பறிக்க முடியும் என்றே கருதி அது சட்டங்கள் செய்தது. 'சாஸனத்தின் மூன்றாவது பிரிவு அளிக்கும் ஜீவாதார உரிமைகளை ரத்து செய்கிற, அல்லது குறைக்கிற எந்தச் சட்டத்தையும் சர்க்கார் செய்யலாகாது' என்று அரசியல் சாஸனத்தின் 13(2) ஷரத்து கூறுகிறது. ''சட்டம் (Law) செய்யக் கூடாது' என்றும் சாதாரணச் சட்டம் செய்யக் கூடாது என்றே பொருள்; சட்டத் திருத்தம் (Amendment) செய்யக்கூடாது என்று பொருளல்ல. எனவே ஜீவாதார உரிமைகளை மாற்றவும் சட்டத் திருத்தம் செய்யலாம்'' என்று சமீபத்தில் ஸுப்ரீம் கோர்ட் வியாக்கியானம் செய்தது. எனினும் ஸுப்ரீம் கோர்ட்டின் இரு நீதிபதிகள், ஜீவாதார உரிமைகளைப் பறிக்கிற சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவதைச் சாஸனம் அனுமதிக்கவில்லை என்று மாறுபட்ட கருத்துத் தெரிவித்தார்கள்.

அரசியல் சாஸனத்தின் மூன்றும் பிரிவின் மீற முடியாதவை என கருதி கூறப்பட்ட ஜீவாதார உரிமைகளைப் பார்லிமெண்டின் மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டி பெறக்கூடிய எந்த ஆளும் கட்சியும் எளிதில் பறிப்பதற்கு அதிகாரம் பெறலாமா என்பதே கேள்வி. சாஸனத் **திருத்தம்**, என்பது மூல சாஸன நோக்கத்துக்கே மாறாக இருக்க முடியுமா என்பதே கேள்வி. சாஸனத்தின் 143ம் பிரிவின் கீழ், சர்ச்சைக்குரிய சட்ட நுணுக்கங்களை ஸுப்ரீம் கோர்ட்டைக் கொண்டு பரிசீலனை செய்யும் அதிகாரம் ராஷ்டிரபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்தின் கீழ், ஜீவாதார உரிமைகளை மாற்றும் விஷயத்தை ஸுப்ரீம் கோர்ட் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். சர்வதேசச் சட்ட நிபுணர்களும் இப்பிரச்னையை ஆராய வேண்டும்.

சாஸனம் இயற்றியவர்கள் அதன் மூன்றும் பிரிவில் மக்களுக்கு அளித்துள்ள ஜீவாதார உரிமைகளுக்கெல்லாம் சோஷலிஸத் திட்டம் முரணாக இருப்பதால்தான் மறுமுறை சாஸனத்தை மாற்ற நேரிட்டது. அதாவது சோஷலிஸம் என்பது இந்திய அரசியல் சாஸனத்தின் உட்கருத்துக்கே முரணானது. காங்கிரஸ் சர்க்காரின் சோஷலிஸம் வீண் விரயத்துக்கு இடம் தரும் வியர்த்தமான பரிசோதனை என்பதோடு மட்டுமல்ல; அது அரசியல் சாஸன கர்த்தர்களின் இலட்சியத்துக்கே விரோதமானது என்றும், சோஷலிஸ ஆட்சியானது சாஸனத்தை அப்பட்டமாகத் தகர்த்து வருகிறது என்றும் கருதுகிறேன். சோஷலிஸப் பரிசோதனையைத் தடுக்க வேண்டுமென்றே சாஸனம் வகுக்கப்பட்டது எனக் கருதுகிறேன்.

(ராஜாஜி ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் மொழிபெயர்ப்பு)

ஆட்சேபணையால் பயனில்லை

சீனாவும் பாகிஸ்தானும் கூடிக் குலாவுவது பற்றியோ, அந்நாடுகள் நம் எல்லைக்குள் ஊடுருவல் செய்வது பற்றியோ அதிருப்தியும், ஆட்சேபணையும், கண்டனமும் தெரிவிப்பதால் எந்தப் பயனும் விளையாது. சீனாவின் தவறுகளையோ, பாகிஸ்தானின் தவறுகளையோ ஆவேசமாக விளக்கிக் காட்டுவதை விட நமது சர்க்கார் தனது தவற்றை உணர்ந்து இப்போதேனும் பரிகாரம் தேட வேண்டும். 'நடுநிலைக் கொள்கையைச் சற்றும் தயங்கா

மல் பூரணமாகக் கைவிட்டு அமெரிக்கா வுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்வ தொன்றே நம்மை வெளி அபாயங்களி லிருந்து ரட்சிக்கும்.

ஆட்சேபகரமான காரியங்களை வேண்டு மென்றே செய்கிற எதிராளிகள் நமது ஆட்சேபத்தையும், கண்டனத்தையும் எதற் காகப் பொருட்படுத்தப் போகிறார்கள்?

பல ஆண்டுகளுக்கு முன் அயூப் வெளி யிட்ட கூட்டு ராணுவ யோசனையை நாம் நிராகரித்ததன் விளைவாகவே இப்பொழுது அவர் சீனாவின் புறம் சாய்ந்திருக்கிறார். அமெ ரிக்க ராணுவக் கட்டை முறிக்காமலே அவர் கம்யூனிஸ நாடுகளின் உறவையும் நாடும்போது, நாமோ ஒரு நாற்புறமும் உறுதியான நட்புப் பெறாமல் தனித்துத் தான் நிற்கிறோம்.

ஷேக் அப்துல்லாவைக் குற்றம் சொல்லி என்ன பயன்? இந்தியாவில் சொல்லி வந்ததையேதான் அவர் இப்போது வெளி நாடுகளில் கூறி வருகிறார். 'காச்மீரம் என்பது ஒரு மக்கட் தொகை; நம் மனம்போல் பரி வர்த்தனை செய்து கொள்ளக் கூடிய நஞ்சை-புஞ்சையல்ல' என்ற உண்மையை மதிக்காமல் பழைய பாடத்தையே நமது சர்க்கார் படித்து வருவதன் விளைவுதான் ஷேக் அப்துல்லாவின் இன்றைய நடவடிக்கைகள். நம் தவற்றை மறந்து எதிராளிகளை மட்டும் குறை காண்பது நீதியும் அல்ல; அதனால் பயனும் விளையாது.

பத்திரிகையும் பாதுகாப்புச் சட்டமும்

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது ஆட்சேபகரமான செய்திகளை வெளியிட்ட தாகச் சில தமிழ்ப் பத்திரிகைகளின் மீது ராஜ்ய சர்க்காரால் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நீதி மன்ற விசாரணையில் உள்ள வழக்கைப் பற்றி நாம் எதுவும் இப்போது கூறுவதற்கில்லை. எனினும் வழக்குத் தொடருவதில் சென்னை சர்க்கார் செய்த சம்பிரதாய விரோதமான ஒரு தவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாதுகாப்புச் சட்ட விதிகள் 1962ம் ஆண்டில் வகுக்கப்பட்டன. அதன் பின் பத்திரிகைகளுக்கும் யூனியன் சர்க்காரின் உள்நாட்டு மந்திராலயத்துக்கும் இடையே ஓர் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. பத்தாயிரம் பிரதிகளுக்கு மேல் செலாவணி யுள்ள பத்திரிகைகளின் மீது சர்க்கார் நட வடிக்கை எடுக்கக் கருதினால் அதற்கு முன்பு மத்திய பத்திரிகை ஆலோசனைக் கமிட்டி யைக் கலந்துகொள்ள வேண்டும் என்பதே இந்த உடன்பாடு.

உடன்பாட்டின்படி பத்திரிகை ஆலோ சனைக் கமிட்டியைக் கலந்தாலோசிக்காமலே தற்போது தமிழக அரசாங்கம் சில பத்திரி கைகளின் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த உடன்பாட்டைச் சென்னை ராஜ்ய சட்ட சபையில் முதல் மந்திரிக்குச் சுட்டிக் காட்டிய போது, 'டில்லியில் என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது' என்று அவர் கூறி யிருக்கிறார். அவருக்குத் தாமாக இவ்விஷயம் தெரியாமலிருக்கலாம். ஆனால் அவருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னரும் நடவடிக்கையை மாற்றிக் கொள்ளாமலே இருப்பது சற்றும் அழகல்ல. தெரியாத்தனத்தால் ஒரு காரி யத்தை மேற்கொண்டிருப்பினும், உண்மை அறிவிக்கப்பட்ட பின்னரும் அதனை மாற்றிக் கொள்ளாமலிருப்பது அறியாமையுடன் ஆண வத்தையும் சேர்ப்பதாகும். தேசப் பாது காப்பு என்ற பெயரில், பத்திரிகைகளுக்குச் சம்பிரதாயமாக அளிக்கப்படும் பாது காப்பை மறுப்பது ஜனநாயக தருமத்துக்கு ஒவ்வாது. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இந்தியப் பத்திரிகைகளில் பல பிரிட்டிஷ் ஆட்சியாளரைக் கண்டித்து எழுதி வந்த போதிலும், அவற்றின் மீது நட வடிக்கை எடுக்கு முன் ஆங்கில சர்க்கார் பத்திரிகை ஆலோசனைக் கமிட்டியைக் கலந் தாலோசித்தனர். இந்த நல்ல சம்பிரதாயத் தைக் கைவிடாமல் பின்பற்றும் பொறுப்பை மத்திய சர்க்கார் தமிழக அரசாங்கத்துக்கு உணர்த்த வேண்டியது அவசியம். 'டில்லியில் நடப்பது எனக்குத் தெரியாது' என்று கூறும் முதல் மந்திரிக்கு இவ்விஷயத்தில் மத்திய சர்க்காருக்குரிய கடமையைத் தெளிவாக்க வேண்டும்.

என்ன சேதி?

தேசமுகரின் கருத்து

'தேசீய ஐக்கியத்தைக் காக்க வேண்டு மாயின் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்' என்ற ராஜாஜியின் நீண்ட கட் டுரை வெளியான 'ஸ்வராஜ்யா' இதழை (பிப்ரவரி 17) படித்த பின் ஸ்ரீ ஸி. டி. தேசமுகர் (முன்னாள் நிதிமந்திரியும் தற் போது டில்லி சர்வகலாசாலை அதிபரும்) பின்வருமாறு எழுதியுள்ளார்:

'சாத்தியமான சகல முறைகளாலும் ஆங்கில அறிவை நாம் விருத்தி செய்து கொள்வதால் நாடு முழுவதுமே மகத் தான நன்மையைப் பெறும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. நம் முடைய சுதேசி மொழிகள் விருத்தி அடைவதற்கு வேண்டிய அவகாசம் இருக்கிறது. நாம் ஆங்கிலத்தைக் கற் பதன் மூலம் நமது மொழிகளின் அபி விருத்தி விரைவு பெறும். ஏனெனில் ஆங்

லை ஞானத்திலும்தான் வேகமாக மாறிக் கொண்டு வரும் உலகின் கருத்துக்களையும் கொள்கைகளையும் கிரகிக்க முடியும்.

'ஹிந்தியை மத்திய ஆட்சி மொழியாக்கும் திட்டத்தை இன்னும் பதினைந்தாண்டுகள் தள்ளிப் போடுவதே இன்றையத் தேவை எனத் தோன்றுகிறது. நிகழ் கால சர்ச்சைகளால் எழும்பியுள்ள புழுதியில் நமக்குப் புலனாகாத உண்மைகளையும் புள்ளி விவரங்களையும் மனப்போக்குகளையும் அடிப்படையாகக்கொண்டு எதிர்கால நடைமுறையினையே இவ்விஷயமாக முடிவுகாண விடுவோமாக!'

எதிர்க்கட்சி ஆற்றிய கடமை

சுதந்திரக் கட்சிக்கு ஓர் அனுகூலமான அவகாசம் உண்டு. அதாவது ஆளும் கட்சி எதைச் செய்தாலும் சுதந்திரக் கட்சியினர் எதிர்க்கிறார்களே என்று சொல்லுவோர் உண்டு. ஆளும் கட்சியினர் செய்யும் பெரும்பான்மையான காரியங்கள் தவறானவையாக இருப்பதால்தான் சுதந்திரக்கட்சி பெரும்பாலும் கண்டிக்க வேண்டியிருக்கிறதே தவிர, கண்டிக்க வேண்டும் என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு எதையும் கண்டிப்பதில்லை; பொறுப்பும் கண்ணியமும் மிக்க எதிர்க் கட்சி சுதந்திரக் கட்சி என்று சொல்லி வந்திருக்கிறோம். எவ்வளவு சொன்னாலும் வார்த்தைக்கு அவ்வளவு செல்வாக்கு இருப்பதில்லை. சொன்ன வார்த்தையை நடத்தையில் காட்டிவிட்டால் அதற்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஷேக் அப்துல்லாவின் வெளி நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி டில்லி மக்கள் சபையில் பல காங்கிரஸ்காரர்கள் உள்பட ஆளும் கட்சியைத் தாக்கிப் பேசியது நினைவிருக்கும். பிரதமர் லால் பகதூர் அவர்கள் மேற்படி விவகாரத்தைப் பற்றித் தமது அறிக்கை வெளியிட மேலும் ஒரு நாள் அவகாசம் கேட்டார். சபை அந்த அவகாசம் தர மறுத்தது. அந்தச் சமயத்தில் பிரதமர் லால் பகதூர் துணை யாருமின்றி நின்ற காட்சி பரிதாபமாக இருந்ததாம். அப்போது அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து உதவியவர் சுதந்திரக் கட்சித் தலைவரான ஆசாரிய என். ஜீ. ரங்கா அவர்கள்தான். பிரதமர் கேட்கும் ஒரு நாள் அவகாசத்தைக் கொடுப்பதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது என்று கூறிப் பிரதமரைத் தர்மசங்கடமான நிலையிலிருந்து காப்பாற்றி விட்டார் ஸ்ரீ ரங்கா. இதைக் கண்டு எதிர்க் கட்சியாளர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், சபை நடவடிக்கைகளைப் பார்க்க வந்தவர்களும், பத்திரிகையாளர்களும் அப்படியே வியந்து போனார்களாம். பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் செய்ய வேண்டிய காரியத்தை ஆசாரிய என். ஜீ. ரங்கா அவர்கள் செய்ததற்காகப் பாராட்டுகிறோம்.

வடக்கில் விழிப்பு

பீகார் ராஜ்யம் ஹிந்தி மொழி பேசும் பிரதான ராஜ்யங்களில் ஒன்று. அதன் தலைநகரான பட்னாவிலிருந்து இருபத்தைந்து உயர்நீதிமன்ற அட்வகேட்டுகள் ஆங்கிலம் இன்னும் பதினைந்தாண்டுகள் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கோரி நமது ராஷ்டிரபதிக்கும், பிரதமருக்கும் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். தேசபக்தியின் காரணமாகவும், தேசம் பிளவுபட்டுப் போகாமல் இருக்கவேண்டும் என்ற கவலையினாலும் மேற்கண்ட அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். "பல மேனாட்டு விஷயங்களை நாம் தமதாக்கிக் கொண்டு விட்டாற்போல் ஆங்கிலமும் நமது நாட்டின் சொந்தமான தேசிய மொழியாகி விட்டது!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

மேற்கண்ட அட்வகேட்டுகளைப் பின்பற்றி ஹிந்தி பேசும் பிரதேசங்களில் உள்ள மற்ற பலரும் மக்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் உண்மையை உணர்த்தப் பாடுபட வேண்டும்.

மன்னர் மறைந்தார்

ராஜ வம்சத்துக்கே உரிய பண்போடும் கௌரவத்தோடும் சென்னை மாநில கவர்னர் பதவியை வகித்து மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற பவநகர் மகாராஜா கிருஷ்ண குமார் சிங்ஜீ அவர்களின் மறைவுக்கு மிகவும் வருந்துகிறோம்.

அவர் தமிழகத்தின்பால் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார் என்பது சமீபத்தில் ராஜாஜி வெளியிட்ட ஒரு தகவலிலிருந்து தெரிகிறது. கவர்னர் பதவியை விட்டு விலகிய பின் அவர் ராஜாஜியிடம் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்து, தமிழ்நாட்டைக் குறித்த எந்த நல்ல காரியத்துக்கேனும் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் எனக் கூறியிருந்தார். இத்தொகை நோயுற்ற ஏழைகளின் பிரயோஜனத்துக்காகச் சென்னை அரசாங்கத்தின் சுகாதார இலாகாவிடம் ஒப்படைக்கப் பட்டது.

அவர் சென்னை கவர்னராக இருந்த காலத்தில் மகாராணியார் அவர்களும் தமிழக ஆலயங்களுக்கெல்லாம் பக்தி சிரத்தையுடன் சென்று வணங்கி வந்து தமிழ்ப் பெண்குலத்தின் பெருமதிப்பையும் பெற்றிருந்தார்.

அவருக்கு ஏற்பட்ட இந்த ஆறாத் துயருக்குத் தமிழகம் தனது உளம் கனிந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



பவநகர் மன்னர்

ராஜாஜியின் கருத்துக்கள்



இந்தி வழங்காத பகுதித் தலைவர்களுக்குச் சில வார்த்தைகள்: நம் சமாதானப் பிரியமும் அதற்காக விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதும்தான் எப்போதுமே நம்முடைய நஷ்டத்துக்குக் காரணமாக இருந்து வருகிறது. இந்தியர்கள் பெரும்பான்மையாக இருப்பதும், அவர்கள் தங்கள் திட்டத்தைப் பற்றிப் பிடிவாதமாக இருப்பதும் உண்மை. ஆனால் பெரும்பான்மையின் பிடிவாதம் ஜனநாயக ஆட்சியாகாது. இந்தி வழங்காத பகுதித் தலைவர்கள் இந்தியரின் பிடிவாதத்துக்கும் மேலாகப் பிடிவாதமாக இருந்து அந்நிலையை எதிர்த்து நிற்க வேண்டும். பகுத்தறிவுக்கு ஒவ்வாத மொழிப் பித்தின் மீது காரியம் செய்து வரும் இந்தியருக்கு இந்தித் திட்டத்தில் உள்ள குறைகளை நாம் எடுத்துக் காட்ட வேண்டும். இந்தி வெறித்தனம் ஏறுவதால் நிர்வாகத்தின் திறமை குன்றிப் போகும் என்பதையும் நாட்டின் ஐக்கியம் நாசமாகும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்தும் வரையில் நாம் தளர்ச்சி அடைந்து விட்டுக் கொடுக்கலாகாது. இந்தி மக்கள் தங்கள் மொழியிடம் கொண்டுள்ள பற்று இந்தியாவிடமும், இந்திய ஐக்கியத்திலும், இந்தியாவின் முன்னேற்றத்திலும் அவர்களுக்குள்ள பற்றுதலை விடப் பெரியது என்று நாம் எண்ணலாகாது. இந்தி மக்களுக்கு உண்மையை அறிவுறுத்தி, இருநூறாண்டுகளாக நல்ல முறையில் நடந்து வரும் ஆங்கில மொழியமைப்பை நீடிக்கப் பாடுபடுவதே நமது கடமை. ஆட்சி மொழிப் பிரச்னையை அடியோடு இப்போது தவிர்க்க முடியாவிட்டாலும், கால வரம்பு இல்லாமல் தள்ளிப் போடுவதற்கு நாம் முயல வேண்டும்.

ஃ ஃ ஃ

ஜனவரி மாதம் 25ந் தேதியன்று மதுரையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய மாணவர்களை ஆத்திரமூட்டும் வகையில் நடந்துகொண்டதாக ஐந்து காங்கிரஸ்காரர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கலாகியிருக்கிறது. இச் செய்தி என்னை மிகவும் கவர்ந்தது.

அமைதியாக நடந்த இந்தி எதிர்ப்பு இயக்கம் அக்கிரம உருவெடுத்ததற்கு மூல காரணமே மேற்படி நிகழ்ச்சிதான். இவ்விஷயத்தை மறந்து போகும்படி விடாமல் போலீஸார் காங்கிரஸ்காரர்கள் மீது வழக்குத் தொடர்ந்திருப்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். முக்கியத்துவம் பொருந்திய இவ்வழக்கு விசாரணை மக்கள் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும்.

ஃ ஃ ஃ

ஆங்கிலத் தினப் பத்திரிகைகளில் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களின் பேச்சுக்களைப் படிக்கும்போது, சாதுரியத்துக்காகப் பெற்றிருந்த நற்பெயரை அவர் இழந்து வருகிறார் என்றே தோன்றுகிறது. ஒருவேளை அவர் தமிழில் பேசுவதைச் சரியாக மொழிபெயர்க்கவில்லையோ என்று நினைக்கிறேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியானது மக்களின் உண்மையான உணர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை என்றும், காங்கிரஸை எதிர்க்கும் அரசியல்வாதிகளின் சதித் திட்டம்தான் அது என்றும் அவர் கூறியிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. மாணவர்களின் கிளர்ச்சி எதிர்க் கட்சிகளால்தான் இயக்கப்பட்டதென்றும், பெட்ரோல் ஊற்றிக்கொண்டு ஆன்மஹத்தி செய்துகொண்டவர்கள் குடும்பப் பிரச்னைகளுக்காகவோ அல்லது வியாதி வேதனை பொறுக்க முடியாமலோ தற்கொலை செய்து கொண்டார்கள் என்றும் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் கருதுவதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. இவை காரணமாக இருந்திருப்பின் தினம் தற்கொலைகள் நடைபெற வேண்டும். இந்தி எதிர்ப்புக் காலத்தில் மட்டும் நடைபெற்றது ஏன்?

ஆனால் முன்பு தமிழகத்துக்கு வந்து பார்வையிட்ட இந்திரா காந்தி அவர்களோ நமது முதன் மந்திரியின் கருத்துக்கு நேர் மாறான அபிப்பிராயம் தெரிவித்தார். தென்னிந்தியாவில் இந்தி எதிர்ப்புப் பரவி வருகிறது என்றும், மக்களின் ஆழ்ந்த உணர்ச்சியின் மீதே ஆட்சேபம் உருவாகியுள்ளதென்றும், இதை அலட்சியம் செய்ய தக்கதில்லை என்றும் ஸ்ரீமதி இந்திரா காந்தி டில்லி ஆட்சியாளரிடம் கூறினார். ஆனால் இந்தி வெறியர்கள் இவ்விஷயத்தில் மட்டும் நேரு குடும்பத்தின் கருத்துக்களை மதித்து ஏற்பதில்லை. ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களும் காங்கிரஸ் கட்சியின் பெருவாரிக் கருத்தையே நியாயமானதாகக் கருதித் தமது அரசியல் படகைச் செலுத்தி வருகிறார். மாணவரின் கருத்தை அவர் இலட்சியம் செய்யவில்லை. பெங்களூர் ஸையன்ஸ் நிலையத்தில் மேற்படிப்புக்காகப் படித்து வரும் பட்டதாரிகளின் கருத்தைக் கூட முதன் மந்திரி பொருட்படுத்தவில்லை.


உங்கள் வீட்டிற்கு ஒரு 'எவரெடி' டார்ச்
மிக அவசியம்
75-வது
EVEREADY
உங்கள் 'எவரெடி' டார்ச்சிற்கு எண்ணிறந்த சமயங்களில் அவசியம் ஏற்படும். அதனை அருகிலேயே வைத்திருங்கள். ஏனெனில், அது எந்த சமயத்திலும் உங்களுக்குத் தேவைப்படலாம்.
எவரெடி
ரூ. 3.75 மட்டுமே
EVEREADY
எவரெடி
UNION CARBIDE



சென்னை ராஜ்ய சங்கீதநாடக அகாடமி 1964-65 வருஷத்தில் பாராட்டிக் கௌரவித்த கலைஞர்கள் இதோ: 1. எம். எம். தண்டபாணி தேசிகர் (வாய்ப்பாட்டு) 2. அன்னுசாமி பாகவதர் (ஹரிகதா காலட்சேபம்). 3. திருவாலங்காடு சுந்தரேசய்யர் (பிடில்). 4. மைலாட்டூர் சாமி ஐயர் (மிருதங்கம்). 5. திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை (நாகசுரம்) 6. டி. கே. பகவதி (நாடக நடிகர்). 7. எஸ். வி. சுப்பையா (சினிமா நடிகர்). 8. எஸ். டி. சுந்தரம் (நாடக ஆசிரியர்). 9. ஏ. பி. நாகராசன் (திரைவசனகர்த்தா). 10. எஸ். சௌந்தரராஜ அய்யங்கார் (சினிமா தயாரிப்பாளர்). 11. தண்டாயுதபாணி பிள்ளை (நடன ஆசிரியர்). 12. டி. ஆர். ரகுநாத் (டைரக்டர்). 13. அஞ்சலிதேவி (சினிமா நடிகை). 14. எஸ். ஆர். ஜானகி (நாடக நடிகை). 15. வி. எஸ். சபாபதி (அமெச்சூர் நடிகர்). 16. முத்துகிருஷ்ணன் (நாடகத் தயாரிப்பாளர்.)



காலச்சக்கரம்


கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 3

புதிய அனுபவங்கள்

அந்தச் சிறுமி தன்னைக் கூப்பிட்ட விதம் தங்கப்பனுக்குப் பிடிக்கவில்லை. அதிகாரத் தொனியை அவன் உபாத்தியாயர் அவனிடம் கையாண்டிருக்கிறார். அவன் தாயாரும் அன்புடன் அரவணைத்தது போலவே பல தருணங்களில் அதட்டியுமிருக்கிறாள். ஆனால் "ஏய், பையா!" என்ற அலட்சியத்துடன் கூடிய மிடுக்கான அழைப்பு அவனுக்குப் புதிய அனுபவம்தான்.

எனினும் பெருமை பீற்றிக்கொள்ள வேண்டும் என்கிற ஆசை எங்கிருந்தோ ஒரு மூலையில் கிளர்ந்தெழுந்து தங்கப்பனின் இதயம் முழுவதும் விநாடி நேரத்தில் பரவியது. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், "ஆமாம்!



நான்தான் அந்தத் தேர்தல் சர்க்கஸ் பண்ணி டப்பாப் பாட்டும் பாடினேன்'' என்றான் அவன்.

''இதென்ன பிரமாதம்? நான்கூடத் தான் யானே மேலே ஏறி ஊர்வலம் வந்திருக்கேன்'' என்றாள் உஷா. ''பட்டணத்திலே ஜூ இருக்கு. அதிலே சிங்கம், புலி, கரடி எல்லாம் உண்டு. சர்க்கஸிலே இல்லாத மிருகங்களெல்லாம் கூட அங்கே இருக்கும். நான் சிங்கத்துக்கிட்டே போய்த் தட்டிக் கொடுப்பேன்; எனக்குப்பயமேயில்லே!''

''சும்மா அளக்காதே!'' என்றான் தங்கப்பன். பட்டணத்துக்குப் போய் வந்திருக்கும் அவளிடம் அவனுக்குக் கொஞ்சம் மதிப்பு மிருந்தது. தானும் ஒன்றும் சாமானியப்பட்டவனல்ல என்று நிரூபித்துத் தன் திறமையைக் காண்பித்துக் கொள்ள விரும்புபவன் போல் சட்டென்று அருகிலிருந்த வேப்ப மரத்தின் மீது பாய்ந்து ஏறினான்.

சந்திபுரி நகரசபையைச் சேர்ந்த பள்ளிகள் இரண்டு. சிறுவர்களுக்கென்றும், சிறுமியருக்கென்றும் அருகருகே அமைந்திருந்தன. இரண்டையும் பிரித்து நின்றது ஒரு மதில் சுவர். அதன் ஓரம் பெண்கள் பள்ளி இருக்கும் பக்கத்தில் என்றோ கட்டிட வேலைக்கென்று தருவிக்கப்பட்டு மிஞ்சிப் போன செங்கல் ஜல்லிக் கற்கள் கொட்டிக் கிடந்தன. ஒன்றிரண்டு வேப்பங் கன்றுகள் கூட அந்தக் குவியலில் வேர் விட்டுத் துளிர்த்திருந்தது. செங்கல் ஜல்லிக் கற்களாலான அந்தச் சிறு குன்றின் மீது ஏற முடியுமா என்று பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற துறுதுறுப்பு. மதிலின் மறுபுறம் என்ன



இருக்கிறது என்று அறிந்துகொள்ளும் ஆவல்; இரண்டுமாகச் சேர்ந்து உஷாவை இயக்கியது. அதனால்தான் அந்தச் சிறுமியால் மதிலின் உயரத்துக்கு மேலே தலையை நீட்ட முடிந்திருக்கிறது.

மரம் ஏறுவதில் அவனுக்குள்ள திறமையைக் கண்டு வியந்தவளாய் நின்று கொண்டிருந்தாள் உஷா.

''என்னே இதுமேலே ஏத்தி விடறாயா?'' என்று மதிலின் மேற்புறத்தைத் தட்டிக் காண்பித்தாள்.

"டான்னு கூப்பிட்டா முடியாது! என் பேரு தங்கப்பன்!"

"இல்லேடா, இனிமே டான்னு சொல்லலே!"

மரக் கிளையிலிருந்து மதில் மேல் அடியெடுத்து வைத்த தங்கப்பன் இடது கையால் கிளையைப் பற்றிக் கொண்டு வலது கரத்தை நீட்டினான். அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உஷாவும் மதில் மீது ஏறிக் குறுக்குவாட்டில் சுவரின் இரு புறங்களிலும் கால்களைத் தொங்க விட்டபடி உட்கார்ந்தாள். தன் உள்ளங் கைகளைப் பார்த்துவிட்டு, "ஐயய்ய! கையெல்லாம் ஒரே அழுக்காப் போச்சு" என்று கூறித் தட்டினாள். பொன் னிறத்தை மாசுபடுத்தித் திட்டுத் திட்டாகப் படிந்திருந்த செங்கற் பொடி மண்ணும் சுவரின் சுண்ணாம் பும் முழுமையாக மறைய மறுத்தன.

தங்கப்பன் பந்தை மதில் சுவரின் மேல் புறத்தில் மெல்லப் போட்டுப் பிடித்து விளையாடியபடியே, "என் மாமாகூட என்னை மெட்ராஸுக்கு அழைச்சுக்கிட்டுப் போகப் போறார்" என்று கூறினான்.

ஒரு தடவை சென்னையில் வசிக்கும் அவன் அத்தையும் மாமனும் தங்கள் மகள் செல்வத்தோடு சத்திய புரிக்கு வந்திருக்கிறார்கள். திரும்பிப் போகும்போது "இப்போது தங்கப் பனுக்கு லீவுதானே, தாமரை! பட்ட ணத்தைப் பார்க்கணும்னு ஆசைப்படு றான்; வந்துட்டுப் போகட்டுமே" என்று கூறியிருக்கிறார் அவன் மாமன். ஆனால் தாயார்தான் அதற்குச் சம்மதிக்க வில்லை. 'அம்மாவுக்கு எதுவுமே பிடிக் காது. சதா பாடப் புத்தகத்தை நான் கட்டிக்கிட்டு அழுதால் போதும்!' ஆத்திரமாக வந்தது தங்கப்பனுக்கு.

"என் அப்பா என்னை ஒவ்வொரு லீவுக்கும் அழைச்சுக்கிட்டுப் போவார். அவர் அடிக்கடி மெட்ராஸுக்குப் போகணும். ஏன்னு கேட்டா அவர் தானே நிஜதவாளு, எம். எல். ஏ.!" எம்.எல்.ஏ. என்ற எழுத்துக்களை மிகப் பெருமிதத்தோடு உச்சரித்தாள் உஷா.

அதன் தாத்பர்யம் அவனுக்குப் புரிந்ததோ என்னவோ, அவனுக்கு அவ் வளவாகத் தெளிவாகவில்லை. தனக்கு அது சம்பந்தமாக அதிகமாகத் தெரி யாது என்று அவளிடம் காண்பித்துக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை. ஆகவே, அதை லட்சியம் செய்யாமல் "ரயில்லே போகும்போது நீ மேல் தட் டில் படுத்துக்குவியா? உருண்டு விழுந் துடமாட்டே?" என்று கேட்டான். ரயில் பிரயாணம் என்றால் அவனுக்கு ரொம்பவும் ஆசை. ஆனால் அதற்கும் அவனுக்கு அதிகமாக வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை.

"சே! ரயில்லே யார் போவா?" என் றாள் உஷா வெகு அலட்சியமாக. "ஏழை ஜனங்கள்தான் போகும். காரிலே ஏறிண்டு விர்ர்னு 'ஸ்பீடா' பறந்து போயிடுவோம். சவர்லே கார்! அறு பது மைல் வேகத்திலே போகும்!"

பலூனிலிருந்து காற்றுப் போய் அது சுருங்கி விழுவதுபோலத் தங்கப்ப னுக்கு ஒரு விநோதமான உணர்ச்சி ஏற்பட்டது. மேற்கொண்டு பெருமை அடித்துக் கொள்ளச் சட்டென்று அவ னுக்கு எதுவும் தோன்றவில்லை. மனப் பெட்டியைத் துழாவினான், ஏதாவது அகப்படுமா என்று பார்க்க. வீட்டிலே பெருங்காய டப்பாவுக்குள் போட்டு வைத்திருக்கும் பட்டுப்பூச்சிதான் அவன் நினைவுக்கு வந்தது. 'அதைப் பற்றிச் சுப்பனிடம் வேண்டுமானால் சொல்லிப் பிரமாதப்படுத்தலாம்; இவளிடம் பேசி என்ன பயன்?'

அவன் இப்படிப் பரிதவிக்கையில் அங்கே பெண்கள் பள்ளி பக்கம், தடித்த உருவம் கொண்ட ஓர் அம்மாள் வந்து சேர்ந்தாள். மதில் மேல் உஷா அமர்ந்திருப்பதைக் கண்டதும் திடுக் குற்றவளாய் நின்றாள். பின்னர் "என்னடி உஷா! நீ இங்கேயா இருக்கே! உன்னைத் தேடாத இடம் பாக்கி இல்லே!" என்று கோபக் குரலில் கூறினாள்.

'என்னடி உஷா!' என்ற சொற்களை அந்தக் குரலொலியில் கேட்டதுமே மதில் சுவர்மேல் சுதந்திரமாக உட் கார்ந்திருக்கும் சுவாரசியத்தில் அத்தை வருவதைக் கவனிக்காத உஷாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. நிலை தடு மாறி விழப் போனவளைத் தங்கப்பன் சட்டென்று பிடித்துச் சரியானபடி உட்கார்த்தி வைத்தான்.

"இல்லே, அத்தை! இவன்தான் பந்தை இந்தப் பக்கம் போட்டுட்டு எடுத்துத் தரச் சொன்னான்!"

கூசாமல் அவள் புளுகுவதைக் கேட் டதும் 'விசுக்'கென்று தன் கரத்தைப் பின்னுக்கிழுத்துக் கொண்டான் தங்கப் பன். "பொய் சொல்றாள்" என்றான்.

அப்போதுதான் அந்த அம்மாளின் பார்வை தங்கப்பன் மேல் விழுந்தாற் போலிருந்தது. அவனை ஒரு தடவை உற்றுப் பார்த்து விட்டு, "நீ கள்ளுக் கடை கண்ணுச் சாமியின் மகன் தானே?" என்று கேட்டாள்.

தங்கப்பன் திகைத்தான். இன்று அவனுக்கு ஏதேதோ புதிய அனு


அமிர்தாஞ்சன்
லிமிடெடின்
கிரைப் மிக்சர்
தயாரிப்பவர்கள்:
அமிர்தாஞ்சன் லிமிடெட் சென்னை-4.

பலங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. கண்ணுக்கடை கண்ணுச்சாமி என்று ஏளனமாகவும் ஒருவித வெறுப்புடனும் அந்த அம்மாள் கூறுவது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. தன் மனம் சட்டென்று துன்பமுற்றுத் துவளுவதை அவன் மறைத்துக் கொண்டான். "என் அப்பா பேர் கண்ணுச்சாமிதான்" என்றான்.

"தாமரை சௌக்கியமாக இருக்கிறளா?" என்று கேட்டான் அவன். அப்படி வினவிய வேகத்துடன் கூடவே, "சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்? நல்லாத்தானிருப்பாள். எத்தனை பேர் சொத்தைக் கரைக்கக் குடிச்ச குடும்பம்!" என்று சொல்லித் தன் வயிற்றை இடது கையால் அடித்துக் கொண்டாள்.

பிறகு அவன் பதிலுக்குக் காத்திராமல், "வா உஷா! சாப்பாடு ஆறி அவலாயிடுச்சு. மதில் மேலே ஏறி நீ உட்கார்ந்திருந்தேன்னு உன் அப்பாவுக்குத் தெரிஞ்சா என் மண்டை உருளும்" என்றாள். கைநீட்டி உஷாவைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு சொகுசாக நடந்தாள். கல்லும் முள்ளுமாக இருந்த கவரோரப் பகுதியைத் தாண்டிய பின்னர்தான் சிறுமியைக் கீழே இறக்கி நடத்தி அழைத்துச் சென்றாள்.

உஷாவுடைய அன்னையின் அந்தத் தளுக்கு நடையில் தன்னைத் தன் புறுத்தியதனால் உண்டான இன்பம் நிலவுவதாகப் பட்டது தங்கப்பனுக்கு. தன் பதிலை அவள் எதிர்பாராமல் அங்கிருந்து சென்றதே நல்லதாகி விட்டது. தன்னால் அவளுக்கு என்ன பதில் கூறியிருக்க முடியும்?

இடைவேளை முடிந்து விட்டதன் அறிகுறியாக மணி அடித்தது. முதல் மணி அடித்ததும் விளையாட்டை நிறுத்திவிட வழக்கமாக மனமிருக்காது தங்கப்பனுக்கு. 'பாஸ்கெட் பால்' ஆட்டம் மேலும் ஐந்து நிமிஷங்களுக்குத் தொடரும். இரண்டாவது தடவையாக மணி அடிக்கத் தொடங்கி அந்த ஓசை அடங்கு முன்னர் மின்னலாகப் பறந்து ஓடி வகுப்பறைக்குள் நுழைவது அவன் வழக்கம். ஆனால் இப்போது விளையாட்டில் ரசனையே இன்றி அவன் கால்கள் பின்னலிடச் சோர்வுடன் நடந்தான். வேண்டா வெறுப்பாக வகுப்பில் தன் இடத்தில் போய் உட்கார்ந்தான்.

அத்தியாயம் 4

அனுபவத்தின் விளைவு

முரட்டுத் தனமான தோற்றமும், முறுக்கு மீசையும், நீண்ட கிருதாவும் கொண்ட முகம் தங்கப்பனின் நினைவுத் திரையில் மங்கலான காட்சியாக விரிந்தது. உறுதியான கரங்கள் கட்டுமஸ்தான தேகம் எல்லாம் எப்போதோ, எந்தக் காலத்திலோ அவன் பார்த்து உணர்ந்தவை. ஆனால் அந்தக் கல்லுப் போன்ற கரங்கள் அவனை அள்ளி எடுத்து அணைத்தபோதுதான் எத்தனை மென்மையைக் காட்டின! கடுமை மிகுந்த அந்த முகம்தான் அவனிடத்தில் எத்தனை அன்பைப் புலப்படுத்தியது? அந்த அரவணைப்பில் அவன் ஆனந்தம், நிம்மதி, பாதுகாப்பு, நிறைவு போன்ற பலப் பல இன்ப உணர்ச்சிகளை அனுபவித்திருக்கிறான். "மீஸே! மீஸே!" என்று என்றோ மழலையாகச் சொல்லித் தடவிக் கொடுத்த அவனுக்கு அந்த ஸ்பரிச உணர்வு இன்னமும் தன் விரல்களில் தேங்கி நிற்பதாகத் தோன்றியது. அதையடுத்து அவன் அப்பா அட்டகாசமாகச் சிரித்ததும் தானும் களுக் களுக்கென்று கூடச் சேர்ந்து நகைத்ததும் சமையலறையிலிருந்து அவன் தாயார் அடக்க மாட்டாத ஆர்வத்துடன் ஓடி வந்து இந்தக் காட்சியைப் பார்த்து நின்று மகிழ்ந்ததும் ஞாபகம் வந்தன.

தன் தந்தையைக் குறித்துத் தங்கப்பனுக்கு நினைவிலிருந்தவை இது போன்ற ஒன்றிரண்டு காட்சிகள்தாம். அவையும் நாளாக ஆக மங்கித் தேய்ந்து வருகின்றன. இன்று உஷாவின் அன்னை அவனை ஏதோ அருவருப்பான வஸ்து போல் நோக்கி மனத் துயர் அளிக்கும் வகையில் பேசியிருக்கா விட்டால் இந்த அளவுக்குக் கூடத் தகப்பனைப் பற்றிய எண்ணங்கள் அவனிடம் எழுந்திருக்காது.

அவர் செத்துப் போய் விட்டார் என்பது அவனுக்குத் தெரியும். இறந்து விட்டவர்களின் உடல் சுவாதீனமற்றுப் போகும்; அதைக் கட்டெரித்துச் சாம்பராக்கி விடுவார்கள். ஆனால் உயிர் மட்டும் நமது கண்களுக்குத் தெரியாத வகையில் மேலே செல்லும். வெகு உயரத்தில் வானத்தையும் தாண்டி அப்பாலும் போகும். அங்கே நல்லது

செய்தவர்களின் உயிர் தேவலோகத்தில் சுகமாக வாழும். தீமை செய்தவர்களின் உயிர் நரக லோகத்தில் கஷ்டப்படும்!

தன் அப்பா இப்போது சொர்க்க லோகத்தில் இருக்கிறாரா அல்லது நரக லோகத்திலா? பலபேர்கள் சொத்தைக் கரைக்கக் குடிச்ச குடும்பம் என்றுமே உருப்படாதென்றாள் அத்தை. அதற்கென்ன அர்த்தம்? தன் தாயார் சௌக்கியமாக இருக்கிறாளா என்று விசாரித்துவிட்டு அவள் ஏன் வயிற்றில் அடித்துக் கொண்டாள்? தன் தகப்பனாரைக் கள்ளுக்கடைக் கண்ணுச்சாமி என்று அவள் ஏன் குறிப்பிட்டாள்? கள் குடித்தால் போலீஸார் பிடித்துக்கொண்டு போய் விடுவார்கள். கள் விற்பவனையும் விலங்கு மாட்டி இழுத்துக்கொண்டு செல்வார்கள்....

உபாத்தியாயர் மாருதி ஏதேதோ பாடம் சொல்லிக்கொண்டே போனார். எப்போதும் சூடிகையாக இருக்கும் தங்கப்பன் இன்று, வகுப்பு நேரமாதலால் வெறிச்சோடிக் கிடக்கும் மைதானத்தின் மையத்தில் பார்வையைப் பதித்து விழிகள் நிலைகுத்தி நிற்க ஏதோ யோசனையாக இருப்பதைப் பார்த்தார். அவனைக் கண்டித்து வகுப்பறைச் சூழ்நிலைக்குத் திருப்பிக் கொணர எண்ணியவர் ஏதோ சந்தேகம் எழவே, அனுதாபத்துடன் பிரச்னையை அணுக எண்ணினார். மனம் மாறியதால் அவன் தவறான நடத்தையைக் கவனியாததுபோலிருந்துவிட்டார்.

தங்கப்பனின் மனச் சோர்வு அதிக நேரம் நீடிக்கவில்லை. அன்று மாலையே அவன் நடந்ததை யெல்லாம் மறந்து முன் போலவே உற்சாகம் மிகுந்த பையனானான். அவன் நண்பர்கள் இன்று அவனைப் பிரமாதமாகக் கொண்டாடினார்கள். அவனுடைய யானைச் சவாரி சாதனை குறித்து வியந்து பாராட்டினார்கள். காலையில் கிடைத்த எட்டணாவில் இன்னும் இரண்டு அணாக்கள் மிச்சமிருந்தன. அவற்றைக் கொண்டு ஸ்வீட் ஸ்டாலில் காராப்பூந்திப் பொட்டலம் வாங்கி நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான் தங்கப்பன். ஆகா! அப்போதுதான் அவன் தன் நண்பர்களிடையே எத்தனை உயர்ந்ததான ஒரு ஸ்தானத்தை எட்டிப் பிடித்து விட்டான்! யானை மேல் உட்கார்ந்திருந்தபோதுகூட இத்தனை உயர்வை அவன் காணவில்லை. அவனை முன்னும் போகவிட்டுப் பக்கவாட்டில் ஊர்வலம் பின் தங்கி மற்றவர்கள் நடந்தார்கள். அவர்



பையனின் தாயார்: மறந்தும் பேசாதேடா..... டேய் தாமு! பெண்ணைப் பிடிச்சிருந்தால் பெண்ணின் தகப்பனார் உனக்கு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுக்கிறாராம்!

பையன்: ஸ்கூட்டர் எதுக்கு? அவர் கார்தான் வாங்கிக் கொடுக்கணும்!

களின் தலைவன் என்ற நிலை தங்கப்பனின் நெஞ்சத்தில் ஒரு கிளுகிளுப்பை உண்டுபண்ணியது. அவனுடைய புத்தகப் பையைக்கூட அல்லவா நண்பனொருவன் தானாகவே வாங்கிக் கொண்டு தன்னுடையதுடன் சேர்த்துத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு சென்றான்!

கோஷ்டியாக அவர்கள் ஊரைச் சுற்றி வந்தார்கள். பிரதானமான இரண்டு கடைத் தெருக்களில் மிகுந்த மேற்காக அமைந்திருந்த கோயமுத்தூர் சாலையில் நடந்தார்கள். இங்கு தான் ஜவுளி வியாபாரம், ஜுவல்லரி மார்ட், வெங்கடா லாட்ஜ் — போர்டிங் அண்டு லாட்ஜிங் போன்றவை இருந்தன. கடைகளையும் அவற்றுக்கு வருவோர் போவோரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்று மணிக்கூண்டினை அடைந்தார்கள். வலது பக்கம் திரும்பினால் பஸ் ஸ்டாண்டு. அதனருகில் பூக்கடை. எதிரே சினிமாக் கொட்டகை. அதற்கு அப்பால் சில ஓட்டுக் கூரை வீடுகள். அவற்றில் ஒன்றில்தான் தங்கப்பனும் அவன் தாயாரும் வசித்தார்கள். நேரே போனால் கதிராம் மார்க்கெட். மளிகைக் கடைகள் வரிசையாக. அப்புறம் பெருமாள் கோயில். பிறகு கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயலும் வரப்புகளும்தான். இடதுபுறம் சென்றால் ரெடிமேட் ஆடைகள், சோப்பு பவுடர் இன்னும் இதர நவநாகரீக

சாதனங்களை விற்கும் பலசரக்குக் கடைகள் இத்தியாதி. அவற்றைத் தாண்டி நடந்தால் எதிரே காந்திப் பூங்கா. அதன் இரு பக்கங்களிலும் ஏழெட்டு மாடி வீடுகள். ஊரில் கொஞ்சம் வசதி படைத்தவர்கள் வாழும் பகுதி இது. வீட்டினெதிரே பூந்தோட்டம், புல்வெளி, அதில் போடப்பட்டுள்ள ஓரிரு நாற்காலிகள், காம்பவுண்டுச் சுவர் உள்ளே அமைந்த பாதையில் நிற்கும் மோட்டார் கார், வாசல்படிகளுக்கு முன்னால் போர்ட்டிகோ, அதில் தொங்கும் ஊஞ்சல் போன்றவற்றை இந்த வட்டாரத்தில் காணலாம். அதோடு வெளிப் பார்வைக்கு எளிதில் புலப்படாத போட்டி, பொறாமை, பெருமை, பகைமை, உள்ளப் புகைச்சல், மனக் குமுறல் போன்றவையும் இந்தப் பகுதியை நன்கு சுற்றிச் சூழ்ந்திருந்தன. பூங்காவின் எதிரே வலதுபுறம் திரும்பிப் பங்களாக்களைக் கடந்து சென்றால் பெரிய மைதானம். பகல்போதில் அங்கு சில ஆடு மாடுகள் மேயும். மாலையில் சிறு சிறு கூட்டங்களாக மக்கள் அமர்ந்து அரட்டை யடிக்கப் பயனாகும். ஒரு பக்கத்தில் சிறுவர்கள் கோலியாடுவார்கள். இன்னொருபுறம் இளைஞர்கள் டென்னிஸ் பந்து அளவினதான ஒரு ரப்பர்ப் பந்தை வைத்துக்கொண்டு கால் பந்தாட்டத்தில் தங்களுக்குள்ள திறமையைக் காண்பிப்பார்கள். வேர்க்கடலை வியாபாரமும் சிறிய அளவில் நடக்கும். திருவிழாக் காலத்தில் மட்டும் வருஷத்துக்கு ஒரு முறை இந்தத் திடலில் 'ஜே ஜே' என்று கூட்டம் நிரம்பி வழியும். கோழிச் சண்டையும், கரக ஆட்டமும், குடை ராட்டினமும் மக்களைக் கவர்ந்து இழுக்கும். மற்றக் காலங்களில் இந்த மைதானத்துக்கு மதிப்புக் கிடையாது. எனினும் தேர்தல் சமயமான இப்போது அதற்குத் திடீரென்று கிராக்கி மிகவும் அதிகமாகி விட்டது. மாறி மாறிப் பல கட்சிக்காரர்கள் அங்கு வந்து பிரசாரம் செய்தார்கள். பலதரப்பட்ட மனப் போக்குடையவர்கள் அங்கு வந்து குழுமினார்கள். பிடித்த மானவற்றைக் கேட்டார்கள்; விரும்பாதனவற்றுக்குச் செவி மடுக்காமல் அங்கிருந்து விரைந்தார்கள். ஆனால் அந்த மைதானமும் அதன் ஓர் ஓரத்திலிருந்த அரச மரத்தடிப் பிள்ளையாரும் அனைத்தையும் கேட்க நேர்ந்தது; கேட்டுச் சகிக்கவும் வேண்டி யிருந்தது!

தங்கப்பன் இன்று பணிக்களிடை அடைந்ததும் வீடு நோக்கிச் செல்ல வலது புறம் திரும்பாமல் இடது பக்கமாகப் போனான். அந்த இடத்தில் யானை மீது அமர்ந்து அவன் டப்பாப் பாட்டுப் பாடியது, அதன் பின்னர் பள்ளியில் மத்தியானத்து நிகழ்ச்சிகள், அப்போது அவன் கேட்ட விஷயங்கள், உருவாக்கிக் கொண்டிருந்த முழுமையில்லாத அபிப்பிராயங்கள் எல்லாமாகச் சேர்ந்து அவனை மாற்றுத் திசையில் இட்டுச் சென்றன. தன்னையும் தன் பெற்றோரையும் அவ்வளவு குறைவாக மதித்துப் பேசிய அந்த அம்மாளும் அவளைச் சேர்ந்தவர்களும் இந்தப் பகுதியில் உள்ள சில பங்களாக்களுள் ஒன்றில் தான் வசிக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். தீனதயாளு என்ற பெயரும் உருவமும் அவனுக்கு ஏற்கெனவே பரிச்சயமான ஒன்றுதான். அவனுடைய பள்ளிக்கே கூட அவர் இரண்டு தடவை வந்திருக்கிறார். ஆனால் அவருடைய வீட்டை அணுகி அவன் என்ன செய்யப் போகிறான், எதற்காக இப்போது செல்கிறான்? இதற்கு விடை என்னவென்று அவனைக் கேட்டிருந்தால் அவனுக்கே புரிந்திருக்காது. தங்கப்பவின் நண்பர்களும் அவனை ஏனென்று கேட்கவில்லை. எல்லோரும் சிரித்துப் பேசியபடியே நடந்தார்கள்.

காந்தி பூங்காவை நெருங்கிய போது எதிரே ஒரு பெரிய மாடி வீட்டிலிருந்து நீளமானதொரு கார் வெளியே வந்து ஜவாஹர் மைதானத்தைநோக்கித் திரும்பியது. டிரைவர் அதனை ஓட்டி வரப் பின் ஸீட்டில் குழந்தை உஷாவும் தீனதயாளுவும்தான் உட்கார்ந்திருந்தார்கள்.

அங்கிருந்து சரியாக இரண்டு பர்லாங் தூரத்திலிருந்த ஜவாஹர் மைதானத்தை நோக்கிக் கால் நடையாகவும் சைக்கிளிலும் ஜனங்கள் சாரி சாரியாக நகர்வதைக் கவனித்தான் தங்கப்பன். அவனும் அவனைப் பின்பற்றி அவன் நண்பர்களும் அவ்வாறே அந்தத் திசையிலேயே போனார்கள். தூரத்திலிருந்து சினிமாப் பாட்டு ஒலித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் அது நின்று விட ''அன்பர்களே, தாய்மார்களே!'' என்ற கணீரென்ற குரலில் தீனதயாளு பேச ஆரம்பித்தார்.

இந்த மாதிரிப் பொதுக் கூட்டங்கள் சாதாரணமாகத் தங்கப்பனுக்குப் பிடிக்காது. ஏதேதோ அவனுக்குப் புரியாத பிடிபடாத விஷயங்களை அலசி ஆராய்ந்து சிரமப்படுத்துவார்கள். ஆனால் இன்று அவன் கூட்டத்துக்குப் போனதோடு உன்னிப்பாகச் சொற்பொழிவைக் கேட்கவும் ஆரம்பித்தான். (தொடரும்)


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்



24. காவிரியைத் தந்த கணநாதன்

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

தட்சிண திசை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகத்திய முனிவர் வில்வலனும் வாதாவியும் வாழ்ந்து வந்த கானகத்தை நெருங்கினார்.

முனிவர் வருவதையறிந்த அவ்விரு அரக்கர்களின் இதயத்தில் ஆத்திரத் தீ மூண்டது; நாவிலோ உமிழ் நீர் சுரந்தது. அமுத மறைகளை உள்ளடக்கிய அருந்தவர்களைப் பட்சித்து ருசி கண்ட நாவல்லவா ?

"இதோ வருகிற இந்த அகத்திய முனிவன் கிரவுஞ்சனாகிய அவுணனைக் கடிந்தவன்; எனவே நமது பரம விரோதி. இவனுக்கு நமது வழக்கம் போல் உணவு படைத்துக் கொன்றுவிட வேண்டும்" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். உடனே, வாதாவி ஆட்டுக்கடா வடிவம்கொண்டு புல் மேயத் தொடங்கினான். வில்வலன் சடையும், திருநீறும், உருத்திராக்கமும், மரவுரியும் தரித்து முனிவர் போல் வடிவம் கொண்டு அகத்தியர் முன் சென்று முறைப்படி வணங்கினான். "எம் பெருமானே! இன்றே எளியவன் அரும்பேறு பெற்றேன். தங்களைக் காண இன்றைக்குத்தான் எனக்குக் கொடுத்து வைத்தது. இது எனது ஆசிரமம். அடியேன் தரும் புற்கையை அமுது செய்து ஆண்டருள வேண்டும்" என்று வேண்டினான்.

வில்வலனுடைய அன்பு கலந்த வஞ்சனை மொழியைக் கேட்ட அகத்தியர் உள்ளத்தில் கருணை மிகுந்தது; அவனுடைய வேண்டுகோளுக்கு இசைந்தார். முனிவர் முக்காலமும் உணருவார் என்பது உண்மையே. எனினும் அந்தச் சக்தியை எப்போதும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. வில்வலனிடம் அவர் அவநம்பிக்கை கொள்ள இடமேயில்லாததால் தமது ஞான திருஷ்டியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.



முனிவர் உண்ண இணங்கியதில் வில்வலன் மகிழ்ந்தான். தடாகத்தில் நீராடி மடப்பள்ளியை அடைந்து சுத்தி செய்தான். மிகவும் தூய்மையாகவும், சுவையாகவும் அன்னங்களையும் கறியமுதுகளையும் சமைத்தான். ஆட்டுக்கடாவாய் நின்ற வாதாபியை இழுத்து வந்து கொடுவாளினால் அறுத்துக் கறி சமைத்தான். பின்னர், பழங்களையும் தேன், நெய், பால் இவற்றையும் பூசைக்குரிய மற்ற திரவியங்களையும் சேர்த்து வைத்து அகத்திய முனிவரை அடைந்தான். அவரை வணங்கினான்.

"எம்பெருமானே! காலந் தாழ்ந்ததற்கு மன்னிக்க வேண்டும். உணவுக்கு எழுந்தருள்க" என்று வேண்டினான். அகத்தியர் உணவு கொள்வதற்குச் சென்றார். அவரை வில்வலன் ஆசனத்தில் எழுந்தருளச் செய்து இலையிட்டு ஆட்டுக்கறியையும் பிற உணவுகளையும் படைத்தான். வஞ்சனையை உணராத அகத்திய முனிவர், வெத்தைப் பேணித் திருவமுது செய்தார்; உண்டு முடித்தபின் ஆசிரமத்தின் மற்றோரிடத்தில் வெற்றிலையுடன் சிரம பரிகாரம் செய்துகொண்டிருந்தார்.

பிரம தேவர் தமக்குத் தந்த வரத்தை நினைந்து வில்வலன் அகத்திய முனிவரைக் கொல்லக் கருதி, "வாதாபி! விரைந்து வருவாய்!" என்று அழைத்தான். உடனே வாதாபி அகத்திய முனிவரின் வயிற்றினுள்ளே ஆட்டுக்கடாவாய் எழுந்து நின்று, "அண்ணா! இம் முனிவனின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளி வருவேன்" என்று ஆர்த்தான்.

அசுரர் செய்த மாயத்தை மாமுனிவர் உணராது போவாரா? மாயத்தை மாயத்தாலே மாய்க்க நினைந்தார். எளிதில் பெரிய காரியங்களைச் சாதித்து முடித்த சாதுவல்லவா அவர்? வெகு சுலபமாக வயிற்றைத்தடவி, "வாதாபி, ஜீர்ணோபவ" — "வாதாபி, ஜீரணமாவாய்" என்றார். அவ்வளவே! வாதாபி அகத்திய முனிவரின் வயிற்றுக்குள் வெந்து குழைந்து ஜீரணமாகி விட்டான்.

தம்பி வாதாபி வெளிவரமாட்டாது முனிவரின் உதிரத்திலேயே தம்பி இறந்ததைக்கண்ட வில்வலன் வெகுண்டு அசுர வடிவங்கொண்டான். ஒரு தண்டாயுதத்தை ஏந்தி அகத்திய முனிவரைக் கொல்ல வந்தான். அகத்தியர் தமது கரத்திலிருந்த ஒரு தருப்பையைச் செப்படைக்கலமாக்கி விடுத்

தார். அதனும் வில்வலனும் மாண்டான். பூமிதேவியை இரு கொடியோரின் கொடுமையிலிருந்து நீக்கி அருள் புரிந்து விட்டார் அகத்தியப் பெருமான்.

அதன்பின் முனிவர் மீண்டும் தமது வழியில் புறப்பட்டார். கொங்கு நாட்டை நோக்கிச் சென்றார். அவ்வாறு செல்லும்போது, இறந்த வில்வலனும் வாதாபியும் கரிய உடம்பும், அழலும் கண்களும் உடையவராய் முனிவரை அணுகி அகன்றும் சூழ்ந்தும் ஆரவாரித்தார்கள். அதனைக் கண்ட முனிவர், 'நாம் கொன்ற வில்வலனும் வாதாபியும் துருவாச முனிவரின் புத்திரர்களாதலால், அவர்களைக் கொன்ற பாவம் பிரமஹத்தியாய் நம்மை இவ்வுருவங்களில் தொடர்ந்து வருகிறது. இப்பாவம் நீங்கும்பொருட்டு இங்கு சிவபெருமானை வழிபாடு செய்வோம்' என்று கருதி அங்கே ஒருபுறத்தில் சிவலிங்கம் அமைத்துப் பல நாட்கள் மெய்யன்போடு வழிபாடு செய்து கொண்டிருந்தார். அகத்தியரைத் தொடர்ந்த பிரமஹத்தித் தோஷம் நீங்கியது.

அகத்தியரின் செயல்களை உணர்ந்தார் நாரதப் பிரம்மம். வருங்காலத்துக்கு எப்படி வழி வகுப்பது என்பதைத் தெளிந்தார். சூரபன்மனுக்குப் பயந்து மூங்கில் வடிவாய்ச் சீகாழியில் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருக்கும் இந்திரனிடம் சென்றார். நாரதரைக் கண்ட இந்திரன் பணிந்து வணங்கினான்.

நாரதர் அவனை வாழ்த்தி, "சுகமாய் இருக்கின்றாயா?" என்று ஏதுமறியாதவர் போல் வினவினார். இந்திரன் தொழுத கையினனாய், "சுவாமி! அடியேன் இது வரை சுகமாய்த்தான் இருந்தேன். இப்பொழுதுதான் அடியேன் செய்யும் சிவபூசைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. நான் சிவபூசைக்கு என்று பயிரிட்ட நந்தவனம் நீரின்றி வாடுகின்றது. எளியோனாகிய எம்பெருமானை எளிமையாகப் பூசிப்பதற்கும் கூடக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறையால் நான் தேவராஜ பதவி போனதைவிட அதிகமாக வருந்துகிறேன்" என்று கூறினான்.

"தேவராஜனே! சிவபூசைக்கு வந்த இடையூறு இறைவனருளால் இனிதே நீங்கும். சிவாநுக்கிரகத்தால் பழையபடியே உனக்குப் பொன்னுலக அரசாட்சியும் வரப் போகிறது. அகத்திய முனிவர் கொங்கு நாட்டில் சிவபூசை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்திலுள்ள காவிரியாற்றை இங்கே வருமாறு செய்தால், உன் மனக் குறை தீர்ந்து மகாதேவனை அபிஷேகிக்க நீர் கிடைக்கும்" என்று நாரதர் கூறினார்.

"சுவாமி! அகத்திய முனிவரின் கமண்டலத்திலுள்ள காவிரியாற்றை இங்கே வரச் செய்வது எப்படி?" என்று நாரதரிடம் இந்திரன் ஆர்வமாகக் கேட்டான்.

"அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டால் காவிரி தன்னால் வந்துவிடும்" என்றார் நாரதர்.

"கமண்டலத்தைக் கவிழ்ப்பது எளிய காரியம்தான். ஆனால் கமண்டலத்துக்குரியவர் மகா தபஸ்வியாகிய அகத்திய முனிவரல்லவா? அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்க்க வல்லவர் யாவர்? அக்கினிமலையை அணுகும் தொகவும் உளதோ?" என்று இந்திரன் கேட்டான்.

"இந்திரா! உனக்கு ஏன் இந்த ஐயம்? வினைகளைத் தீர்க்கத்தான் விக்நேசுவரப் பெருமான் இருக்கிறாரே! விநாயகக் கடவுளை மெய்யன்போடு வழிபாடு செய். அல்லல் களைந்தே அருள் வழி காட்டும் ஆனைமுகன், காவிரி இங்கு பரவக் கருணை புரிவார்" என்று நாரதர் நவின்றார்.

வந்திப்பாரது வினைகளை யெல்லாம் தீர்க்கவல்ல விநாயகப் பெருமானை, ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமானை அருச்சனை புரிந்து துதித்து வழிபட்டான் இந்திரன்.

சொற்பதம் கடந்த தூய மெய்ஞான அற்புதம் நின்ற கற்பகக் களிறாய் பல கோடி கணங்கள் சூழ விநாயகக் கடவுள் இந்திரனுக்குக் காட்சியளித்தார். அவரை இந்திரன் பன்முறை பணிந்து துதித்தான்.

"என்ன வரம் வேண்டும்?" என்று மனம் குளிர்ந்து கேட்டார் வேண்டிய வேண்டியாங்கு வழங்கும் விநாயகப் பெருமான்.

ஈசனைத் திருமுழுக்காட்டத் தீர்த்தமில்லாத குறையைத் தேவராஜன் தெரிவித்தான்.

இது இந்திரனுக்கு வரமளிப்பதோடு, தனக்குச் செய்யும் தொண்டுமாயிற்றே என விக்நேசுவரர் மகிழ்ச்சியுற்றார். "இந்திரனே! தீர்த்தம்தானே வேண்டும்? கங்கை நதியை இங்கே அழைத்து வரட்டுமா? அல்லது கடல்களையெல்லாம் கொண்டு வர வேண்டுமா?" என்று கேட்டார் கணாதிபதி.

"சுவாமி! அவையெல்லாம் வேண்டாம். அகத்திய முனிவர் கொங்கு நாட்டில் சிவபூஜை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்திலுள்ள காவிரியைத் தேவரீர் இங்கு வருமாறு செய்தால் நந்தவனம் செழிக்

ளும்'' என்று இந்திரன் வேண்டிக் கொண்டான்.

''அவ்வண்ணமே செய்வோம். கவலைப்படாதே!'' என்று விநாயகக் கடவுள் அருள் புரிந்துவிட்டு விரைந்து கொங்கு நாடு சென்றார். அடியார் குறையை விரைந்து விரைந்து நீக்கும் வள்ளலன்றோ விநாயகர்?

கொங்கு நாடு சென்ற விநாயகப் பெருமான் தமது துப்பார் பெருந் திரு மேனியின் பவள ஒளியையும், பரந்து விரிந்த பெருமையையும் அருட்பாங்கால் மாற்றிக் கொண்டு காக வடிவம் எடுத்தார்: அகத்திய முனிவரின் கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்திய முனிவர் கையை உயர்த்தி அதனை ஓட்டினார். காக வடிவமாயிருந்த கணபதி உடனே கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுச் சிறகடித்துக் கிளம்பினார். கமண்டலத்தினின்று பெருகிய காவிரியாற்றை நோக்கி, ''நீ பூமியிற் செல்லக் கடவாய்'' என்று பணித்தருளினார்.

தேவி காவிரி தனது யாத்திரையைத் தொடங்கினாள். விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி ஆரவாரித்துக் காவிரி நதி விரைந்து பூமியில் பாய்ந்தது.

கமண்டலம் கவிழ்ந்ததைக் கண்ட அகத்தியர் சீறிக் காக்கையைப் பார்த்தார். சீற்றத்தில் ஞானதிருஷ்டியும் மறைந்தது. விநாயகர் காக வடிவம் நீக்கி அந்தண பிரமசாரி வடிவம் கொண்டு தேஜோமயமாக நின்றார் — இப்போதேனும் முனிவர் தம்மைப் புரிந்து கொள்வாரா என்று பரீட்சிப்பது போல.

அகத்திய முனிவரின் சினம் அந்தணச் சிறுவனின் அழகில் லயிக்குமா? தேவ தேவனை அபிஷேகிப்பதற்காகத் தேவ தேவனிடமிருந்தே அவர் பெற்று வந்த தீர்த்தம் போய் விட்டதெனில் மனம் தாளுமா? புரம் எரித்த புரிசடைக் கடவுள் போலவே வெகுண்டார் அகத்தியர். ''கமண்டலத்தைக் கவிழ்த்த இவன் தேவனோ? அசுரனோ? வேறு எவனோ? அதனைக் கொண்ட இவன் வலிமை விரைந்து அழிப்பேன்'' என்று கருதி அந்தணச் சிறுவனைப் பின் தொடர்ந்து ஓடினார். முனிவர் ஓட முடியாமல் ஓடித் துரத்திக் கொண்டு வருவதைக் கண்ட விஷமக்கார விநாயகர் பயந்து ஓடுவது போல் தாமும் விரைந்து ஓடினார். அகத்திய முனிவர் அந்தணச் சிறுவனது சென்னியிற் குட்டுவதற்குத் தம் இரு கரங்களையும் குவித்துக் குவித்துத் துரத்தினார். அந்தணச் சிறுவனைப் பிடிக்க முயன்ற அகத்தியர் தமது முயற்சி வெற்றி பெறாமல் மிகவும் தளர்ந்தார்; ''இவன் பெரும் மாயனாக இருக்கிறானே; என் செய்வது?'' என்று வருந்தினார்.

ஒற்றை மருப்புடைய வெற்றிக் கணபதி திருவுளம் இரங்கினார். வேதியக் கிழவனாரை இனியும் வேதனைப் படுத்தலாகாது எனக் கனிவு கொண்

இப்படி ஒரு ஜோக்



''ரொம்ப வருத்தமாயிருக்குது, ஸார்! எனக்குக் கொடுத்தாப் போல நீங்க எல்லாருக்கும் ஈ விழுந்த காப்பிக்குப் பதிலா வேறே காப்பி கொடுத்துக்கிட்டிருந்தா உங்களுக்கில்லே நஷ்டமாகும்?''

''நஷ்டத்தைப் பார்த்தா முடியுங்களா? வாடிக்கையாளர் திருப்திதானே என்னுடைய திருப்தி!''

''சரி, நான் வரேன்!''

......

''டே, பையா!''

''என்னங்க?''

''அந்த ஈ விழுந்த காப்பியை என்னடா செஞ்சே!''

''அப்போவே நான் அதை எடுத்துப் போ விட்டு வேறொருத்தருக்குக் கொண்டு போ கொடுத்துட்டேனே!''

''அப்படிச் சொல்லு! வாடிக்கையாளர் மட்டும் திருப்தி யடைந்தால் போதுமா? நா திருப்தியடையணும் பாரு!''

தட்டிக் கொடுத்தவர்: ஓட்டல்காரர்.
முதுகைக் காட்டியவர்: சர்வர்.
தகவல்: ஒரு வாடிக்கையாளர்.

டார். ஞான ஸ்வரூபமாய் விளங்கும் தமது மங்களமய திருமேனியை அகத்தியருக்குக் காட்டித் தரிசனம் அருளினார்.

அகத்தியர் பரவசப் புல்லரிப்பு கொண்டார். அடுத்த கணமே தாம் செய்த அபசாரத்துக்காக நடு நடுங்கினார். "ஆ! நான் கெட்டேன். ஐந்து கரத்து எந்தையா இங்கு என்னிடம் வந்து எழுந்தருளினீர்? அறியாமையினால் நான் அடிக்கத் துரத்தி விட்டேனே!" என்று கலங்கி ஏங்கினார். விநாயகப் பெருமானைக் குட்ட ஓங்கிய கரங்களால் தமது சென்னியில் இடி விழுந்தாற்போலக் குட்டிக் கொண்டார்.

கருணையே உருவான கணபதி அவரது கரங்களைப் பற்றி நிறுத்தி, "அஞ்சாதே!" என்று அபய வாக்கு அளித்தார். "தேவேந்திரன் சிவபூஜைக்கு என்று நிலவுலகில் வைத்த நந்தவனம் நீரின்றிக் கரிந்து போய் விட்டது. அதனால் நீர் பெற விரும்பி நம்மைத் துதித்து வழிபட்டனன். அவன் வேண்டுகோளுக்கு இணங்கி நாம் காக வடிவாய் வந்து உன் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி நதியை நிலவுலகத்தில் பாயும்படி கட்டளையிட்டோம். தவத்திற் சிறந்த நீ நம் தந்தையாகிய சிவபெருமானிடத்து ஆராத அன்பு கொண்டவன்; ஆகவால் நமக்கும் நீ அன்பன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ, கேள்" என்றார் விநாயகர்.

"ஞானமே உருவான யானைமுகத் தெய்வமே! அடியேன் தேவரீரிடத்திலும் சிவபெருமானிடத்திலும் குன்றாத அன்புடையவனாய் என்றும் இருக்க வரம் தர வேண்டும். இப்பொழுது அடியேன் செய்தது போல் தேவரீரது சந்நிதியில் சிரசில் குட்டிக் கொண்டு வழிபடுவோருக்கு அறிவு பெருக வேண்டும்; அவர்களது குறையை நீக்கி நல்லருள் பாலிக்க வேண்டும்" என்று அகத்திய முனிவர் வேண்டிக் கொண்டார். ஐங்கரத்தண்ணல் அவ்வண்ணமே அருள் புரிந்தார்.

சிவக்கொழுந்தை எண்ணிச் சிரத்தில் குட்டிக் கொண்டால் அங்கு ஸஹஸ்ரார கமலத்தில் பெருகும் அமுதம் துளும்பி நாடிகள் வழியே நம் தேகம் முழுதும் பாய்ந்து தெய்வீக உணர்வைத் தரும்.

சிரசில் குட்டிக் கொண்டு வழிபடுவது போல, காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடும் வழிபாடும் கணபதிக்கே உரியது. 'தோர்பி: கர்ணம்' என்பது கையால் காதைப் பிடித்துக்கொள்வதைக் குறிக்கும் வடமொழிச் சொல்.

கஜமுகாசுரன் மிகுந்த வலிமையுடையவன். சிவபெருமானை வேண்டிப் பெருந் தவம் புரிந்தவன். சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்தபோது "விலங்குகளாலும், பூதங்களாலும், மானுடர்களாலும், கணையாலும், புனலாலும், பிறவற்றாலும் மரணமில்லாமல் இருக்க வேண்டும்" என்று வரம் பெற்றான்.

வரத்தின் பலத்தினால் செருக்குற்றான். மாலயனாதி வானவர்கள் யாவரையும் அழைத்துத் தண்டித்து, காலையும் மாலையும் அவர்கள் தன் முன் இரு செவிகளையும் பிடித்துக்கொண்டு ஆயிரம் தோப்புக்கரணம் போட வேண்டுமெனக் கட்டளையிட்டான்.

கஜமுகனால் துன்புற்ற அமரர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். சிவபெருமான் கஜமுகனைச் சங்கரிக்குமாறு கணபதிக்குக் கட்டளையிட்டார். விநாயகர் பரிவாரங்களுடன் சென்று கஜமுகனுடைய சேனைகளை யெல்லாம் வென்றார். எந்த ஆயுதத்தாலும் கஜமுகன் இறவாமலிருப்பதைக் கண்ட கணபதி தம்முடைய ஒரு கொம்பை முறித்து எய்தினார். யானையின் பெருமையும் அழகுமே அதன் தந்தத்தில்தான் உள்ளன. எனினும் உலகுக்கு உபகாரம் புரிவதற்காகப் பிள்ளையாரப்பன் தயங்காது தந்தத்தைத் தியாகம் செய்தார். அந்தக் கொம்பு கஜமுகனைப் பிரயாசையின்றியே பிளந்தது. கஜமுகன் மூஷிக வடிவம் கொண்டு விநாயகரை எதிர்த்தான்.

கணபதி அவன் மீது கருணை பொழிந்து அவனையே வாகனமாக்கிக் கொண்டருளினார்.

மாலயனாதி வானவர்கள் துன்பம் நீங்கி இன்பமடைந்து விநாயகரைத் நினைய வணங்கி நின்றார்கள்.

"எங்கள் இடர்தீர்த்த எந்தையே! பன்னெடுங் காலமாக நாங்கள் கஜமுகன் முன்னிலையில் தோப்புக்கரணம் போட்டோம். தாங்கள் அவனை அழித்து எங்களுக்கு இன்னருள் புரிந்தீர்கள். இனி தங்கள் திருமுன் நாங்கள் தோப்புக் கரணம் போடுவோம். இது போல் தங்கள் திருமுன் தோப்புக்கரணம் போடுபவர் யாவராயினும் அவர்கள் இடரைக் களைந்து ஆண்டருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

"உங்கள் விருப்பம் போலவே ஆகட்டும்" என்று மனம் நிறைந்து கூறினார். நிறையின் சின்னமாகவே பேழை வயிற்றுடன் இலங்கும் பெருமான். "அசுரர் முன் செய்தாற் போல் ஆயிரம் தோப்புக்கரணம் போட வேண்டாம். மூன்று முறை போட்டாலே திருப்தி அடைவோம்" என்று வரமளித்தார் கரிமுக வரதர்.

(தொடரும்)

சித்திரக் களஞ்சியம்



கடலைக் குடித்த அகஸ்தியர் நான் எனக்
கரை டிக்கட் சந்திரன் போவதற்கு
அடாவடி ராஜாஜி அன்று போகும் முந்தி
அங்கே போய்ப் புகுத்திட வேணும் இந்தி

கறுப்பு இருக்குது சந்திரனில் - அதைக்
கைப்பற்ற வேண்டி நான் போகப் போறேன்
திருப்பித் தராத கடன் கிடைத்தால் - நம்ப
திட்டங்களுக்காக வாங்கிவாறேன்





இந்திய சர்க்காரைத் தாக்கியும் : எனக்கு
மந்திரிப் பதவி இல்லையெனில்
சந்திர லோகமே போயிடுவேன்
இந்திய தூதராய் ஆயிடுவேன்!

அடியேன் திருமணம் ஆனபின்பு - நான்
அனி மூனுக்கே போகவில்லே
முடிந்தால் நானும் மணியம்மையும் - அந்த
மூ னுக்குப் போய் வர உத்தேசம்





மந்திரி சபை அமைத்திடவே - எந்த
வாய்ப்புக்களும் இனி இங்கே இல்லே
சந்திர மண்டலம் போயிடுவோம் அங்கே
சாத்திரி நந்தாவின் தொல்லே இல்லே

— வி. சீதாராமன்

PK




✲

"டேய், மணி! உன் பக்கத்தில் தூங்கிண்டிருப்பவனை எழுப்புடா!"

"சார்! மன்னிக்கணும். நீங்கதானே தூங்கப் பண்ணினேள். நீங்களே எழுப்புங்கள்..."

✲



✲

மூன்றும் கட்டாசத்திரும் பயர்!

இந்தக் கதையினுடைய அப்பாவாயிருக்குமென்று நினைக்கிறேன்!

✲



"நம்ப ஆபீஸிலே குமாஸ்தாக்களெல்லாம் லஞ்சம் வாங்குறவங்களாமே? லஞ்சம் எப்படி உள்ளே நுழைஞ்சது?"


"எப்படி நுழைஞ்சுதுன்னு தெரியல்லியே! ஒருவேளை அது கூட லஞ்சம் கொடுத்துட்டு உள்ளே வந்திருக்குமோ?"

கடிகை: நீ சமைத்துப் போடுவது எதுவுமே என் கணவருக்கும் பிடிக்கவில்லை!

சமையல்காரி: அப்படி யாரும் அவரை விவாகரத்து பண்ணிட்டு, என் சமையலை விரும்பும் வேறொருவரைக் கல்யாணம் பண்ணிக்குங்கோ!



லொஜ்ஜி. பஜ்ஜி. ஸஜ்ஜி:



அதிசயம் ஆனால் உண்மை



ஒரு விநோதமான தொழிற் பயிற்சிக் கல்லூரி ... ஜம்மு காஷ்மீர் ராஜ்யத்திலுள்ள நகிரா நகரில் உள்ளது. இந்தப் பள்ளியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சம்பந்தமே கிடையாது!

பிட்டர் பயிற்சி அளிப்பதாகச் சொல்லப்படும் இந்தப் பள்ளியில் அந்தத் தொழில் போதகர் இல்லை. ஆனாலும் இரண்டு மாணவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பம் போட்டார்கள். பள்ளியில் சேர்க்கப்பட்டு, அவர்கள் பயிற்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டு விட்டார்கள்! எலெக்ட்ரீஷியன்கள் பயிற்சிக்கும் ஷீட்-உலோகத் தொழில் பயிற்சிக்கும் ஆசிரியர்கள் உள்ளனர்; ஆனால் பயிற்சியாளர்கள்தான் இல்லை. கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்கிற கதைதான்!



இது மாதிரியே இந்தப் பள்ளியில் நூற்பு கற்றுக் கொடுப்பதாக அறிவித்தும் பேருக்கு அந்த நூற்புக் கற்றுக் கொடுக்க ஒரு நூற்பு யந்திரம் கூடக் கிடையாது. இருந்தாலும் நூற்புத் தொழில் பயிலுபவர்கள் இதனால் எந்த வித இடைஞ்சலும் அடையவில்லை. அவர்களுக்குத்தான் பயிற்சி இல்லாமலே பட்டம் கிடைத்து விடுகிறதே!



இந்தப் பள்ளியில் ஆசிரியர்கள் சம்பளம் பெற்று, தங்கள் பொழுதைக் காதல் கதைகள் படிப்பதிலும் தேநீர் அருந்துவதிலும் செலவிட்டு வருகிறார்கள்.

இத்தொழிற் பயிற்சிப் பள்ளி ஜம்மு காஷ்மீர் ராஜ்யத்தில் 1962ல் பிப்ரவரியில் தொடங்கப்பட்டு இதுவரை பதினைந்து பேர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் சர்க்கார் செலவில் 'பயிற்சி' அளித்ததாகச் சொல்லப்படுகிறது!



ஆதாரம்: 'லிங்க்'



பிகே






அவள் எங்கே?
சித்திரம்:
ரமணி.
2



தொடரும்-

உங்கள் கண்ணான கண்மணிக்கு



இலவசம்!

இங்கே குறிப்பிட்டுள்ள மூன்று தயாரிப்புகளில் ஏதாவது இரண்டை பணம் கொடுத்து வாங்கி அதற்கான ரசீதை இதோடுள்ள கூப்பனுடன் இணைத்து ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் ஆஃப் இந்தியா லிமிடெட் 30, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய் 26, என்ற விலாசத்துக்கு அனுப்பவும். உங்களுக்கு உபயோகமுள்ள வெகுமதி இலவசமாகக் கிடைக்கும்! இந்த இலவச வெகுமதி சலுகை மே 15, 1965 வரையில் தான் உண்டு.


ஜான்ஸன்ஸ் வெகுமதி சலுகை


பெயர்: ஸ்ரீ /ஸ்ரீமதி ______________________


விலாசம்: ______________________


____

____








பாப்பா மலர்
1. ஒரு நாள் சாயங்காலம் மம்பி தன் தங்கை மிம்மியுடன் சைக்கிள் சவாரிக்குக் கிளம்பினான்....
2. பாவம்! பாதி தூரம் போனவுடன் சைக்கிள் செயின் கழன்று அவர்களைத் தடுமாற வைத்தது.
3. "ஏன்! தடுமாறுகிறீர்? நான் செயினை மாட்டித் தரட்டுமா?" என்றார் அங்கு வந்த நரிப்பெரியார்.
4. "நீங்கள் எங்களுக்கு உபகாரம் பண்ணுவதில் எங்களுக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை!" என்றான் மம்பி.
5. "உம்.....மாட்டியாச்சு! என்ன மம்பி! சைக்கிள் விடப் பழகிக் கொண்டாய்! செயின் மாட்டத் தெரிய வேண்டாமோ?" என்றார் நரியார்.
6. "தெரியும், மாமா! எங்கள் கைகள் அழுக்காகி விடுமே என்று தான் சும்மா இருந்தோம்!" என்றான் மிம்மி!



ஸல்வாரும் கமீஸும் வட இந்திய பாணி ஆடைகள்தான் என்றாலும் தமிழகத்திலும் சேரலைப் போன்ற குழந்தைகள் இம்மாதிரியான உடைகளை அணிந்துகொண்டு பள்ளிக் கூடத்துக்கு நடந்தால் கவர்ச்சிகரமாகத்தானிருக்கும்.

பலவிதப் பூக்களும் டிசைன்களும் நிறைந்த கமீஸ் 'பாம்பே டையிங்' துணியில் தயாரானது. பல்வேறு வர்ணங்களிலும் கிடைப்பதால் நமக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுக்கலாம். அதே துணியில் துப்பட்டாவும் அமைந்தால் நன்றாக இருக்கும். துப்பட்டாவின் நுனியில் பட்டு நூலில் குஞ்சம் வைத்துத் தைத்தால் மெருகு கூடும்.

ஸல்வார் வெள்ளை பாம்பே டையிங் துணியில் உருவானது. கால்களின் ஓரங்களில் தையல் மிஷினால் திறமையாகச் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பெற்றிருப்பது.

நீண்ட காதணியும் குதிரைவால் கொண்டையும் பொருத்தமாகவும் எடுப்பாகவும் இருக்கும்.

உடை உதவியவர்கள்:
பேபீஸ் கார்னர், மூர்மார்க்கெட்.
படம்: **சுந்தரமீரான்**



இன்றைய நாகரிகம்



வாழ்க்கைப் படகு

வாழ்க்கைப் படகில் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ராஜனும் ஏழை நாடகக்காரி சீதாவும் ஒன்றுபடுகின்றனர். ஆனால் சந்தேகம் என்ற கீறல் தோன்றி இவர்கள் வாழ்க்கைப் படகைக் குலைத்தால்தானே கதை முன்னேறும்? கயவர்களின் சூழ்ச்சியால் ராஜனும், சீதாவும் பிரிவதும், பிரிந்த சீதா ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்ததால், நாடக டைரக்டர் கோபால் வீட்டில் ஓர் இரவு கழிப்பதும், டைரக்டர் கோபால் மீது கொலைக் குற்றம் சாட்டப்படுவதும், சீதா கோபாலைக் காப்பாற்ற நீதிமன்றத்தில் சாட்சியம் கூறுவதும் ராஜன்—சீதா வாழ்க்கைப் படகில் பெரும் பிளவை உண்டு பண்ணிவிடுகின்றன; ஆனால் வாழ்க்கைப் படகுப் படத்தை ஓட்ட இச் சம்பவங்கள் பயன்படுகின்றன.

ராஜன்—சீதா வாழ்க்கைப் படகு கடலில் பல திசைகளில் சென்று, பல கொந்தளிப்புகளுக்கு உள்ளாகிறது. ராஜனுக்கு மறுமணம் செய்யும் நிலைக்கு வந்துவிட, கதையைத் திசைமாற்றிக் காதலர்களைச் சேர்த்து வைக்கிறார் கான்சாஹேப். ராஜனின் தந்தையாக ரங்காராவும், அவர் நண்பர் கான்சாகேபாக டி. எஸ். பாலையாவும் வந்து இயற்கையாக நடிக்கிறார்கள்.



ஜெமினி கணேசன் ராஜனாகவும் தேவிகா சீதாவாகவும் வந்து வாழ்க்கைப் படகைச் செலுத்துகிறார்கள். படகின் பல திருப்பங்களுக்கேற்ப இவர்கள் அழவும், சிரிக்கவும் செய்கிறார்கள். காதலில் தோல்வியடைந்த டைரக்டர் கோபாலாக வரும் முத்துராமனுக்குச் சரியான விளக்கெண்ணெய்ப் பாத்திரம்.

பணம் பதுக்கும் 'மாமனார்' பல இடங்களில் தலைகாட்ட, மாப்பிள்ளை நாகேஷ் அவர் பணத்தைத் தேட்டையிடும் ஹாஸ்யக் காட்சிகள் 'பழைய சரக்கு, புதிய பாட்டில்' கதையாகி விட்டன.

வாழ்க்கைப் படகு படத்தில் 'ஹனி' என்ற நாயின் அற்புத சாகசங்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.



பணம் படைத்தவன்

பணம் மட்டும் படைத்துவிட்டால் போதாது; பலம் படைத்தவனாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கட்டிய மனைவியையும், பெற்ற தந்தையையும், அருமைச் செல்வனையும் காப்பாற்றப் போக்கிரிகளோடு போர் புரிய முடியுமா? பணமும் பலமும் படைத்தவன் குணமும் படைத்தவனாக இருந்ததனால்தான் ஏழைப் பெண்ணைக் காதலித்தும் அவளைக் கைவிட்டு விட்டு, தம்பியை வாழ வைக்கப் பணக்காரப் பெண்ணை மணக்கிறான். வில்லனின் துப்பாக்கிக்குப் பணக்காரப் பெண் இரையாக, ஏழைப் பெண்ணுக்கு மண வாழ்வு கிட்டுகிறது.



சௌகார் ஜானகியின் நைட் கிளப், மேல் நாட்டு நடனம் 'புதிய பறவை'யை நினைவூட்டுகிறதே! வழக்கம்போல் வீரம், சோகம், காதல், போர் எதிலும் குறைவின்றி விளங்குகிறார் எம்.ஜி.ஆர்.!

தாஜ்மஹாலின்மீது எம். ஜி. ஆரும், கே. ஆர். விஜயாவும் ஸலீமும், அனார்கலியுமாகத் தோன்றி நடனமாடும் காட்சி நன்கு படமாக்கப்பட்டிருக்கிறது.

நாகேஷின் தமாஷ்கள் சுமார். குழந்தையின் களங்கமற்ற புன்னகை படத்தின் குறைகளைப் போக்கி விடுகிறது. அது போதாதா?

ஒன்றே குலம் உழைப்பே தெய்வம்



விமானம் உயரப் பறந்து கொண்டிருந்தது. பலதரப்பட்ட பிரயாணிகள் அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பிரயாணியின் நிறம் சற்றுக் கறுப்பு. அவருக்குப் பக்கத்தில் ஒன்றரை அல்லது இரண்டு வயது நிரம்பிய ஒரு வெள்ளைக் குழந்தையும் அதன் தந்தையும் அமர்ந்திருந்தார்கள்.

அந்தக் குழந்தை பக்கத்துக் கறுப்பு நபரின் மணிக்கட்டில் பிஞ்சுக் கைவிரல்களை வைத்தது. சில விநாடிகள் கழித்து அது என்ன நினைத்துக் கொண்டதோ! விரல்களைச் சட்டென்று அகற்றி அவைகளை உற்றுக் கவனித்தது. பிறகு விரல்களைத் தன் ஆடையில் துடைத்துக் கொண்டு மீண்டும் பார்த்தது. மீண்டும் துணியில் துடைத்தது. பக்கத்துப் பிரயாணி, குழந்தை தன் இயற்கை நிறத்தை, ஏதோ ஒட்டிக் கொள்ளும் அருவருப்பான பொருள் என்று நினைப்பதைக் கண்டு கொண்டார். தான் அப்படிக் கறுப்பாக இருக்கிறோமா என்ற அச்சம்கூட அவர் உள்ளத்தில் எழுந்தது.

குழந்தையின் தந்தையும் அதன் செய்கையைக் கவனித்து விட்டார். சட்டென்று அந்தக் குழந்தை பார்க்கும்படி தம் கையை அந்தச் சக பிரயாணியின் மணிக்கட்டில் வைத்து எடுக்காமல் இருந்தார். பிறகு அந்தக் குழந்தையின் கையையும் தூக்கித் தம் கையின் பக்கத்தில் வைத்தார். அந்த மனிதரைத் தொட்டதால் தம் கையில் ஒன்றும் ஒட்டிக் கொள்ளவில்லை என்று விரித்துக் காண்பித்தார். குழந்தையின் முகத்தில் நிம்மதி







லோக சஞ்சாரம்

கலந்த ஒளி பரவியது. தந்தை சக பிரயாணிகளைப் பெருமிதத்துடன் பார்த்தார். விமானம் இந்த அற்புத நிகழ்ச்சியால் பாதிக்கப்படாமல் தன் வழியில் பறந்து கொண்டிருந்தது.

பேச்சு ஒலிக்காத இந்த மௌன நாடகம் ரஷ்ய நாட்டில் நடந்தது. பிரயாணிகளில் முதல்வர் பேராசிரியர் டாக்டர் மு. வ. பக்கத்திலிருந்தவர் ருஷ்ய வெள்ளையர். பரஸ்பரம் பாஷை தெரியாது. ஆனால் அந்த வெள்ளைத் தந்தை, தம் குழந்தைக்கு நிற வேற்றுமை எண்ணம் தோன்றக் கூடாது என்பதற்காகப் பிரத்யேக விளக்கம் கொடுத்தும் பேசாமலேயே அதைப் புரிய வைத்தார்.

ரஷ்யாவில் பல நிறத்தவர் வாழ்கிறார்கள். ஆனால் அங்கு நிறபேதம் நிகழ்வில்லை ! வெள்ளையர், பழுப்பு நிறத்தினர், இருக்கிறார்கள். ஆனால் நிறத்திலும் உயர்வு தாழ்வு என்ற பேச்சுக்கு இடமில்லை.

மு. வ. அவர்களின் உள்ளத்தில் இந்த விமானப் பிரயாண அனுபவம் இன்னும் பசுமையாக இருக்கிறது. அந்தக் குழந்தையைத் தம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தி இந்த நிகழ்ச்சியை விவரித்தபோது அவர் தொண்டை கரகரத்தது !

வாழ்க்கையின் அடிப்படையில் தோன்றும் இந்த ஒற்றுமை மனோபாவம் இதர அம்சங்களிலும் பெருமளவில் வியாபித்து நிற்கிறது.

''எதையுமே ரஷ்யர்களுக்குச் சிறிய அளவில் செய்யத் தோன்றாது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது ! அன்பு காட்டுவதிலிருந்து அணைக்கட்டுகள் எழுப்புவது வரையில் எல்லாம் பிரும்மாண்டம்தான்'' என்று ஆரம்பித்த மு. வ. சில ஆண்டு





களுக்கு முன்னும் தமக்குக் கிட்டிய ரஷ்ய நாட்டுப் பிரயாண அனுபவங்களை யெல்லாம் சுவைபட விவரித்தார்.

சர்வகலாசாலைகள் அமைப்பிலிருந்து, சமுத் திரம் போல் வரப்புகள் ஏதும் இல்லாமல் பரந்து கிடக்கும் வயல்கள் வரை ரஷ்யாவின் மிகமிகப் பெரிய அளவிலான முன்னேற்றங் களைக் காணலாம். ரஷ்ய சர்வகலாசாலைகள் தனி நகரங்களாகவே இயங்குகின்றன.

மாஸ்கோ பல்கலைக் கழகம் முப்பத்தி ரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. பதின்மூன்று கலைப் பிரிவுகள், முப்பத்துநான்குக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கூடங்கள், மூவாயிரத்தை எட்டும் பேராசிரியர்கள், ஆராய்ச்சி யாளர்கள் உள்ள ஒரு ஸ்தாபனம் என்றால் அதன் அளவை நாம் எளிதாக கணித்துக் கொள்ளலாம் அல்லவா?

உயர் கல்விக்கு அங்கு எத்தனை முக்கியத் துவம் கொடுக்கிறார்களோ, அத்தனை முக் கியத்துவம், உடற்பயிற்சிக்கும் விளையாட்டுக் களுக்கும் கொடுக்கிறார்கள். இந்த விளை யாட்டுகளும், வற்றல் தோற்றமாகவோ சோனியாகவோ இருக்கும் மாணவமாணவி களை அங்கு பார்க்க முடியாது! எல்லோருமே வஸ்தாதுகள் மாதிரிதான் இருக்கிறார்கள்.

கணவன் மனைவியராகச் சேர்ந்தே நிறையப் படிக்கிறார்கள். நீச்சல் குளங்கள், கால் பந்து மைதானங்கள் வசதி போல் சர்வ கலாசாலை கட்டடத்துக்குள் பிரசவ விடுதியும் இருக்கிறது.

''தேர்வுகளில் எத்தனை சதவிகிதம் மாணவ மாணவிகளை நிறுத்துகிறீர்கள்?'' என்ற கேள்வியை மாஸ்கோ சர்வகலாசாலை உபஅதிகாரியால் புரிந்து கொள்ளவே இல்லை. போதிய விளக்கம் கொடுத்த பிறகு அவர் வியப்புடன், 'நிறுத்துவதாவது? ஏன் நிறுத்துகிறோம்? முதல் ஆண்டிலேயே அந் தந்த மாணவ மாணவியின் ஊக்கத்தை யும் ஆர்வத்தையும் கவனித்து அவரவர்களுக் கான துறையில் பிரித்து விடுகிறோம். பிறகு அவர்கள் ஏன் தோல்வி அடைகிறார்கள்?'' என்று கூறினாராம்.

ஒரு நாள் மாலையில் மு. வ. ஒரு டாக்ஸி யைப் பயன்படுத்தி ஓர் இடத்துக்குப் போக வேண்டியிருந்தது. டாக்ஸி ஓட்டி கொஞ்சம் பதற்றமான நிலையில் இருந்தான். சீக்கிரமே கட்டணத்தை அவரிடம் வாங்கிக் கொண்டு புறப்படுவதில் ஆர்வம் காட்டினான். அவ னுடைய அவசரத்துக்கு அவனே விளக்கம் கொடுத்தான்.

மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் பொருளாதாரம் படிப்பவன் அந்த டாக்ஸி ஓட்டி. கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவனால் வகுப்புகளுக்குப் போக முடிய வில்லை. இன்றாவது போகத் துடித்தான். யுத்த காலத்தில் பிழைப்புக்காக டாக்ஸி ஓட்டுனரானவன் அவன். அவனுக்குப் பிடித்த துறை பொருளாதாரம். அதைப் படித்துப் பட்டம் பெற்றுப் பள்ளி ஆசிரியராகப் போவது அவன் வாழ்க்கை லட்சியம்.

ரஷ்யாவில் பதினெட்டுப் பிராந்தியப் பொது மொழிகள் நடைமுறையில் இருக் கின்றன. ஒவ்வொரு மொழியிலும் தனியே சர்வகலாசாலைப் படிப்பு வரையில் படித்து முடிக்கலாம். ஐரோப்பிய மொழிகளில் ஒன் றைப் படிக்க வேண்டும் என்ற நியதியும் உண்டு. பெரும்பாலோர் ஆங்கிலத்தை விரும்பி எடுத்துப் படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆங்கிலம் பேசும் விதம் பிறருக் குப் புரிவதில்லை. பிறர் பேசுவதையும் அவர்கள் எளிதில் புரிந்து கொள்வதில்லை. எழுத்தைப் புரிந்து கொள்கிறார்கள். சில காலத்துக்கு முன்பு வரை ஒரு புத்தகம்கூட இல்லாத சில பிராந்திய மொழிகள் இன்று பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு மொழியாகும் அந்தஸ்தைப் பெற்று விட்டிருக்கின்றன.

டாஷ்கெண்ட் பிரதேசத்தில், மு. வ. அங்கு இயங்கும் நீதிமன்றங்களைப் பார்க்க விரும்பினார். 'இப்போது விடுமுறைக் காலம்' என்று பதில் வந்தது. வருடத்தில் குறிப் பிட்ட காலங்களில் விடுமுறை வரும்போல் இருக்கிறது என்று நினைத்தார். அதற்கும் விளக்கம் கிடைத்தது. ''இப்போது பருத்திப் பயிர் அறுவடைக் காலம். அதனால் விடு முறை'' என்ற பதில் வந்தது.

சௌகரிய நிலையை ஒட்டி விடுமுறை களைப் பொருத்தாமல் விவசாயத் தேவை களை ஒட்டி அங்கு விடுமுறை ஏற்பாடு. சிறைச் சாலைகள் ஒன்றிரண்டைப் பார்க்கலாம் என்று அவர் நினைத்தபோதும் அதே பதில் தான் கிடைத்தது. ''சிறையில் இப்போது கைதிகள் யாருமே இருக்க மாட்டார்கள். பருத்தி அறுவடைக்கு அவர்கள் உதவி பயன்படுத்தப்படுகிறது'' என்ற விளக்கம் கிடைத்தது.

இன்று விவசாயத் துறையில் வேகமாக முன்னேறியிருப்பது ரஷ்யா. நவீன இயந்திர சாதனங்களை நிறைய நிறைய விவசாயத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். எல்லாம் சர்க்கா ருக்குச் சொந்தமானவை. வாழையைத் தவிர மற்ற எல்லாச் [illegible] பயிர் களையும் காய்கறிகளையும் உற்பத்தி செய் கிறார்கள். வெங்காயம், கத்திரி, வெண்டை கூட உற்பத்தியாகிறது. கிராமப் பகுதிகளில் எல்லாம் திராட்சைத் தோட்டங்கள்தான்

புளிப்புத் திராட்சை வேண்டும் என்று தேடி அலைந்தாலும் கிடைக்காது.

டாஷ்கண்ட், சமர்கண்ட் பகுதிகளில் ஏராளமான இஸ்லாமியர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பெயர்கள்தான் முஸ்லிமாக ஒலிக்கிறதே தவிர நடை உடை பாவனைகளில் மற்றவர்களுக்கும் இவர்களுக்கும் எந்த வகையான வித்தியாசமுமில்லை. இந்தப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் மு.வ. விருந்து ஒன்றுக்குச் சென்றார். மணம் கமழும் அரிசிச் சாதம் பரிமாறியிருந்தார்கள். பக்கத்தில், உபயோகத்துக்கு 'ஸ்பூன்'களும் வைத்திருந்தார்கள். "இந்தக் கரண்டிகளை உபயோகித்துத்தான் சாப்பிட வேண்டும் என்ற சம்பிரதாயம் ஏதும் இங்கு உண்டோ?" என்று கேட்டார்.

"இல்லை இல்லை! உங்களுக்கு அந்தப் பழக்கம் உண்டோ என்று நினைத்துத்தான் வைத்திருக்கிறோம்! நாங்கள் கைகளால் பிசைந்துதான் சாப்பிடுவோம்" என்றார்களாம் விருந்தளித்தவர்கள்.

பால் பண்ணைகளின் நிர்வாகம் இந்த நாட்டில் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. கன்றுகள் பிறந்தவுடன் அவை தாய்ப் பசுக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு விடுகின்றன. அப்புறம் கன்றுகளுக்கும் தாய்க்கும் சம்பந்தம் கிடையாது. 'கன்றின் குரல் கேட்டுக் கனிந்து வரும் பசும் போல்' என்ற பாட்டுக்கெல்லாம் அங்கு இடமில்லை. கன்றுகளுக்குத் தனியாகக் குழாய்கள் மூலம்தான் பால் புகட்டப்படுகின்றது!

ஆண் பெண் வித்தியாசமில்லாமல், உழைப்பு ஒன்றே லட்சியம் என்ற கொள்கை உடைய நாடு இது! பெண் கார் டிரைவர்களையும் ரயில் இஞ்சின் டிரைவர்களையும் இங்கேதான் காணலாம். ரோடு இஞ்சின் டிரைவர்களாகவும் பல பெண்மணிகள் பணியாற்றுகிறார்கள்.

பெண் தொழிலாளிகளுக்கும் பிரசவ விடுமுறை நாட்கள் குறைவுதான். அந்த விடுமுறை முடிந்தவுடன் அவர்கள் தங்கள் தொழிற்சாலைக்குத் திரும்பி விடுகிறார்கள். தொழிற்சாலைக்கும் பக்கத்திலேயே குழந்தைகள் பராமரிப்பு விடுதிகளும் இருக்கின்றன. காலையில் அங்கு குழந்தைகளை விட்டு விட்டு மாலையில் எடுத்து வந்துவிடலாம்.

தனியார் வீடுகள் என்று ரஷ்யாவில் கிடையாது. எல்லாமே அநேகமாகச் சர்க்கார் உடைமைதான். சம்பளத்தில் இரண்டு அல்லது இரண்டரை சதவிகிதத்துக்கு மேல் வீட்டு வாடகை வசூலிக்கப்படுவதில்லை!

தரத்தை அனுசரித்துச் சிலருக்கு மாத்திரம், சொந்தத்தில் ஜாகையும் மோட்டார் காரும் வைத்துக்கொள்ளச் சர்க்கார் அனுமதி வழங்குகிறது. அப்போதும் அவர்கள் ஒரே ஒரு ஜாகைக்கு மேல் சொந்தமாக வாங்க முடியாது!

கலைத் துறையைச் சேர்ந்தவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்களுக்கு இந்த வகையில் கொஞ்சம் சலுகை அதிகம். அவர்கள் அதிகப்படியாக, கிராமப் பகுதியிலோ கடற்கரையிலோ உபரியாக ஒரு சிறு வாசஸ்தலத்தைச் சொந்தத்தில் வைத்துக் கொள்ளலாம்.

எழுத்தாளர் சங்கங்களில் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்படுபவர்களுக்கு மதிப்பும் அந்தஸ்தும் இங்கு அதிகம். எழுத்தாளர்களுக்கும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது.

இளம் கவிஞர்கள் அடிக்கடி கவியரங்கம் நடத்தித் தங்கள் திறமையை வெளிக் காட்டுகிறார்கள். இந்தக் கவியரங்கங்களுக்கு ரசிகர்கள் கூட்டம் அதிக அளவிலேயே சேருகிறது. மிகுதியாகப் பெண்களே வருகிறார்கள்.

நாடகக் கலையில் ரஷ்யர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். ரஷ்ய மொழியில் தாகூர் நாடகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு மு. வ. அவர்களுக்குக் கிடைத்தது. சிறப்பாகவே நடித்துக் காட்டினார்கள்.

நகருக்கு அடியில் செல்லும் ரயில் வண்டிகளில் நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். ஆனாலும் ஓர் இடத்திலாவது தூசியோ, குப்பையோ கிடையாது. வெகு துப்புரவாகத் தெருக்களும் சந்துகளும் காட்சியளிக்கின்றன.

கடைகள், ஹோட்டல்கள், பத்திரிகைகள் எல்லாமே சர்க்கார் பொறுப்பில் இருக்கின்றன. ஹோட்டல்களில் குறிப்பிட்ட நேரத்தில்தான் ஆகாரங்கள் கிடைக்கும். குறிப்பிட்ட மணிக்குமுன் பசியெடுத்தால் அதற்குச் சர்க்கார் பொறுப்பில்லை!

நகரங்களிலோ, கிராமங்களிலோ எந்த விதமான ஆபாசச் சுவரொட்டிகளையோ அல்லது திரைப்பட விளம்பரங்களையோ காண முடியாது.

ரஷ்யாவில் 'வோட்கா' என்னும் பானம் பிரசித்தமாக இருந்தாலும் அதைப் பெண்கள் உபயோகிப்பது என்பது நாகரிகக் குறைவாகவே கருதப்படுகிறது.

கல்யாணங்கள் வெகு எளிய முறையில் நடத்தப்படுகின்றன. முதலில் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட நாளில் இரு சாட்சிகளுடன் போக வேண்டும். மூன்று அதிகாரிகள் மூன்று கேள்விகள் கேட்டுவிட்டுக் கையொப்பம் வாங்குகிறார்கள். கல்யாணம் முடிந்து விடுகிறது.

அதிக அளவில் மக்கள் உள்ளங்களில் ஆசையைத் தூண்டும் வாய்ப்புகள் ரஷ்யாவில் இல்லை. ஆகவே மக்கள் தங்கள் ஆசைகளை ஒரு வரையறை செய்து கொண்டு வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள்.

மறைந்த புலவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் பல மண்டபங்களை அவரவர்கள் பேரில் எழுப்பியிருக்கிறார்கள். டாவின்சி, புஷ்கின், செகாவ், டால்ஸ்டாய் இவர்களின் நினைவு மண்டபங்களை அற்புதமான முறையில் உருவாக்கியிருக்கிறார்கள்.

உழைப்பையே நம்பி வாழும் நாடு ரஷ்யா. ஒன்றே குலம்; உழைப்பே தெய்வம் என்ற லட்சியம் நிலவும் நாடு. எந்தப் பதவி வகிப்பவர்களாக இருந்தாலும் டாக்ஸியிலிருந்து இறங்கியதும் டாக்ஸி ஓட்டிகளுடன் கைகுலுக்கி விட்டுத்தான் விடைபெறுகிறார்கள். எந்தத் துறையில் தொழில் செய்தாலும் எல்லோரும் சமம்! எல்லோரும் தொழிலாளிகள்!

— திருமலை

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் பதினாறு

பெட்டியில் வந்தவள்!

சபேசனுக்கு மிகவும் தர்மசங்கடமாகி விட்டது. வெட்கமும் பயமுமாக அவளைப் பரபரப்புடன் பார்த்து விட்டுத் தலை குனிந்து கொண்டான்.

வேதா புறக்கடை வாசல் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டு அவசரமாக ஓடிப் போய்த் தனது சர்டிஃபிகேட் புத்தகத்தில் பத்திரமாக மடித்து வைத்திருந்த ஒற்றை ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கொண்டு வந்து, "இந்தாருங்கள், அன்றைக்கு நான் உங்களிடம் வாங்கிய பணம்! இதைத் திருப்பிக் கொடுக்க மறு நாளே மாநகராட்சி மன்றத்துக்கு வந்தேன். உங்களைப் பார்க்க முடியவில்லை. அடுத்த நாளும் காத்திருந்து பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினேன். நீங்கள் மறந்து விட்டீர்களோ என்னவோ, நான் மறக்கவில்லை" என்று உணர்ச்சிக் கலவையிட்ட மகிழ்ச்சிக் குரலில் கூறிக் கொண்டே அவனிடம் நீட்டினாள்.

சபேசன் அவளைப் பரிதாபமாகப் பார்த்துச் சிறு பிள்ளை போல் சிரித்தவாறு, "வேண்டாம்.. ." என்று குழறினான்.

அவள் அவனை வியப்புடன் நிமிர்ந்து நோக்கினாள்: "ஏன் வேண்டாம் என்கிறீர்கள் ?"

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தான் சபேசன்.

ஒருகணம் ஏதோ யோசித்த வேதா, மாடப் புரையிலிருந்த தன் பேனாவை எடுத்து வந்து கொடுத்து, "இதையாவது வாங்கிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு உபயோகமாயிருக்கும்" என்றாள் எழிலார்ந்த புன்முறுவலுடன்.

"இதன் விலை ஐந்து ரூபாய் என்று நீங்கள் சொன்னதாக ஞாபகம்! நான் கொடுத்தது ஒரு ரூபாய்தானே?" என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லிப் பின்னால் நகர்ந்தான் சபேசன்.

"ஓ..... உங்களுக்கு ஞாபகசக்தி குறைவு என்று நினைத்தேன்; அப்படி இல்லையெனக் கூறாமல் கூறி விட்டீர்களே!" என்று குறும்பாக நகைத்த வேதா அந்தப் பேனாவை அவனது சட்டை ஜேபியில் எட்டி நின்று போட்டுவிட்டுத் தன் கையிலிருந்த சர்டிஃபிகேட் புத்தகத்தைத் திறந்து காட்டி, "இதோ, பாருங்கள்! இதிலே என் வயது பதினேழு என்று குறிக்கப்பட்டிருக்கிறது. உங்களைவிட ஐந்தாறு வயது சிறியவளாயிருப்பேன், இல்லையா?" என்றாள் இனிய குரலில்.

அவளை 'நீங்கள்' என்று சொன்னதாலேயே இப்படி அவளது வயதுக்கு அத்தாட்சி காட்டித் தன்னைக் கேலி செய்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட அவன், தனது ஜேபியில் வந்து விழுந்த பேனாவைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே கூச்சத்துடன் நக[illegible]ன்.

"[illegible]டீ, வேதா! இன்று அதுக்குள்ளாற தூங்கிப்பிட்ட[illegible] ம[illegible] கொடிக்கவுறு மேலே ஒரு துண்டு கெடக்கும்; அண்ணாத்தக்கு உடம்பு துவட்டிக்கக் கொண்டாந்து கொடு!" என்று



கன்னியம்மாள் கூவியதைக் கேட்டுச் சட்டென்று திரும்பிய வேதா, ஓர் அழுக்குத் துவாலையை எடுத்துக் கொண்டு புறக்கடைக்கு விரைந்தாள்.

பிரமிப்புடன் நின்று கொண்டிருந்த சபேசனுக்கு அந்தப் பெண்ணின் பேச்சு, செயல் எல்லாமே புதுமையாயிருந்தன. கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க வந்தது பற்றி அவள் சொன்ன சில சொற்களின் பொருளும் அவனுக்கு விளங்கவில்லை.

'ஏமாற்றத்துடன் திரும்பினேன்' என்று சொன்னாளே, அதன் அர்த்தம் என்ன? வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க



முடியாமல் போவது ஓர் ஏமாற்றமாகுமா? ஏமாற்றமடைய இதில் என்ன இருக்கிறது? 'நீங்கள் மறந்து விட்டீர்களோ என்னவோ, நான் மறக்கவில்லை' என்று அவள் சொன்னதன் பொருளும் அவனுக்குப் புரியவில்லை. 'அவளை அவன் மறந்து விட்டான், அவள் அவனை மறக்கவில்லை' என்று அதற்கு அர்த்தமா? அல்லது 'கடன் கொடுத்தவன் திரும்பப் பெற மறந்து விட்டான், வாங்கியவள் திருப்பிக் கொடுக்க மறக்கவில்லை' என்று பொருளா?—

இவ்வளவுக்கே அவனால் சிந்திக்க முடிந்தது: இதற்குமேல் அந்தப் புதிர்ச் சொற்களில் புகுந்து நீந்த அவன் முயலவில்லை. அவனுக்குத் தூக்கம் கண்ணைக் கரித்தது.

''இன்னா, பிரதர்! ரொம்ப நேரம் உன்னைக் கண் முழிக்க வைச்சுட்டேனா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த நச்சி, ''வேதா! இன்னும் ஒரு பாய் கொண்டாந்து போடு!'' என்றான்.

'இல்லை' என்பதுபோல் தயங்கி நின்றாள் வேதா. அதைப் புரிந்து கொண்ட நச்சி, ''சரி; பரவாயில்லை. நீ இந்தப் பாயிலே படுத்துக்க, தம்பி! நான் இப்படித் தரையில் உருண்டுக்கிறேன்'' என்றவாறு உட்கார்ந்தான். சபேசனும் அவனருகில் அமர்ந்தான்.

வேதா ஓடிப் போய் அழுக்கேறிய தலையணை ஒன்றை எடுத்து அதன் மேல் கொஞ்சம் சுத்தமாயிருந்த ஒரு வெள்ளைத் துண்டைச் சுற்றிக் கொண்டு வந்து, ''இந்தா, அண்ணா! இதை அவருக்குக் கொடு!'' என்றாள்.

''நல்ல காரியம் பண்ணினே!'' என்று தலையாட்டிய நச்சி, சபேசனைப் பார்த்து, ''தம்பி, இது என் தங்கச்சி! அன்னைக்கு ஓட்டலிலே 'எனக்கு ஒரு கால் கட்டு இருக்கு'ன்னு சொன்னேன் இல்லையா? அது இதுதான்!'' என்றவன் மெல்லச் சிரித்தபடி, ''என்னைப் போலப் படிக்காதுன்னு நினைக்கப் போறே பிரதர்! தங்கச்சி ரொம்பப் படிச்சு இருக்குது; வாத்திச்சி வேலைகூடச் செய்யுமாம்! அந்த வேலைக்கு ரொம்பத்தானே படிக்கணும்!'' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சட்டென்று குறுக்கிட்ட வேதா, ''உன் நண்பருக்கு இதெல்லாம் தெரியும், அண்ணா!'' என்றாள் நாணம் குழைந்த குரலில்.

''தெரியுமா?...எப்படித் தெரியும்?'' என்று வியப்புடன் புருவங்களை உயர்த்தினான் நச்சி.

சபேசனின் மனம் பீதியால் 'திக், திக்'கென்று அடித்துக் கொண்டது.

ஆனால் வேதா சிறிதும் தயங்காமல், ''ஆமாம், அண்ணா! அன்றொரு நாள் ஆபீஸ் வேலைக்கு விண்ணப்பிக்க நகர மன்றத்துக்குப் போனேன் அல்லவா? அந்த விண்ணப்ப நமூனா வாங்க அப்போது என் கையில் பணம் இல்லை. இவர்தான் கடனாகக் கொடுத்து உதவினார். அதைத் திருப்பித் தரவே அன்றிரவு உன்னிடம் ஒரு ரூபாய் கேட்டுப் பெற்றேன்'' என்றாள்.

''அடங்க, இவடி! இதெல்லாம் எனக்குத் தெரியாதே!'' என்று ஆச்சரியத்தோடு சபேசனின் முகத்தைக் குனிந்து பார்த்த நச்சி, ''தம்பி! நீ ரொம்பப் பெரிய ஆளுதான் போலிருக்குது!'' என்றான் ஒரு கோணல் சிரிப்புடன்.

சபேசனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. திகைப்படைந்து குழம்பிய அவன், ''இல்லை, அண்ணே! அன்னைக்கு இந்த...இது...உன் தங்கை என்று எனக்குத் தெரியாது. செலான் எழுதிக் கொடுத்ததில் கிடைத்த ஒரு ரூபாய் என் கையில் இருந்தது. அந்தச் சமயம் உதவி கேட்டதால் உடனே கொடுத்து விட்டேன். அப்புறம்தான்.....'' என்று இழுத்தான்.

''அதுக்குத்தான் ஆச்சரியப்படறேன், தம்பி! அன்னைக்கு நீ இருந்த நிலையிலே, முன்பின் தெரியாத ஒரு நல்ல காய்ஞ்ச பொண்ணுக்கு உதவி பண்ண நினைக்க அதைத் துணிஞ்சும் செய்திருக்கிறே, பாரு! ம்.... பெரிய விஷயம்தான்!'' என்று அமைதியாகச் சொன்ன நச்சி சற்றுநேரம் கழித்துத் தன் வழக்கமான கோணல் சிரிப்புடன், ''ஓ..... நான் செண்டிரல் ஸ்டேஷனுக்குப் போய்த் திரும்பி வந்தப்ப மூக்கைச் சிந்தி அழுதுக்கிட்டு இருந்தியே, அது இதுக்குத்தானா? 'இன்னுடா, கைக்கு வந்த பணத்தைக் கபோதித்தனமா தருமம் பண்ணிப்பிட்டோமே'ன்னு அழுதியாக்கும்! இதிலிருந்து நீ நல்ல மனசோடுதான் உதவி பண்ணியிருக்கிறேன்னு தெரியுது! எதுக்கு இப்படிச் சொல்றேன்னா, இந்தக் காலத்திலே ஒருத்தர் இன்னொருத்தருக்கு உதவி பண்ணறதிலே எத்தனையோ விதமான கமான்தனமெல்லாம் இருக்குது: அதிலும் ஒரு பொண்ணுக்கு ஆண் உதவி செய்யறதைப் பத்திக் கேட்கவே வாணாம்!'' என்றான்.

சபேசனுக்கு இப்போதுதான் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. தன்னைப்



"எதிர் வீட்டுக் கடன்காரி மாமியா?.....எங்கம்மா வீட்டிலே இல்லியே!"

பற்றி அந்தப் பெண் நசீமிடம் எதுவும் சொல்லவில்லை என்பதையும், அவள் அவனுடைய தங்கையாக இருக்கிறுள் என்பதையும் அறிந்து அவன் மேலும் மகிழ்ச்சியடைந்தான். வேதாவின் முகத்திலும் ஒருவித ஆழ்ந்த திருப்திக் கலை விரவிப் படர்ந்தது. அவள் அவனைக் கடைக் கண்ணுல் நோக்கிப் புன்னகை பூத்தாள். அவனே குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"தூக்கம் வந்தால் படுத்துக்க, பிரதர்!" என்று பரிவோடு சொன்ன நசீம், வேதாவைப் பார்த்து, "தங்கச்சி! அந்தப் பெரம்புப் பெட்டியிலே எதுக்கும் மிஞ்சின துணி இருந்தால் எடு; தலைக்குச் சுருட்டி வைக்கிறேன்" என்றுன்.

விறகு, விராட்டிகள் அடுக்கி வைக்கும்பொருட்டுக் கூரையில் கட்டப்பட்டிருந்த பரண்மீது புகை படிந்து தூசும் தும்புமாகக் கிடந்த ஒரு பழைய பிரம்புப் பெட்டியைத் திறப்பதற்காகக் கட்டைச் சுவர்மேல் ஏறி நின்றுள் வேதா.

தன் சட்டையின் பித்தான் பாதுப்புப் பகுதியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு படுப்பதற்குத் தயாரான சுபேசன் ஆச்சரியமாக அந்தப் பிரம்புப் பெட்டியை நோக்கினுன். அடுத்த கணம் அவனது நெற்றிச் சருமம் சுருங்கிப் புருவங்கள் நெளிந்தன. உள்ளார்ந்த பரபரப்புடன் நசீமையும் அந்தப் பெட்டியையும் மாறி மாறிப் பார்த்த அவன் தன்னை மீறிய ஒரு துணிவினுல் உந்தப்பட்டவன் போல் குனிந்து, "ஏன், அண்ணு! இந்தப் பெட்டி?......" என்று இரகசியக் குரலில் இழுத்தான்.

அமைதியாக அவனை ஏறிட்டு நோக்கிய நசீம், "ஆமாம்; அதுவே தான்!" என்று ஆழ்ந்த அவலப் புன்னகையுடன் கூறியவாறு வெறுந் தரையில் படுத்து விட்டான்.

அவனுடைய சுருக்கமான பதிலிலிருந்து சுபேசனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அத்துடன், 'என்னைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்த இவன், இன்று நான் இந்தப் பெண்ணைப் பார்த்து அவளுக்கும் இவனுக்கும் அதிசயமான உறவு முறையை மனத்தாலும் நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவே, முன்னெச்சரிக்கையுடன் இவனுடைய உண்மைச் சரிதையை ஒரு பிறியாக் கதைபோல் சொல்லியிருக்கிறான்' என்று எண்ணிய போது நசீமின் மேல் அவனுக்கு அபார மதிப்பும் ஏற்பட்டது. பீடத்தில் ஏற்றிப் பிரதிஷ்டை செய்யப் பெற்ற தங்க விக்கிரகம் போல் அந்தக் கட்டைச் சுவர்மீது நின்று பிரம்புப் பெட்டியைத் திறந்துகொண்டிருந்த வேதாவை வியப்பும் அநுதாபமுமாக நிமிர்ந்து பார்த்த அவன், கன்னியம்மாள் உள்ளே வருவதைக் கண்டு படுக்கையில் சாய்ந்தான்.

அன்றிரவு சுபேசன் நிம்மதியான நித்திரை சுகத்தை அநுபவித்தானென்ருலும், இடையிடையே ஏதேதோ கனவு கண்டு விழிப்படைந்துகொண்டேயிருந்தான். நசீம் சொன்ன அந்த 'உண்மைக் கதை' அவன் நினைவிலே ஆழப் புதைந்து போயிருந்ததால் அவ்வப்போது நவரசங்களின் ஒவ்வொரு குட்டிக்கதைக் கனவாக அது முளைத்துக் கிளைத்து அவனது உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தது. அத்துடன், அவன் கண் விழிக்கும் போதெல்லாம், அடுப்படிக் கட்டைச் சுவருக்கு அப்பால் கன்னியம்மாளின் பக்கத்தில் படுத்திருந்த வேதா மெல்ல அசைவதும், நெளிந்து நெட்டுயிர்த்துத் திரும்பிப் புரள்வதுமா யிருந்ததும் அவனுடைய தூக்கத்துக்குத் தடங்கலாக இருந்தது. 'இவள் என்ன, இரவில் தூங்கும் பழக்கமே இல்லாதவளோ?' என்று எண்ணி உள்ளூற வியப்படைந்தான். அவ்வியப்போடு அவனைப் பற்றிய அந்தச் சோக மயமான கதையும் அவன் மனத்தில் திரைப்படம் போல்


சென்னை
வழியாக
கொழும்புக்கு
At no extra cost
இந்தியன் ஏர்லையன்ஸ்
IATA MEMBER



எட்டியிராத மைலோட்டத்தை எட்டியுள்ள டயர்.

இதனை உருவாக்குவது

பயர்ஸ்டோன்

ஸூப்-ர்-டஃப்

கூடுதலான மைலோட்டத் திறன்படைத்த அற்புத ரப்பர்

இதோ இன்றே கிடைத்துவிட்டது கனேவடயர்: பாதுகாப்பாக மோட்டாரோட்டுவதற்
கென புரட்சிகரமான டிரெட் அமைப்புக்கொண்ட பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன்.
அதோடு மட்டுமல்ல, அதிகப்படி செலவு எதுமின்றியே உபரி மைலோட்டம் கிடைப்பதற்
கென ஸூப்-ர்-டஃப் என்ற அற்புத ரப்பரினால் தயாரிக்கப்பட்ட டயர் இது. தவிர,
ஸூப்-ர்-டஃப் அதிக உறுதி வாய்ந்தது ஆதலால் பஞ்சர், தேய்வு, சேவு எதுவும் நேரி
டாமல் தாக்குப்பிடிக்கும் திண்மை உள்ளது.

Firestone பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன்

ஓடும். அதிலே நச்சி சொல்லாமல் விட்ட சில பகுதிகள் புதிர்க் கேள்விகளாகத் தோன்றி அக்கதையோட்டத்தை அப்படியே அறுத்து நிறுத்தி விடும். 'அவள் இந்தப் பிரம்புப் பெட்டிக்கும் தனக்கும் உள்ள தொடர்பை அறியாளா? அல்லது தான் நச்சியின் உடன் பிறந்த சொந்தத் தங்கை என்றே நம்பிக் கொண்டிருக்கிறாளா? மூன்று மாதக் குழந்தையாயிருந்த இவளைப் பெட்டிக்குள் வைத்து நச்சியிடம் கொடுத்துவிட்டுப் போன அந்தப் பெண் யாராக இருப்பாள்? அவள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? அவளுடைய கதி அப்புறம் என்ன ஆகியிருக்கும்?' — இன்னும் இவை போன்ற விடை கிடைக்காத பல கேள்விகளைத் தனக்குள் எழுப்பிக் கொண்டு குழம்பிச் சோர்ந்த பின் திரும்பிப் படுத்துத் தூங்கி விடுவான். மீண்டும் அதே கனவு. விழிப்பு! வேதா நெளிந்து புரளும் காட்சி! அவளைப் பற்றிய புதிரான கேள்விகள். மறுபடியும் தூக்கம்!

ஆனால் நச்சிக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாது. அவள் அடித்துப் போட்ட மிருகம்போல் கிடந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கன்னியம்மாள் விட்ட குறட்டைச் சத்தம் நாலு தெருக்களுக்கு அப்பாலும் கேட்கக் கூடியதாக இருந்தது.

பொழுது புலர்ந்த பின்னும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த சபேசன் தன் அருகில் யாரோ நடமாடும் ஒலி கேட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

"நல்ல தூக்கத்தில் எழுப்பிவிட்டேனா? மன்னியுங்கள்!" என்று இனிய மென் குரலில் கூறிப் புன்னகை பூத்த வேதா தன் இடுப்பிலிருந்த தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவனைப் பரிவோடு பார்த்தாள்.

கண்களை நிமிண்டிக்கொண்டு அங்கு மிங்குமாகப் பரபரப்புடன் நோக்கினான் சபேசன். நச்சியைக் காணோம்; கன்னியம்மாளும் வீட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

"நச்சி எங்கே?"

"அவர் எங்களுக்கு முன்னால் எழுந்து வெளியே போய்விட்டார். எப்போதும் அப்படித்தான்."

"உன் அம்மா?...."

"வாடிக்கை வீடுகளுக்குப் பால் கறக்க மாட்டை ஓட்டிக்கொண்டு போயிருக்கிறாள்; இப்போது வருகிற நேரம்தான்."

வேலையற்ற சோம்பேறிபோல் தான் வெகுநேரம் தூங்கிப் போனதை நினைத்து உள்ளூற வெட்கப்பட்டுக் கொண்ட சபேசன், அவசரமாகப் புறக்கடைக்குச் சென்று பல் துலக்கி முகம் கழுவிக்கொண்டு உள்ளே வந்தான். அவனுக்காகவே காத்திருந்தவள் போல் ஓர் அலுமினியக் குவளையில் காப்பி எடுத்து வந்து கொடுத்தாள் வேதா. அந்த வீட்டில் காப்பி பலகாரம் என்பதெல்லாம் வெறும் கற்பனைச் சொற்களாகவே இருக்கக்கூடும் என்று எண்ணியிருந்த அவனுக்கு, அவள் காப்பி கொடுத்தது வியப்பாகவே இருந்தது. தன் கைக் காசைப் போட்டுக் காப்பித் தூள் வாங்கி வீட்டிலிருந்த பாலைக் கன்னியம்மாளுக்குத் தெரியாமல் எடுத்து உபயோகித்துத் தயாரித்திருப்பாள் போலும்! அவளது இந்தப் பரிவு உபசாரம் அவனுக்குச் சங்கடமாக மட்டுமல்ல, பயத்தையும் உண்டு பண்ணியது. பிறகு, 'சே! அவளைப் போல் நானும் அநாதையாக இருப்பதால் என்மீது அவளுக்கு ஏதோ அநுதாபம் ஏற்பட்டிருக்கலாம்; அது இயற்கைதானே? அன்றொரு நாள் அவளது அவசரத் தேவைக்கு ஒரு ரூபாய் கொடுத்து உதவியதாலும், அவளுடைய சகோதரனை நச்சி என்னை நேசிப்பதாலும் அவள் இப்படி என்னிடம் அன்பு காட்டி இதமாக நடந்துகொள்ளலாம். இதை ஏன் நான் பெரிது படுத்திக்கொண்டு குழம்ப வேண்டும்?' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்ட அவன் அவளைக் கூச்சத்துடன் ஏறிட்டு நோக்கி, "மிகவும் நன்றி!" என்றவாறு காப்பியை வாங்கிப் பருகினான். "நேரமாகிறது. புறப்படட்டுமா?"

இவ்வளவு நேரம் அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த வேதா, "புறப்பட்டு விட்டீர்களா?... தலை வாரிக் கொள்ளவில்லையே!" என்றபடி மாடப் புரையிலிருந்த ஒரு சிறு கண்ணாடியையும் சீப்பையும் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தாள்.

அவன் வெட்கத்துடன் சுவர்ப் பக்கமாகத் திரும்பி நின்றுகொண்டு கண்ணாடியைப் பார்த்துத் தலை வாரினான். அந்தக் கண்ணாடியில் அவனுடைய முகம் பாதிதான் தெரிந்தது; பின்னால் நின்றுகொண்டிருந்த வேதாவின் அழகிய முகமே முழுதுமாகப் பிரதிபலித்தது. அதனால் கண்ணாடியை அப்படியும் இப்படியுமாகச் சாய்த்துத் தூக்கி இறக்கிப் பிடித்து அவனுடைய



முக பிம்பத்தை ஒதுக்க முயன்றான். எப்படிப் பிடித்தாலும் அவளுடைய முகம் அதில் தெரிந்துகொண்டேயிருந்தது. இப்போது அவள் அவனைப் பார்த்துக் குறும்பாக முறுவலிப்பது போலவும் தோன்றியது. அந்த முறுவலில்தான் எத்தனை பொலிவுடன் காட்சியளிக்கிறாள்!

சபேசனின் மாசற்ற இளம் குருத்து நெஞ்சத்தில் ஏதோ ஓர் ஆசை மெல்ல முளைத்துத் தலை தூக்கியது. கண்ணாடியில் தெரிந்த வேதாவின் வதன பிம்பத்தைத் தன்னை மீறிய ஆவலுடன் உற்றுப் பார்த்தான். வகிடு படியக் கேசத்தை அழுத்தி வாருவதுபோன்ற பாவனையில் சீப்பைத் திரும்பத் திரும்பத் தலையில் ஓட்டியவாறு அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

'களுக்'கென்று சிரித்த ஒலி கேட்டுத் திடுக்குற்றுத் திரும்பிய சபேசன், "நேரமாகிவிட்டதா? இதோ புறப்பட்டுவிட்டேன்!" என்று குழறிக்கொண்டே சீப்புக் கண்ணாடியைக் கட்டைச் சுவரின் மேல் வைத்தான்.

வெட்கத்தால் முகம் சிவக்கத் தலை குனிந்து நின்ற வேதா, "சாயந்தரம் வருவீர்கள் அல்லவா?" என்று இனிய குரலில் கேட்டாள்.

"அவசியம் வருவேன்!" என்று அசடு வழியச் சிரித்துச் சொன்ன சபேசன், தான் ஏதோ தவறாகப் பதில் சொல்லிவிட்டது போன்ற பரபரப்புடன் நிமிர்ந்து, "எனக்குப் படுக்க வேறு இடம் இல்லாததால் இங்கு வந்துதான் ஆகவேண்டும்..." என்றான்.

அவள் அவனை ஒரு கணம் நிமிர்ந்து நோக்கினாள். அவனோ அந்தச் சிநேகப் பார்வையை ஸ்பரிசிக்க அஞ்சியவன் போல் அவசரமாகப் புறப்பட்டுவிட்டான்.

இரவு ஒன்பது மணிவாக்கில் சபேசன் மட்டுமே திரும்பி வந்தான். அன்றெல்லாம் நச்சியை அவனும் சந்திக்க முடியவில்லை. சந்தித்திருந்தாலும் அவன் இவனோடு வீட்டுக்கு வந்திருக்கவும் மாட்டான்!

நேற்றுப் போலவே இன்றும் கன்னியம்மாள், "எதனுச்சும் துன்றியா, நைனா?" என்று அன்போடு கேட்டாள். ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டதாகப் பதில் சொன்னான் சபேசன்.

வேதா நேற்றைக் காட்டிலும் இன்று அதிக உற்சாகத்தோடும் பொலிவோடும் காணப்பட்டாள். சபேசனுக்கு ஒரு நல்ல தலையணை உறை தைத்து வைத்திருந்தாள். அது பழைய துணிதான். ஆனாலும் அழகாக, சுத்தமாக இருந்தது. அத்துடன் போர்த்திக் கொள்ள ஒரு போர்வையும் துவைத்து வைத்திருந்து கொடுத்தாள்.

விளக்கடியில் உட்கார்ந்து அன்றைய காலித ஜல்லி வியாபாரத்தின் வரவு செலவுக் கணக்குகளை ஒரு சிறிய பாக்கெட் நோட்டில் எழுத ஆரம்பித்தான் சபேசன். அடுப்பில் பால் காய்ச்சிக் கொண்டிருந்த வேதா அவனையே கவனித்தவாறு இருந்தாள். தன் பேனாவைக் கொண்டு அவன் எழுதுவது அவளுக்குப் பெருமையாக இருந்திருக்க வேண்டும். அதை அடக்க மாட்டாமல் தானோ என்னவோ, "பார்த்தீர்களா, இந்தப் பேனா உங்களுக்கு எவ்வளவு உபயோகமாக இருக்கிறது!" என்றாள் புன்னகையுடன்.

"ஆமாம்; அதைத்தான் இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று நன்றி கலந்த நாணக் குரலில் பதிலிறுத்தான் சபேசன்.

அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பால் பொங்கி வழிந்தது. புறக்கடையிலிருந்து வந்த கன்னியம்மாளும் அதைக் கவனித்துவிட்டாள். வேதா பயந்து போய்ப் பரபரப்புடன் பால் பாத்திரத்தை இறக்கினாள். கன்னியம்மாள் ஏனோ அவளை ஒன்றும் கடிந்துகொள்ளவில்லை. இதுவே வேறொரு நாளாயிருந்தால் இந்நேரம் அவள் பத்திரகாளியாக மாறிவிட்டிருப்பாள்! (தொடரும்)





"இந்த விகாரி வருடத்துக்கு ராஜா சந்திரனுமே. அதனால் எதிர்பாரா முன்னேற்றமும் ஆதிக்கமும் ஏற்படுமாமே. பஞ்சாங்கத்தில் போட்டிருக்கிறதே, பார்த்தீர்களா?" என்று பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த ஒரு பெரியவர் தமக்கும் பக்கத்தில் நின்றிருந்த ஒருவரைப் பார்த்துச் சொன்னார்.

"நான் பஞ்சாங்கம் பார்க்கவில்லை. ஆனால் இந்த க்யூ வரிசையில் முக்கால்வாசிப் பேர் பெண்கள் நிற்பதைப் பார்க்கிறேன்" என்றார் மற்றவர்.

"மந்திரி அங்காரகனாக இருப்பதால் பஸ்களில் இடம் கிடைக்குமாமே!" என்று அந்தப் பெரியவர் சொன்னார்.

"அட, நீங்கள் சொல்வது சரியாக இருக்கிறதே. இதோ ஒரு பஸ் காலியாய் வருகிறது. நீங்கள் வேடிக்கையாகச் சொல்கிறீர்களாக்கும் என்றல்லவா நினைத்தேன்" என்று இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு முதலில் நின்றிருந்த மாதங்கி இவ்வாறு கூறிக்கொண்டே அந்த பஸ்ஸில் ஏறச் சென்றாள்.

கண்டக்டர் பஸ்ஸின் படிகள் பக்கம் நின்று ஒரு காலைக் குறுக்காக நீட்டி வழியை மறைத்துக்கொண்டு, "பஸ் ரிப்பேர்! போகாது!" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அப்போது க்யூ வரிசை கலைந்துபோய்விட, மாதங்கி மறுபடியும் வரிசையில் இடம் தேடிக் கொண்டிருக்க விரும்பாமல் நடைபாதை ஓரமாகக் ரோடுப் பக்கம் போய் நின்றாள். அப்போது சற்றுத் தூரத்தில் வசந்தன் வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் தலைகுனிந்த வண்ணம், தயங்கித் தயங்கி வருவதைக் கவனித்த அவள், தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நின்றிருந்தாள்.

காலடிச் சத்தத்திலிருந்து அவன் தன் பக்கத்தில் வந்து நிற்கிறானென்று அவள் ஊகித்தாள். ஆனால் வேண்டுமென்றே திரும்பிப் பார்க்கவில்லை. அவன் கூச்சப்பட்டுக் கொண்டு வாய் திறவாமல் இருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். என்ன செய்கிறானென்று வேடிக்கை பார்க்க விரும்பினாள்.

திடீரென்று தும்மல் சத்தம் கேட்டது. வசந்தன் ஏதோ குற்றம் செய்துவிட்டவனைப் போல் விழித்துக்கொண்டு அசடு வழிய நின்றிருந்தான். அவனது கூச்சம் தெளிவதற்காகத் தும்மல் காத்துக் கொண்டிருந்ததல்லவா?

"ஓ, நீங்களா?" என்று மாதங்கி விசாரித்தாள்.

"நானேதான்!" என்று வசந்தன் கூற முயன்றபோது அந்த வார்த்தைகள் அரைகுறையாக வெளிவந்தன.

அவன் கூச்சப்படுகிறான் என்பதை அந்தப் பெண் ஊகித்து அந்தக் கூச்சம் தெளியும் முறையில் அவனிடம் பேச வேண்டும் என்று நினைத்தாள்.

"நான்தான் மாதங்கி!" என்று அவள் சொன்னவுடன் வசந்தன் சிரிப்பதுபோல் பாவனை செய்தான்.

"நேற்று நாம் பேசிக் கொண்டிருந்தோம், இல்லையா?" என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

"ஆமாம்!" என்று வசந்தன் துணிந்து பதிலளித்தான்.

மாதங்கி, அவனிடம், பஞ்சாங்க பலன் பற்றிய பேச்சு, காலியாக வந்த பஸ் வண்டிக்கு உடம்பு சரிப்படாமலிருந்தது முதலிய விஷயங்களைப் பற்றிச் சொன்னாள். வசந்தன் அந்த விவரங்களைச் சிரத்தையுடன் கேட்டு வந்தான். பிறகு இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். அவனாக ஏதாவது பேசுவானென்று மாதங்கி எதிர்பார்த்தாள். ஆனால் பயனில்லை.

"இன்னும் கூட்டம் அதிகமாக இருக்கிறது. பிறகு மெதுவாகப் போகலாமென்று இருக்கிறேன். நீங்கள் அவசரமாகப் போக வேண்டும் போலிருக்கிறது" என்றாள்.

"இல்லை, இல்லை!" என்றான். பிறகு அவன் ஏதோ சொல்வதற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு, "வந்து... வந்து..." என்று ஆரம்பித்துவிட்டுப் பேசாதிருந்தான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த மாதங்கி, புன்னகை புரிந்து, "உங்கள் முகத்தைப் பார்த்தால் நான் நேற்று பாதியில் நிறுத்திய கதை பாக்கியையும் என்னைச் சொல்லச் சொல்கிறாற் போலிருக்கிறது" என்றாள்.

"ஆமாம், பாவம், அந்தப் பெண் கலாவதி 'வீல்' என்று கத்திய அந்த உருவத்தைப் பார்த்து நடுநடுங்கிப் போயிருக்க வேண்டுமே!" என்று வசந்தன் சற்று அதிகமாகப் பேசினான். இதில் மாதங்கி திருப்தியுற்றாள்.

"முதலில் கலாவதி திடுக்கிட்டுத்தான் போய் விட்டாள். ஆனால் அவள் சட்டென்று சமாளித்துக் கொண்டு விட்டாள்" என்று மாதங்கி கூறினாள். பிறகு ஒரு சிறிது யோசனை செய்வது போலிருந்துவிட்டுக் கபாடபந்தனக் கதையின் பிற்பகுதியைச் சொல்லலானாள்:

"கலாவதி அந்த உருவத்தைக் கூர்ந்து கவனித்தாள். அதன் கால்கள் இரண்டும் கீழே நன்றாகப் பதிந்திருந்தன. ஆனால் அவை கறுப்பாக இருந்தன. மேலும் கவனித்து நோக்கியதில் அவை பூட்ஸ்கள்

என்று தெரிந்தது. அதன் நிழல் கீழே விழுந்திருந்தது. ஆகையால் அது பேயாகவோ, பிசாசாகவோ இருக்க முடியாது என்று நினைத்தாள். அவளுக்கு இவற்றிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் இரவில் திடீரென்று எதிர்பார்க்கக் கூடாத ஓரிடத்தில் தோன்றியதால் அவள் அப்படி எண்ணாதிருக்க முடியவில்லை. அந்த உருவத்தின் தலை மொட்டையாயிருந்தது. ஒருவேளை நவீன பிசாசுகள், அதுவும் புத்தகசாலைப் பிசாசுகள் அப்படி இருக்குமோ என்றுகூட எண்ணினாள்.

அவள் பக்கத்திலுள்ள புத்தக ஷெல்பில் "சரித்திர முந்தைய கால பிரம்மாண்டமான பிராணிகள்" என்ற புத்தகம் இருப்பது கண்ணில் பட்டது. சுமார் ஆயிரத்தைந்நூறு பக்கங்கள் உள்ள 'ரெக்ஸின் பைண்ட்' செய்யப்பட்டிருந்த அதைத் தனது வலது கையில் வைத்துக் கொண்டாள். அவளுக்கு இப்போது யானை பலம் வந்துவிட்டது போலிருந்தது. அதை வீசி அடித்தால் அதிலுள்ள தூசு பட்டே கண்கள் பொட்டையாய்ப் போய்விடும். அது மண்டையில் பட்டால் மூளை சிதறிப் போகும் என்று அவளுக்குத் தோன்றிற்று. அந்த ஆயுதத்தைக் கையிலேந்தி அந்த உருவம் இருந்த பக்கம் சென்றாள்.

"யாரது?" என்று அதைப் பார்த்துக் கேட்டாள்.

"முதலில் நீங்கள் யார் என்று தயவு செய்து சொல்லுங்கள்!" என்று அது பதிலுக்குக் கேட்டது.

கலாவதி ஆச்சரியப்பட்டாள், அது பேயா, உயிருள்ள மனிதன்தானா? யாரா யிருந்தாலும் தன்னிடம் மரியாதையாகப் பேசுகிறதே என்று.

"நான் இங்கே புத்தகம் படிக்க வந்தேன்" என்று கலாவதி சொன்னாள்.

"புத்தக சாலை விதியின் ஆறாவது பிரிவு ஏழாவது உப பிரிவின்படி இங்கே ஐந்தரை மணிக்கு மேல் யாரும் இருக்கக் கூடாது" என்று அந்த உருவம் கூறிற்று.

"அப்படியானால் தாங்கள் எந்த விதியின் பிரிவின்படி இங்கே இருக்கிறீர்கள்!" என்று கலாவதி கேட்டாள்.


"நான் புத்தகசாலையின் லைப்ரேரியன். நான் இங்கே வந்திருந்தபோது குமாஸ்தா கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்."

"நானும் அப்படித்தான் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். தங்களை நான் பார்த்ததில்லையே!" என்றாள் கலாவதி.

"நான் போன மாசம்தான் வேலை ஒப்புக் கொண்டேன். இங்கே வேலை செய்பவர்கள் சிலர் காரியாலய வேலை நேரப்படி வருவதில்லை. எல்லோரும் குறிப்பிட்ட மணி நேரத்துக்கு ஒரு நிமிஷங்கூடக் காலதாமதமாகாமல் வரவேண்டும்; அப்படியே மாலையில் போய்விடவும் வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிட்டேன். அதன் பலன் இது. சாயங்காலம் ஐந்தரை மணி அடித்ததும் காவற்காரன் கதவைச் சாத்திப் பூட்டிவிடுகிறான். யார் உள்ளே இருக்கிறார்கள், இல்லை என்று பார்ப்பதில்லை" என்ற அவர் வைத்த கண் வாங்காமலே அவளைப் பார்க்கலானார்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் கலாவதி.

"நானா பார்க்கவில்லையே. இங்கிருந்து எப்படித் தங்களை வெளியேற்றுவது என்பதைப் பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறேன். நாம் இரண்டு பேரும் எக்கச்சக்கமான நிலைமையில் இருக்கிறோம். காலையில் குமாஸ்தாக்கள் வந்து பார்த்தால் விஷ



டம் அமர்க்களப்பட்டுவிடும். பத்திரிகைகளில் நம் இரண்டு பேர் பெயரும் அடிபடும்!''

கலாவதி எதைப் பற்றியும் இலட்சியம் செய்யாதவள் பத்திரிகையில் பெயர் அடிபடும் என்று அவர் கூறியதைக் கேட்டதும் கலவரப்பட்டாள். ''வாசகசாலைக்குள் இரவு தனியே தங்கியிருக்க பயமும் பதறியும்'' என்ற கொட்டை எழுத்துத் தலைப்பு அவள் கண் முன் தாண்டவமாடியது.

''என்ன செய்வாய்?'' என்று கேட்டாள்.

''இங்கே மூன்றாவது மாடியில் கொட்டடிகள் இருக்குமிடத்துக்குப் போ. அங்கே விளக்கைப் போட்டுக் கொண்டு படுத்திரு. நல்ல வேளை மின்சார மெயினை அணைக்கவில்லை. காலை எட்டே கால் மணி வரை அங்கே படுத்திரு. இங்கே யாருமே வரமாட்டார்கள். நானும் யாராவது சிப்பந்தி எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வரவேண்டும். நல்லவேளை! இந்த வாசகசாலையில் அப்படிச் செய்யும் வழக்கமில்லை. நான் காலையில் இந்தப் பக்கம் வந்து கதவைத் திறக்கிறேன். நீ ஏதாவது புத்தகம் எடுத்துக் கொண்டு வருவது போல் வா!'' என்று அந்த மனிதர் கூறினார்.

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று அந்தப் பெண் சற்றுக் கவலையுடன் விசாரித்தாள்.

''நானா? இந்த மாடியிலிருந்து கீழ்த் தளத்துக்கு இறங்கிச் செல்லும் படிகளின் கோடிக் கத்தில் இரும்புக் கிராதிக் கதவு உண்டு. அது பூட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் மேல் புறம் இடைவெளி உண்டு. அதன் மீதேறிக் கீழ்த் தளத்துக்குப் போய் விடுவேன். காலையில் சிப்பந்திகள் கதவைத் திறந்த பிறகு அங்கு மிங்கும் போய்க்கொண்டும் பேசிக்கொண்டு மிருப்பார்கள். நான் அந்தச் சமயம் பார்த்து முன் பக்கமுள்ள என் அறைக்குச் சென்று விடுவேன். நான் வாசகசாலைக்குள் நுழைந்ததைத் தாங்கள் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். நான் உடனேயே வந்து கிளம்புகிறேன்'' என்று அந்த மனிதர் கூறினார்.

''நான் தங்களுக்கு இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!'' என்று அந்தப் பெண் கூறினாள். அந்த மனிதர் இவ்வளவு நேர்மையாகப் பேசி நடந்து கொள்வதை அவள் மனத்துக்குள் மிகவும் பாராட்டினாள்.

''நீங்கள் ஒன்று செய்யலாம், கட்டாயம் செய்தாக வேண்டும், கலாவதி!'' என்று அந்த மனிதர் மெதுவாக, அழுத்தம் திருத்தமாகப் புன்னகை ததும்பக் கூறினார்.

அதைக் கேட்டுக் கலாவதி திடுக்கிட்டாள். அவருக்குத் தன் பெயர் எப்படித் தெரியும் என்று நினைத்தாள்.

''கலாவதியா?'' என்று அவள் கோபமாகக் கேட்டுப் பின்வாங்கினாள்.

''ஆமாம்! எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கிறதே என்றுதான் தங்களைக் கவனித்துப் பார்த்தேன். கோபித்துக் கொண்டீர்கள். பார்த்து எட்டு வருஷமாகிறது. கல்யாணமாகாத பெண்கள் உடல் மெலிந்து போவார்கள் என்று சொல்வார்கள். ஆனால் தாங்கள்... தங்களை இப்போது சட்டென்று அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை....'' என்று இழுத்தாற்போல் சொன்னார்.

கலாவதி இதைக் கேட்டுக் கோபப்படவில்லை. ''நான் மறுத்திருக்கிறேன் என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். தாங்கள் ....தாங்கள் ஓ! எட்டு வருஷங்களுக்கு முன்னால் நாக்பூர் ஏரோடிரோம் ஹாலில் பார்த்தது'' என்றாள்.

''ஆமாம். அதே ஜெயகுமார்தான். அன்றிருந்த நிலைமையிலேதான் இன்றும் இருக்கிறேன். ஏதோ பல காரணங்களால் கல்யாணம் நடக்கவில்லை. முக்கிய காரணம் தான் தங்களைத் தவிர...'' என்று ஆரம்பித்தார்.

கலாவதி இதைக் கேட்டு நாணமுற்றாள்.

''தங்களை எனக்கு அடையாளமே புரியவில்லை. அதோடு மாறி விட்டிருக்கிறீர்கள். இரவில் ஒரு நிமிஷம் பார்த்தது. தங்கள் தலை வேறு....'' என்று சொன்னாள்.

''ஆமாம்! என் அம்மா சொப்பனத்தில் வேங்கடாசலபதி வந்து, நான் மொட்டையடித்துக் கொண்டால் கல்யாணமாகும் என்று சொன்னாராம். அம்மாவைத் திருப்திப்படுத்துவதற்காகத் திருப்பதி போய் விட்டு வந்தேன். அம்மா கனவு பலிக்கும் போலிருக்கிறது'' என்று ஜெயகுமார் கூறினார்.

''இது மாதிரி வாசகசாலையில் அகப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று கடவுள் சொல்லவில்லையா?'' என்று கலாவதி வேடிக்கையாகக் கேட்டாள்.

பிறகு சட்டென்று அவள் முக பாவம் மாறியது. ஏதோ வருத்தத்துடன் யோசிப்பவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள்.

''கலாவதி! என்ன சிந்தனை?'' என்றார் ஜெயகுமாரன்.

''ஒன்றுமில்லை. ஒரு சந்தேகம். நாக்பூரில் அன்றைக்கு எனக்குப் போய்த் தந்தி அடிப்பதாகக் கூறிச் சென்றீர்கள். அப்புறம் கடிதமோ தந்தியோ எதுவுமே காணோம்....''

'' ஆமாம் கலாவதி! அதைப் பற்றி உனக்குச் சந்தேகமும் வருத்தமும் ஏற்பட்டிருப்பது நியாயமுண்டு. நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். உன்னை இனியும் ஏமாற்ற நான் விரும்பவில்லை. பெண் பார்க்க நானும் என் பெற்றோரும் நாக்பூர் வர விமான டிக்கெட்டெல்லாம் உன் அப்பா தாமே வாங்கித் தருவதாக எழுதியிருந்தார். அப்போதே உன் போட்டோ ஒன்றையும் அனுப்பியிருந்தார். போட்டோவைப் பார்த்ததுமே உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். நான் அதற்கு முன்னால் விமானப் பயணம் செய்தது கிடையாது. சல்லிக் காசு செலவில்லாமல் கிடைக்கவிருந்த விமானப் பயணத்தை விட இஷ்டமில்லை. அதனால் நாக்பூர் வரச் சம்மதித்தேன். டில்லிக்கு மீண்டும் அடுத்த விமானம் புறப்படும்வரை முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பது போல் இருந்துவிட்டுப் போய்விட்டேன். அப்போது உன்னையும் உன் பெற்றோர்களையும் ஏமாற்றிய பாவம்தானோ என்னவோ எனக்கு அதன் பின் கல்யாணமே நடக்கவில்லை. இனி என் ஆயுளிலேயே....''



''ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அன்று நாக்பூரில் உங்களைப் பார்த்த நினைத்திருந்து உங்கள் ஞாபகமேதான் எனக்கு'' என்று வெட்கத்துடன் சிரித்தாள் கனகம்.

''நான் இப்போது இருந்திய மனிதன். வெளி அழகைக் கண்டு மட்டும் மயங்குபவனல்ல'' என்று கூறியபடியே மெல்ல அவள் கரத்தைப் பற்றிப் போனார் செல்லுமாரன்.

சில தினங்களுக்குப் பிறகு அவர்களுக்குக் கல்யாணம் நடந்தது.''

மாதங்கி கதையை முடித்ததும், வசந்தன், ''மிக நன்றாகக் கதை சொல்லிவிட்டீர்களே! இது வரை இன்னும் நேரமாகத்தான் இருக்கிறது. அரை மணிக்குப் பிறகு பஸ்ஸில் கூட்டம் இராது. அதுவரையில் இன்னொரு கதை சொல்லுங்களேன்!'' என்றான்.

''இல்லை. நீங்கள் ஒன்று சொல்லுங்கள்!''

''நானு! எனக்குப் பேசவே வராதே. கதை சொல்லவாவது!'' என்று வசந்தன் கூறினான்.

''நீங்கள் ஒரு கதை சொல்லாவிட்டால் நானும் இனிமேல் ஒன்றும் சொல்ல போவதில்லை'' என்றாள் மாதங்கி கண்டிப்பாக.

''அப்படியானால் சொல்கிறேன்'' என்று வசந்தன் கூறிவிட்டு யோசனை செய்தான்.

''வைசம்பாயனர் ஜனமேஜயனைப் பார்த்து....'' என்று ஆரம்பித்தான்.

''அது வேண்டாம், வேறு சொல்லுங்கள்'' என்று மாதங்கி கூறினாள்.

''போஜ மகாராஜன் விக்கிரமாதித்தனுக்குத் தூப தீப நைவேத்தியங்கள் செய்துவிட்டு முதற்படியில் காலை வைக்க முயன்ற போது அதைக் காத்துக் கொண்டிருந்த பதுமை ''அடே போஜ மகாராஜனே, எங்கள் விக்கிரமாதித்தன்....'' என்று ஆரம்பித்தான்.

''அதுவும் வேண்டாம்.''

''பாக்தாத் நகரிலே ஒரு மந்திரவாதி இருந்தான். அவனிடம் ஒரு பறக்கும் குதிரை இருந்தது......''

''அதுவும் வேண்டாம். ஏதாவது நடந்த விஷயமாகச் சொல்லுங்கள்'' என்று மாதங்கி கேட்டாள்.

''சரி, கத்தாவு!'' என்று வசந்தன் சிரித்துக்கொண்டே கூறிப் புதுக் கதை சொல்லலானான்.

''முரே ஒரு ஊரிலே மார்க்கபந்து என்று ஒரு பெரிய அரசாங்க அதிகாரி இருந்தார். அவர் ஒரு ஹைகோர்ட் நீதிபதியின் புத்திரன். அந்த நீதிபதி மிகவும் ஆசாரசீலர். ஒரு குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தால் அன்றைய தினம் வீட்டுக்கு வந்து ஸ்நானம் செய்வார். அவர் கோர்ட்டுகளுக்குச் சென்றிருக்கும் சமயங்களில் பெரியோர்களின் திதி தினங்கள் வந்தால் பிண்டம் சாப்பிடுவதற்காகக் காக்கையைக் கண்டும் பிடித்துக்கொண்டு வரச் செய்வார்.

மைந்தனும் தந்தையைப் போன்றே பரம வைதிகர். அவர் கீழ் வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள் எல்லோரும் தினமும் முக க்ஷவரம் செய்துகொண்டு வந்திருப்பார்கள். ஆனால் மார்க்கபந்து அநேகமாகத் தாடி வளர்த்துக் கொண்டிருப்பார். ஏனென்றும் க்ஷவரம் செய்துகொள்ள சாஸ்திரோக்த



அவள்: குழந்தை வேண்டாம்னு விட்டு விட்டேன்! ஏன் அப்படி நினைக்கிறே? அது இந்தியில்லை ...சாதம்தான்!

மான நாள் அவருக்குக் கிடைப்பதில்லை. அவர் தமது நாற்காலியின் உள்ள மெத்தையின் மீது மான் தோலை விரித்துக்கொண்டு அதன் மீதுதான் உட்கார்ந்துகொள்வார்.

அவர் காரியாலயத்தில் வேலை செய்யும் பெண் குமாஸ்தாக்கள் கடிதத்தையோ, நோட்டையோ அவரிடம் நீட்டினாலும் அதைத் தம் கையை நீட்டி வாங்கிக் கொள்ள மாட்டார். மேஜையின் மீது வைக்கச் சொல்லி எடுத்துக் கொள்வார். தாமும் பெண்கள் கையில் நேராக ஒன்றும் கொடுக்க மாட்டார்.

ஒரு சமயம் காரியாலயத்திலுள்ளவர்கள் தங்கள் பிறந்த தேதியைப் பற்றி உண்மையான தகவலைத் தெரிவிக்க வேண்டும் என்று சுற்றறிக்கை விடுத்தார். ஏனென்றால், அப்போது பல உயர்தர அதிகாரிகள் தாங்கள் சீக்கிரம் பதவியிலிருந்து விலக வேண்டியிராதிருப்பதற்காகத் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்கிறார்கள் என்று வதந்தி பரவியிருந்தது. மார்க்கபந்து, குமாஸ்தாக்களின் சர்டிபிகேட்டுகளை நம்பாமல் கூட அவர்கள் ஜாதகத்தின் நகல்களையும் கேட்டு வாங்கி ஒப்பிட்டுப் பார்த்தார்.

இதற்குச் சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் பிரேமா என்ற பெண் அவர் அறைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தபோது, அவள் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. அதை அவள் சிநேகிதி முக்தா மட்டும் கவனித்து என்ன விஷயம் என்று விசாரித்தாள். ஆனால் பிரேமா அதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. மேலும் விம்மி விம்மி அழுதாள்....''

இப்படிக் கதை சொல்லிக் கொண்டு வந்த வசந்தன் அதிகக் கூட்டமில்லாத ஒரு பஸ் வருவதைப் பார்த்தான். கைக் கடிகாரத்தைக் கவனித்தான். ''மணி ஆகி விட்டது. அம்மா கோவிலுக்குப் போகக் காத்துக் கொண்டிருப்பாள். நான் போகிறேன்'' என்று கூறிய வண்ணம் ஓடிப் போய் பஸ் வண்டிக்குள் ஏறிக் கொண்டான்.


நேர்த்தியான
நெசவு வேலைப்பாடுகளுக்கு புகழ்பெற்றது...
அரவிந்த்
உன்னதமான உயர் ரக ஆடைகளைத் தயாரிப்பவர்கள்
ரகங்கள்
·SANFORIZED·
Arvind
Quality
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்
*Licensed User

வட்ட மேஜை

✲ மீனவர் பிரச்னை
✲ பத்திரிகைக் கஷ்டம்
✲ கை தூக்கும் பொம்மைகள்

நீங்கள் 14-3-65 தேதியிட்ட ''கல்கி'' வட்டமேஜைப் பகுதி கடிதம் கண்டேன். என் கண்களிலும் கண்ணீர் உண்மையாகவே துளித்தது! ஏனெனில், உண்மைக்குப் புறம்பாக அதில் பல விஷயங்கள் உள்ளன.

''தென்குமரி கன் நாட்டு மீனவர் சங்கம்'' 85 மீனவர் குடும்பங்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டது. எங்கள் சங்கம் 6-8-64ல் ஆரம்பிக்கப்பட்டது. 15-1-65ல் அல்ல. சென்னை அரசாங்கம் மாநிலம் முழுமைக்குமாக ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த அந்தப் பகுதிகளில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கே அந்தப் பகுதிகளில் உள்ள குளங்களைக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டும் என்று.

தென்குமரி கன்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் 1964 டிசம்பர் 30ந்தேதியே மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு மீன்துறை நெறியாளர் ஆலோசனை வழி தனது எல்லைக்குட்பட்ட குளங்களைக் குத்தகைக்குத் தருமாறு மனுச் செய்து கொண்டது. அன்பரின் கடிதத்தில் கூறுவது போல் 15-1-65ல் அல்ல. 11-1-65ல் எங்கள் சங்க எல்லைக்குட்பட்ட குளங்கள் வெளியே செயல்படும் மற்றொரு சங்கத்துக்குத் தாசில்தாரால் தவறாகக் கொடுக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் தான் எங்கள் சங்க எல்லையில் வாழும் ஏழை மீனவத் தொழிலாளர்கள் பரபரப்படைந்து தாலுகா அலுவலகத்தில் விசாரித்துவிட்டு அவர்கள் ஊழியம் என்ற நிலையில் எனக்கு அறிவித்தார்களே தவிர, அன்பர் கடிதத்தில் கூறுவது போல் அல்ல.

மாநிலம் முழுமைக்கும் பொதுவான, நியாயமான அரசாங்க உத்தரவு இருக்க, அதற்கு மாறாக எங்கள் சங்க எல்லைக்கும் அடங்கிய குளங்களை வெளியே செயல்படும் சங்கத்துக்குக் கொடுத்திருந்ததால் அது பெரும் தவறு என்பதை அதிகாரிகளிடம் எடுத்துக் காட்டினோம். அவ்வாறு மாநில சர்க்கார் உத்தரவுக்கு மாறாகத் தனிச் சங்கத்துக்கு அதன் எல்லைக்கு வெளியேயுள்ள குளங்களைக் குத்தகைக்குக் கொடுத்தால்தான் அது தனிச் சலுகை, நீதிபெற்ற உதவி ஆகியவை தவறுகளாகும். தாசில்தாரின் உத்தரவின் நண்பரின் சங்கத்துக்கு அதன் எல்லைக்குட்பட்ட குளங்களும் எங்கள் சங்கத்துக்கு எங்கள் எல்லைக்குட்பட்ட குளங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது எவ்வாறு அநியாயமாகும்?

வடசேரி சங்கத் தலைவரின் புகாருக்கு அவர் கடிதத்திலேயே விடை தருகிறேன்: அதைத் தாங்கள் கவனியாமலே தேவரீர்களைக் கண்ணீர் வடிக்கச் சொல்லிவிட்டீர்களே. ''இந்தச் சங்கத்தின் எல்லை வடசேரி, நாகர்கோவில், வடிவீஸ்வரம் ஆகிய பகுதிகளாகும்'' என்பவர் தேரூர், மருங்கூர், சுசீந்திரம், பறக்கை, தெங்கம்புதூர் ஆகிய ஐந்து பகுதிகளில் உள்ள குளங்கள் கிடைக்கவில்லையே எனக் கோபம் கொள்வானேன்?

தேரூர்
11-3-65

பி. என். இராமசுவாமி
தலைவர், தென் குமரி கன் நாட்டுக் கூட்டுறவு மீனவர் சங்கம்.

அடுத்த இதழிலிருந்து 'கல்கி' தனிப் பிரதியின் விலை 30 காசிலிருந்து 35 காசாக உயரப் போவதை அறிந்தேன். இது குறித்து நான் கூறுவதற்கு முக்கியமான விஷயம் எதுவும் இல்லை. நம் அரசாங்கத்தின் பொறுப்பின்மையைப் பற்றியும், மக்கள் மேல் உள்ள வரிச் சுமையைப் பற்றியும், இந்தியைத் திணித்ததைப் பற்றியும் இது போன்ற மற்ற விஷயங்களைப் பற்றியும் நான் ஓரளவு அறிந்துள்ளேன். ஆகையால் பத்திரிகைக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையும் என்னால் ஓரளவு உணர முடிகிறது. அதே சமயத்தில் வாசகர்களாகிய எங்களுடைய துன்பங்களையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். ஏனெனில், வாசகர்களில் அநேகர் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்குத்தான் பத்திரிகைகளைப் படிக்க விருப்பம் அதிகமாக இருக்கும். என்னுடைய (ஏன், ஒவ்வொரு 'கல்கி' வாசகருடையதும்) ஒரே விருப்பம் என்னவெனில், நம்முடைய 'கல்கி' பத்திரிகை இதுவரையும் அரசியல், இலக்கியம் போன்ற துறைகளில் புரிந்து வந்த அருமையான பணிகளையே, இனிமேலும் புரிந்தும், தன்னுடைய சக்தியைக் கொள்கையில் ஒரு சிறிதும் மாறாமல் இருக்க வேண்டும் என்பதுதான்!

பெங்களூர்
3-4-65

கல்கி வாசகன் த. கணேசன்
(பி. யு. சி. மாணவன்)

நாம் குடியரசு நாட்டில்தான் வாழ்கிறோமா? அல்லது ஹிட்லர் போன்ற சர்வாதிகாரி நாட்டில் வாழ்கிறோமா என்ற சந்தேகமுண்டாகிறது. ஜனநாயக ஆட்சியாக இருந்தால் அங்கு மக்கள் உணர்ச்சி மதிக்கப்படும். மக்களுக்காகவே ஆட்சி நடைபெறும். ஆனால் இங்கு மக்களுக்காக ஆட்சி நடைபெறவில்லை. காங்கிரஸ்காரர்களின் சுயநல ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. இல்லாவிட்டால் இன்றைய ஹிந்திப் போராட்டம் நடைபெற்றிருக்க முடியுமா? சர்க்காரைக் குறைகூறுவதைவிடப் பொதுமக்களைத்தான் குறைகூற வேண்டும். நாட்டுக்கு நலம் பயக்கும் கட்சி காங்கிரஸ் ஒன்றே என்று வோட்டுப் போட்டார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்களோ தங்கள் கட்சி நலனுக்கும், கட்சியின் பணத்துக்கும் கைதூக்க அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டார்கள். காங்கிரஸ் மேலிடம் என்ன சொல்கிறதோ, அதற்குப் பணிந்து கைதூக்கும் பொம்மைகள் மக்கள் உணர்ச்சியை எங்கே மதிக்கப் போகிறார்கள்? மக்களுக்காகப் பரிந்து பேசினாலும் தங்கள் கட்சியிலே அவர்களுக்கு வேலை இல்லை.

இனியாவது மக்கள் தங்கள் தவற்றை உணர்ந்து ஆட்சி மன்றத்துக்குப் பொதுநலத் தொண்டர்களைத் தேர்ந்தெடுப்பார்களா?

மாயூரம்
15-2-65

இரா. பார்த்திபன்

தென் வியட்நாமின் சோதனை

உலக சமாதானத்தைக் குலைத்து மற்றொரு யுத்தத்தை உண்டாக்கி விடுமோ என்ற பீதியைத் தோற்றுவிக்கும் உலக அரங்கங்களுள் தற்போது முதலில் நிற்பது வியட்நாம் என்னும் நாடு. இங்கே தெற்கு வியட்நாமுக்கும் 17வது அக்ஷரேகைக்கு வடபாகத்திலுள்ள வட வியட் நாமுக்குமிடையே நடைபெற்று வரும் போர் ஒரு புதுமையான போர். இந்தப் போரின் உண்மைநிலையைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் வியட்நாம் நாட்டின் சரித்திரப் பின்னணியைப் பற்றியும் மக்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசியில் பிரான்ஸ் தேசத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டு, டோங்கின், அன்னம், கொச்சின் சீனா இம்மூன்று பகுதிகளும் பிரெஞ்சு இந்தோ சீனா என்ற அமைப்பில் அடங்கியிருந்தன. இரண்டாவது யுத்தத்துக்குப் பின்னர், கலவரம் நிறைந்த சூழ்நிலையில் ஹோ – சி – மின் என்பவரின் தலைமையில் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய அரசாங்கத்தை வியட்நாமில் ஏற்படுத்திக் கொண்டனர். முதலில் இதை அங்கீகரித்த பிரெஞ்சு அரசாங்கம், பின்னர் இவர்களுடன் போர் தொடங்கவும், நாடு அமைதியிழந்தது. எட்டு ஆண்டு காலம் இவ்வாறு பிரெஞ்சு ஆதிக்க அரசாங்கத்துக்கும் கம்யூனிஸ்டுப் படைகளுக்குமிடையே இடைவிடாது நடந்து வந்த கண்ணாமூச்சிப் போர் 1954 ஜெனிவா ஒப்பந்த மூலம் நிறுத்தப்பட்டது. ஹோ-சி-மின் கலந்து கொண்டு முடிந்துவைத்த இந்த ஒப்பந்தத்தின்படிதான் பதினேழாவது அக்ஷரேகையை மையமாகக் கொண்டு நாட்டைத் தென்பாதி என்றும் வடபாதி என்றும் பிரித்து, கம்யூனிஸ்டுப் படைகள் தென் பகுதிக்குள் ஊடுருவல் செய்யக்கூடாதென்றும், இதைக் கண்காணித்து அமைதியைப் பாதுகாக்க இந்தியா, கனடா, போலந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய பாதுகாப்புக் கமிஷன் ஒன்றும் அமைக்கப்பட்டது. 1956ம் ஆண்டுக்குப் பின் பொதுத் தேர்தல் நடத்தி அதன் முடிவுப்படி வியட்நாம் நாட்டின் பிற்கால அந்தஸ்தை நிச்சயிக்க வேண்டும் என்றும் ஜெனிவா ஒப்பந்தம் தெளிவுபடுத்தியிருந்தது. இந்தத் தேர்தல் இன்று வரையில் நடைபெறவில்லை. தென் வியட்நாம் சர்க்கார் ஜெனிவா ஒப்பந்தத்தை அங்கீகரிக்காததுதான் இதற்குக் காரணம். மற்றொரு காரணமும் உண்டு. வியட்நாம் சக்கரவர்த்தி பாவ்தாய்தான் சுதந்திர வியட்நாமின் உரிமை பெற்ற அரசர் என்று 1949ல் பிரெஞ்சு அரசாங்கம் அங்கீகரித்திருந்தது. பாவ்தாய் மன்னரின் உத்தரவுப்படிதான் 1954ல் ஙோ டின் டீம் ஒரு மந்திரி சபை அமைத்தார். படிப்படியாகத் தமது அதிகாரத்தை விஸ்தரித்துக் கொண்டு, 1955ம் ஆண்டு அக்டோபரில் தென் வியட்நாம் பகுதியைச் சுதந்திரக் குடியரசு நாடாகப் பிரகடனம் செய்து தம்மையே முதல் ஜனாதிபதியாகவும் அவர் நியமித்துக் கொண்டார். அரசியல் சட்ட சபையும் கூட்டப்பெற்று 1956ல் அமெரிக்க



அரசியல் மாதிரியில் அமைந்த அரசியல் சட்டமும் அமைப்புங்கூட அமுலாக்கப்பட்டன. எட்டு வருஷக் கலகங்களுக்கும் கலவரங்களுக்கும் பின் ஓரளவுக்கு அரசியல் அமைதி இந்தப் பகுதியில் ஏற்பட்டது.

ஆனால் அமைதி நிலைத்து நிற்கும்படி வட வியட்நாமின் கம்யூனிஸ்டு அரசாங்கம் விட்டு வைக்கவில்லை. கம்யூனிஸ்டுகளின் ஆதிக்க ஆசைதான் காரணம். நாட்டின் ஜனத்தொகை 310 லட்சம் மக்கள்; இரண்டு பகுதியிலும் சம அளவுக்கு இவர்கள் பிரிந்து வாழ்கின்றனர். 1,26,000 சதுர மைல் பரப்புள்ள நாடும் ஏறக்குறைய சம பாகமாகவே துண்டிக்கப்பட்டிருக்கிறது. தென் பகுதியின் 63,000 சதுரமைல் பரப்பில்

165 லட்சம் சுதந்திர வியட்நாம் மக்களும், வடபகுதியில் 145 லட்சம் கம்யூனிஸ்டுகளும் வாழ்கின்றனர்.

வட பகுதியில் மற்ற கம்யூனிஸ்டு நாடுகளில் நடைபெறுவது போலவே ஆட்சியின் கடுமையும் கட்சியின் கட்டுப்பாடும் அதிகம். தென் பகுதியில் அவ்விதம் இல்லை. பத்தில் எட்டுப் பேர்கள் மட்டுமே வியட்நாமியர்கள். இவர்கள் சீன மக்கள் பண்பாட்டைப் பின்பற்றுபவர்கள். மற்ற இரண்டு பேர்கள் அந்த நாட்டு ஆதிவாசிகளும் மற்றவர்களும். பத்து லட்சம் ஜனத்தொகையுள்ள மாண்டக் னார்டுகள் (Montagnards) என்பவர்கள் இவர்களில் முக்கியமானவர்கள். இவர்களுக்கு வியட்நாம் சர்க்காரிடம் எப்போதுமே சிறிது அவநம்பிக்கை; தங்களுடைய நலன் பூரணமாகக் கவனிக்கப்படுவதில்லை என்பதாக. இவர்கள்தான் கம்யூனிஸ்டுகளின் ஊடுருவல்களுக்குப் பக்கபலமாக விளங்குபவர்கள். இவர்களைத் தவிர சுமார் எட்டரை லட்சம் தென் வியட்நாம் பிரஜா உரிமை பெற்ற கம்யூனிஸ்டுகளும் இங்கே வாழ்கின்றனர். வடபகுதியின் ஊடுருவல்களுக்குத் தென்பகுதியில் முன்னணியாக இவர்கள் அமைந்துள்ளனர்.

நாட்டுப் பிரிவினை மூலம் ஹோ-சி-மின் கம்யூனிஸ்டு அரசாங்கத்துக்குத் தொழில் வளம் மிகுந்த வட வியட்நாம் பிரதேசம் கிடைத்தது. ஆனால் உணவுப் பொருள்கள் குறைவு. தென் வியட்நாம் பகுதியில் விவசாய வளம் அதிகம். ரப்பர்த் தோட்டங்களும், ஏற்றுமதி வாணிபமும், உணவுக் களஞ்சியம் என்று சொல்லும் அளவுக்கு வளமுள்ள பிரதேசம். வட பகுதியில் சீனாவில் அமுலாக்கப்பட்டது போன்ற 'நிலச் சீர்திருத்தங்'களின் — நிலப் பிரபுக்களுக்குத் தொந்தரவுகள், கட்டாயகூட்டுறவு இத்தியாதி — தீவிரம் அதிகம். செஞ்சீனாவிடமிருந்தும் சோவியத் ருஷியாவிலிருந்தும் கணிசமான அளவில் பண உதவியும், இதர ஒத்தாசைகளும் இந்தப் பகுதிக்குத் தாராளமாகக் கிடைத்து வருகின்றன. கம்யூனிஸ்டு ஆட்சிகளின் கெடுபிடிகளிலிருந்து தப்பித் தென் பகுதிக்கு ஓடிவிட்ட வியட்நாம் மக்கள் சுமார் பத்து லட்சம் பேர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஜெனிவா ஒப்பந்தப்படி 1954ல் தமது படைகள் தென் பகுதியை விட்டுப் பின் வாங்கி வட பகுதிக்குச் சென்றபோது ஹோ சி-மின் ஆயிரக் கணக்கான 'சகாக்களை'யும், கையாட்களையும், ராணுவ அணிகளைத் தலைமை தாங்கி நடத்தும் வீரர்களையும் தென் வியட்நாமிலேயே மறைந்து வாழச் சொல்லிச் சென்றார். இவர்கள்தாம் "வியட் — காங்" என்று சொல்லப்படும் கொரில்லா கலகக் கும்பல். இவர்களுடைய எண்ணிக்கை 1956ம் ஆண்டுக்குப் பின் பெருமளவு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. 1956ல் தேர்தல் நடந்தால் நாடு முழுவதையும் எப்படியாவது தமது கைக்குள் போட்டுக் கொண்டுவிடலாம் என்று நம்பி வந்த ஹோ சி-மின் பொதுத் தேர்தல் நடைபெறாததாலும், தென் பகுதி சுதந்திரமாகத் தனி வழி சென்று தனது பலத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு விட்டதாலும், தமது எண்ணங்கள் முறியடிக்கப்பட்டு விட்ட ஆத்திரத்தால், 'இதர' நடவடிக்கைகள் மூலம் தென் வியட்நாமைக் கபளீகரம் செய்யத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறார்.



வடபகுதியில் உள்ள ஹனாயும் (Hanoi) நகரம்தான் இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் தலைமை ஸ்தானம். ஆட்களை அனுப்பி வைப்பது, பயிற்சியளிப்பது, அவர்கள் செல்ல வேண்டிய மார்க்கங்களை வரையறை செய்வது; நேரடி மார்க்கங்கள் துண்டித்துப் போனால் அண்டை நாடான லாவோஸ் எல்லைக்குட் புகுந்து, தென் வியட்நாமுக்குச் செல்லும் வழி வகைகள், அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள், செய்முறைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பது-எல்லாம் ஹனாயும் நகரத்திலிருந்து போர்த்தளத் தளபதிகள் உத்தரவுகளிடுவது போல் நடைபெற்று வருகிறது. இதனுடைய கடுமை சமீப காலத்தில் அதிகரித்து விட்டது. சர்வதேசக் கமிஷன், இம்மாதிரி ஊடுருவல் நிகழாமல் பார்த்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டது. ஆனால் செயலற்றுப் போய் விட்டது. அதனுடைய செல்வாக்கும் கௌரவமும் புறக்கணிக்கப்பட்டு விட்டன. இதனால் இக்கமிஷனில் தலைமை ஸ்தானம் வகிக்கும் இந்தியாவுக்கும் ஓர் அடி.

கையாட்கள் மூலமும், கொரில்லாப் படையினர் மூலமும் மறைமுகமாக இது



வரையில் நடைபெற்று வந்த போர் எதிர்பார்த்தபடி பலனளிக்காமல் போகவே, இப்போது வடவியட்நாம் அரசாங்கம் பகிரங்கமாகவே முன்னுக்கு வந்து போரை நடத்துகிறது. இதற்குப் பக்கபலமாகச் சீனாவும் துணை நிற்கிறது.

தென் வியட்நாமுக்கும் வடவியட்நாமுக்கும் நிகழும் போரைப் பற்றி உலகம் ஏன் கவலை கொள்ள வேண்டும்? முக்கியமாக அமெரிக்க அரசாங்கம் ஏன் கவலை கொள்ள வேண்டும்? தங்கள் சுதந்திரத்தையும், தனித்தன்மையையும் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பைத் தென் வியட்நாம் மக்களுக்கும் சர்க்காருக்கும் விட்டு விட்டால் என்ன? இம்மாதிரி கேள்விகள் எழவே செய்கின்றன. இவ்விஷயத்தில் அமெரிக்காவுக்குஅக்கறை உண்டு. நாடு பிடிக்கும் ஆசை அல்ல; மக்கள் சுதந்திரத்தையும், சுதந்திரப் பண்பாட்டையும் வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் ஆசை. இதை 1960ம் ஆண்டில் ஜனாதிபதி ஐசன்ஹோவர் தெளிவாகவே விளக்கி வைத்தார். ''தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு எப்போதுமே தென் வியட்நாம் மக்களைச் சேர்ந்தது என்றாலும் அதன் முயற்சிக்கு எங்களுடைய பலம் உபயோகமுள்ளதாக இருக்கும் வரையில் தென் வியட்நாம் அரசாங்கத்துக்கு உதவி தொடர்ந்து அளிக்கப்படும்'' என்று அவர் சொன்னார். இதே முறையில் ஜனாதிபதி கென்னடியும் 1961ல் சொல்லியிருக்கிறார். இப்போது ஜனாதிபதி ஜான்சனும் இதே போலத்தான் தமது கொள்கையை விவரித்திருக்கிறார். கம்யூனிஸப் பீதியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள 1953ம் ஆண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை (Seato) அமைப்பில் அமெரிக்காவும் சேர்ந்துள்ளது. இதன்படி, தென்வியட்நாமின் பாதுகாப்புக்கு ஊறு ஏற்பட்டால் அமெரிக்கா தனது பாதுகாப்புப் பலத்தைக் கொடுத்து உதவ அது கடமைப்பட்டிருக்கிறது. நேரடியாகக் கையெழுத்திட்ட ஸீட்டோ நாடுகளில் ஒன்றாகத் தென் வியட்நாம் இல்லாவிட்டாலும், அந்த நாடுகள் பிரத்தியேகமாகச் செய்துகொண்ட தனிப் பிரகடனத்தின்படி தென் வியட்நாமுக்கும் பாதுகாப்பு அளிக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன.

தவிர, 1950ம் ஆண்டு தென் வியட்நாமுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படியும் பின் ஆண்டுகளில் கையெழுத்தான இதர ஏற்பாடுகளின்படியும் தென்வியட்நாம் ராணுவத்துக்கும் பயிற்சிகள் அளிப்பது, ஆலோசனைகள் கூறுவது, நிபுணர்களைக் கொண்டு ராணுவத்தை (தரைப் படை, கப்பற் படை, விமானப் படை இம்மூவகையும்) பலப்படுத்துவது ஆகியவற்றை அமெரிக்கா செய்து வருகிறது. பல அமெரிக்க ராணுவ அதிகாரிகள், ஆலோசகர்கள் என்ற முறையில் தென் வியட்நாமில் இருக்கின்றனர். தென்வியட்நாமின் விவசாய தொழில் வளர்ச்சிக்கும் அமெரிக்கா பொருளாதார உதவி செய்து வருகிறது.


சமீப நாட்களில் வட வியட்நாமின் ஆக்கிரமிப்புகளும், ஊடுருவல்களும் மிகமிகக் கடுமையாகி விட்டன.

சமீபத்தில் தென் வியட்நாம் கடற்கரை யோரம் ஒரு கப்பல் வந்து நின்றது. தென் வியட்நாம் ராணுவத்தினர் அதை அணுகிய போது அதிலிருந்து குண்டுகள் பொழிந்தன. கடுமையான மோதலுக்குப் பின் அந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டது. சோதனை போட்டதில் அதில் ஆயிரக் கணக்கான டன்கள் சீன, வட வியட்நாம், செக்கோஸ்லோவேகியா நாடுகளில் தயாரான துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இப்படிப் பல பொருள்கள் கிடைத்தன. இவைகள்தாம் வியட்காங் கொரில்லா வீரர்களுக்கு வட வியட்நாம் அனுப்பியுள்ள ஆயுதங்கள். இப் படையினர் ஆயிரக்கணக்கான உள்நாட்டு அதிகாரிகளைக் கொன்றிருக்கிறார்கள். பள்ளி ஆசிரியர்கள் பலர் அவர்களால் துன்பத்துக்குள்ளாகியிருக்கின்றனர். கிராமச் சிறுவர்களைக் கடத்திச் சென்று பெற்றோர்களைப் பயமுறுத்திப் பணம் பறிக்கும் திறமை உள்ளவர்கள். கிராமங்களிலும், நகரங்களிலும் கொலை, கொள்ளை, பலாத்காரம், அக்கிரமங்கள் பல புரிந்து நாட்டை அமைதி இழக்கச் செய்தவர்கள். இவைதான் இவர்களுடைய போர் முறை. இவற்றின் மூலம் தென் வியட்நாம் அரசை முற்றிலும் அழித்து ஒடுக்கிவிட முடியாவிட்டாலும் அமெரிக்கர்களையாவது நிம்மதி குலையச் செய்து, நாட்டை விட்டு வெளியேற்ற முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

கம்யூனிஸ்டு ஊடுருவலுக்கு எதிராகப் பாதுகாப்பு நடவடிக்கை பயனற்றுப் போனதால் நேரடி நடவடிக்கை அவசியமாகிறது.

இதைத்தான் தென் வியட்நாம் அரசாங்கம் தீவிரமாக, அமெரிக்க உதவியுடன் செய்து வருகிறது. தென் வியட்நாம், வடவியட்நாம் மீது படையெடுத்துப் போர் தொடுக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. வடவியட்நாம் அனுப்பியுள்ள கலகக்காரர்களை ஒடுக்குவதும், அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டு வரும் ஆயுதக் கிடங்குகளை அழிப்பதும்தான் தென்வியட்நாம் கொண்டுள்ள நடவடிக்கை. ஆயுதக் கிடங்குகள் வட வியட்நாம் எல்லைக்குள் இருப்பதால் அவற்றைச் செயலற்றுப் போகும்படி செய்ய எல்லை கடந்து விமானங்கள் பறந்து குண்டு வீச வேண்டிய நிர்ப்பந்தமும் அடிக்கடி ஏற்பட்டது.

வியட்நாம் போரில் தனித்து நிற்பது இரண்டு அம்சங்கள். முதலாவது வடவியட்நாம் கம்யூனிஸ்டு அரசாங்கத்தின் ஆதிக்க வெறி. இதற்குச் செஞ்சீனாவின் ஆதரவு பூரணமாகக் கிடைத்து வருகிறது. இதற்கு வேண்டிய ஆதாரங்கள் ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. தென் வியட்நாம் பகுதிகளில் இருந்துகொண்டே அரசாங்கத்தைக் கவிழ்க்க எடுக்கப்படும் எல்லாவித நடவடிக்கைகளும் ஹனாய் அரசாங்கத்தின் நேரடித் தலைமையில் நடைபெறுகிறது என்பது வெட்ட வெளிச்சம். இரண்டாவது தென் வியட்நாமுக்குள் கம்யூனிஸ்டு ஆதிக்க விஸ்தரிப்பினால் தென்கிழக்கு ஆசியாவுக்கே ஆபத்து. சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்று இச்சை கொண்டுள்ள இதர நாடுகளுக்கு ஆபத்து. இதனால்தான் தனது சுதந்திரத்துக்காகப் போராடும் தென்வியட்நாமுக்கு அமெரிக்க அரசாங்கம் எல்லா வகையிலும் உதவி அளித்து அவர்களுடைய பலத்தை அதிகரிக்கச் செய்கிறது. சுதந்திர வாழ்க்கையில் நம்பிக்கையுள்ள எல்லா நாடுகளுமே தென் வியட்நாமுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். —எம். எஸ். வேலுசாமி.



"பொசிப்பு"



பி.எஸ்.ராமையா

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ரத்தினம், "அடப் பாவி! அவனே இங்கே கூப்பிடுங்க எஜமான். நான் கேக்கிறேன். என் மக தலையிலே கை வைக்க வேறு மானுரும் சொல்லிறேன். அவ்வளவும் போய். அவன்தான்...." என்று தொடங்கினன்.

டிபுடி கமிஷனர், "இந்தா கூச்சல் போடாதே" என்று அவனே அடக்கி, "நீங்கள் சொல்வது மெய்யா அல்லது அவர்கள் சொல்வதா என்பது கோர்ட்டில் முடிவாக வேண்டியது. ஆனால் நாங்கள் அந்த முறையீட்டின் மேல் நடவடிக்கை எடுத்துத் தான் தீரவேண்டும். உங்கள் மூவரையும் பிடித்து அடைத்து...." என்றார்.

அவர் சொல்ல நினைத்ததைச் சொல்லி முடிக்க விடவில்லை ரத்தினம். "வேண்டாம் எஜமான். எங்களை ஜெயிலுக்குள்ளே தள்ளி விடாதீங்க. நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படி நடந்துக்கிறோம்" என்று கதறினன். டிபுடி கமிஷனர் வெகந்நாதத்தின் தந்தை யைக் கலந்துகொண்டு ஒரு ராஜி வழி காட்டினர். ஒரு லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு முத்துலட்சுமி வெகந்நாதத்துக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட வேண்டும். அவளுடைய நன்மைக்குப் பொறுப்புடைய பெரியவர்கள் என்ற முறையில் ரத்தினமும், பொன்னையாவும் அதில் கையெழுத்துப் போட வேண்டும் என்றார். ரத்தினம் அந்த தொடியிலேயே அதற்கு இசைந்து விட்டான். அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் ஒடு ஒடுத்துப் போயிருந்தார்கள்.

அரை மணி நேரத்துக்குள் வெகந்நாதமும் அவன் தந்தையும் அவர்களுடைய வக்கீலுடன் வந்து சேர்ந்தார்கள். முத்துலட்சுமியும் வரவழைக்கப்பட்டாள். அந்த இடைப் பொழுதில் பொன்னையா ரத்தினத்திடம் "போலீஸ்கே சொல்லிக்க நம்மை மெரட்டிப் பார்க்கிறாங்க; நாமும் நல்ல வக்கீலாக வைப் போம். மெரட்டலுக்குப் பயந்து ஒடுறோம்னு தெரிஞ்சுக்கிட்டா நல்லா ஏமாத்திடுவாங்க" என்று ரகசியமாகச் சொன்னார். ஆனால் அவனுடைய சொற்கள் ரத்தினத்தின் நெஞ்சைக் கவ்விப் பிடித்திருந்த அச்சத்தைத் தாண்டி உள்ளே புகவேயில்லை. பொன்னையா அதை மேலும் இரண்டு முறை திருப்பித் திருப்பிச் சொன்ன பிறகு ஓர் அளவு புரிந்து கொண்டான். உடனே அவன் பொன்னையாவின் மேலே சீறிப் பாயத் தொடங்கி விட்டான். "உன் பேச்சைக் கேட்டு மகளைக் கூட்டிக்கிட்டு வீட்டை விட்டு வெளியேறி வந்ததனாலே ஜெயிலிலேயும் அடைச்சுப் பார்த்துத்தான் விடறதுன்னு கச்சை கட்டியிருக்கையா?" என்று கேட்டு விட்டான்.

ஆங்கிலத்தில் தட்டெழுத்தில் எழுதியிருந் ததைப் படித்து வக்கீல் ரத்தினத்துக்கும் பொன்னையாவுக்கும் விளக்கிச் சொன்னார். முத்துலக்ஷ்மிக்கும் வெகந்நாதத்தைப் பிடிக்காத தால், தாயின் கட்டாயத்தின் மேல் நடத்தி வைக்கப்பட்ட அந்தத் திருமணக் கட்டு விருந்து விடுபட விரும்புவதாகவும் அதனால் வெகந்நாதத்தின் தந்தை மனமுவந்து அளிக் கும் ஒரு லட்சம் ரூபாயை ஈடாகப் பெற்றுக் கொண்டு வெகந்நாதத்துக்கு விடுதலை அளித்து விலகிப் போவதாகவும் அதில் எழுதியிருந் தது. "அடப் பாவிங்களா...?" என்று முணுமுணுத்தார் பொன்னையா. ரத்தினம் அவரைக் கண்ணால் மிரட்டி அடக்கினன். முத்துலட்சுமிக்கு என்ன நடக்கிறது என்பது புரிந்தது. ஆனாலும் அதை எதிர்த்து அல்லது மறுக்கும் போக்குத் தோன்றவேயில்லை. வக்கீல் காட்டிய இடத்தில் ஒரு கையெழுத்துப் போட்டாள். தொடர்ந்து ரத்தினமும், பொன்னையாவும் கையெழுத்துப் போட்டனர். வக்கீல் சாட்சிக் கையெழுத்துப் போட்டார். அவர்களுக்கும் அந்தப் பத்திரத்தின் நகல் ஒன்றைக் கொடுத்தார்கள்.

அதன் பிறகு வக்கீல் அவர்கள் மூவரை யும் அழைத்துக் கொண்டு ஒரு பாங்கிக்குப் போனார். பாங்கில் முத்துலட்சுமியின் பெய ரால் ஒரு லட்சம் ரூபாய் கட்டி ஒரு கணக் குத் தொடங்கி வைக்கப்பட்டது. அங்கேயும் முத்துலட்சுமி இரண்டு மூன்று கையெழுத் துக்கள் போட்டாள். அவள் அதே மாதிரி கையெழுத்துப் போட்டு செக் கொடுத்தால் பாங்கில் ஒரு லட்சம் ரூபாயும் கொடுப் பார்கள் என்றார். அவளைத் தவிர வேறு யாரும் அந்தப் பணத்தில் ஒரு ரூபாயைக்

கூட எடுக்க முடியாது என்றும் ஒரு முறைக்கு இரண்டு முறையாகச் சொன்னார் வக்கீல்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் செகந்தரம் அமர்த்தியிருந்த வீட்டை விட்டு வெளியேறி ஒரு தனி வீட்டில் குடியேறினார்கள். மேலும் இரண்டே மாதங்களில் முத்துலட்சுமி மனம் தேறி, செகந்தரத்தை மறந்துவிட்டு நாடகத் தொழிலுக்குத் திரும்பி விடுவாள் என்று நம்பினான் ரத்தினம். பொன்னையாவிடமும் அதைச் சொன்னான். அவள் நாடக மேடைக்குத் திரும்பிப் போக விரும்பாவிட்டால் அவளைச் சினிமாவில் நடிக்கச் சேர்த்து விடுவது என்றும் அவர்கள் இருவரும் திட்டம் போட்டார்கள். அதற்கு யாரைப் பிடிக்க வேண்டும், எப்படிச் செய்து முடிக்க வேண்டும் என்பதை யெல்லாம் யோசித்து வழி வகைகளைத் தெளிவு செய்து கொண்டார்கள்.

ஆனால் முத்துலட்சுமி தான் இரண்டு துறைகளிலும் நடிக்கப் போவதில்லை என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். அவள் வாய் விட்டு அழவுமில்லை; யாருடன் சண்டை போடவும் இல்லை. பிரமை பிடித்தவள் போல் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டே யிருந்தாள்.

அந்த நேரத்தில்தான் கிராமத்திலிருந்து கன்னையா இறந்து விட்டதாகத் தந்தி வந்தது. மூவரும் கிராமத்துக்குப் போய் விட்டுத் திரும்பினார்கள். முத்துலட்சுமியின் மனத் தெளிவை எதிர்பார்த்து ரத்தினம் மேலும் ஓராண்டுக் காலம் சென்னையில் தங்கினான்.

அவர்கள் வீட்டில் வேலை செய்ய வந்து சேர்ந்த மதுராம்பாள் மட்டும் எப்படியோ முத்துலட்சுமியின் உள்ளத்தில் ஒரு சிறு அன்பை எழுப்பி விட்டாள். முத்துலட்சுமி அவளிடம் மட்டும் சிறிது வாய் விட்டுப் பேசுவாள். அவள் சொல்லும் ஊர் நடப்பு விவகாரங்கள், கதைகளை யெல்லாம் கேட்பாள். மதுரம் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியாகவே ஆகிவிட்டாள். அவள் கருவுற்றுப் பேறுகாலம் கிட்ட வந்தபோது முத்துலட்சுமி தன் தாயிடம், "மதுரம் பேறுகாலத்துக்கு ஆஸ்பத்திரிக்குத்தான் போகணுமாம். அங்கே சரியாகவே கவனிக்க மாட்டாங்களாம். நீ அவகூடப் போயி எவ்வளவு பணம் ஆனாலும் செலவு செஞ்சு அவளை நல்லபடியாகக் கவனிக்க ஏற்பாடு செய், அம்மா!" என்றாள்.

ரத்தினம் மதுரத்துடன் ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கிருந்த பெரிய நர்ஸைப் பிடித்துச் செய்ய வேண்டியதைச் செய்தான். மதுரத்துக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு ஒன்றே கால் ஆண்டுக்குப் பிறகு முத்துலட்சுமி முதல் முதலாக வாய் விட்டுச் சிரித்தாள். அவளிடம் தோன்றிய அந்தக் களிப்பு பத்து நாட்கள் கூட நீடிக்கவில்லை. பிள்ளை பெற்ற எட்டாம் நாள் ஏதோ கோளாறினால் மதுரம் இறந்து விட்டதாகச் செய்தி வந்தது.

முத்துலட்சுமி வாய் விட்டு அழுதாள். மதுரத்தின் குழந்தையைத் தாங்களே எடுத்து வளர்க்கலாம் என்று யோசனை



சொன்னார் பொன்னையா. அந்தக் குழந்தை முத்துலட்சுமியின் மனத்தை மாற்றிவிடும் என்று அவர் நம்பினார்.

ரத்தினமும் பொன்னையாவும் மதுரத்தின் கணவன் செல்வராஜனிடம் போய்க் குழந்தையைத் தங்களிடம் வளர விடும்படி கேட்டார்கள். அவன், "என் மகளைக் காப்பாத்த எனக்குச் சாமர்த்தியம் இல்லேன்னு? கூத்தாடுறவங்க வீட்டுலே வளர்றதுக்குப் பெறந்தவளில்லே என் மகள்" என்று முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டான்.

மதுரம் இறந்ததிலிருந்து முத்துலட்சுமியின் போக்கு முன்னிலும் மட்டமாகிவிட்டது. முன்பெல்லாம் பசியெடுத்தால் தானாகவே சாப்பிட வருவாள். தாயிடம் சோறு போடு என்று கேட்பாள். இப்போது, "உனக்குப் பசிக்கும். சோறு தின்ன வா" என்று சொல்லி வற்புறுத்தி அழைக்க வேண்டியிருந்தது.

அவளைக் கிராமத்துக்கே திரும்பி அழைத்துக் கொண்டு போய் விடலாம் என்றார் பொன்னையா. ரத்தினம், "இந்த மகளைக் கூட்டிக்கிட்டுப் போய் நான் ஊர்க்காரங்க மொகத்துலே முழிக்க மாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். ஆனால் வேறு எங்காவது போய்ச் சுற்றுவட்டம் மாறினால் முத்துலட்சுமியின் மன நிலை மாறலாம் என்ற கருத்தை ஒப்புக் கொண்டாள். அவள் நாடகத் தொழில் தொடங்கிய சேலத்துக்கே போய்க் குடியேறுவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

ஜெகந்நாதத்துடன் முத்துலட்சுமிக்கு மணம் நடக்கும் முன் கிடைத்த வகையில் ரத்தினம் ஒரு பத்துப் பன்னிரண்டாயிரம் ரூபாய் வரை சேர்த்து வைத்திருந்தாள். அவர்கள் மூவருக்குமாக அந்த எளிய வாழ்க்கைக்கு அதிகச் செலவும் பிடிக்கவில்லை. ஆனால் பாங்கிலிருந்த பணம் வட்டி சேர்ந்து உயர்ந்து கொண்டே இருந்தது. எப்போதாவது தேவைப்பட்டால் முத்துலட்சுமியைக் கையெழுத்துப் போடச் சொல்லி பாங்கிலிருந்து இருநூறு, முந்நூறு என்று வாங்குவார்கள். அதுவும் எப்போதாவதுதான்.

சேலத்துக்குப் போய்ச் சேர்ந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முத்துலட்சுமியின் மனம் தெளிந்து வரும் அறிகுறிகள் தோன்றின. பொன்னையாவும் ரத்தினமும் தெய்வங்களுக்கெல்லாம் நன்றி சொல்லி அந்தத் தெளிவை வளர்த்து முழுமையாக்க அரும்பாடுபட்டார்கள்.

மனத் தெளிவு பெற்ற முத்துலட்சுமி தன் தாயிடமும் மாமனிடமும், "என்னை இப்படி ஒன்றுக்குமே ஆகாமே பண்ணி அடிச்சுட்டீங்களே ரெண்டுபேரும் சேர்ந்து" என்றாள்.

ரத்தினம், "மண்ணும் ஆகல்லே, மரமும் ஆகல்லே. இன்னும் இருபத்தி நாலு வயது நெறையலே. இப்போகூட சின்னு ஒரு சொல் சொல்லு. உன்னை உச்சாணிக் கொப்புலே ஏத்தி வைக்கக் காட்டறேன். அவன் கெடக்குறான் பறுதை. அவனை மறந்துவிடு" என்றாள்.

முத்துலட்சுமி, "என்னுலே முடியலியே, அம்மா!" என்று சொல்லி அழுதாள். மாமனிடம், "நீ போய் இப்போ அவரைப் பாரேன், மாமா. இல்லாவிட்டால் என்னை அவர்கிட்ட அழைத்துக்கிட்டுப் போ" என்று கெஞ்சினாள்.

பொன்னையா அவள் கேட்டபடி ஜெகந்நாதனைப் போய்ப் பார்த்து வரத்தான் விரும்பினார். ஆனால் ரத்தினம்தான் தடுத்து விட்டாள். "மறுபடியும் அது ஒட்டாது, பொன்னையா. அவங்க பணத் திமிரிலே நம்பளை அவமானப்படுத்தித் துன்புறுத்தினதும் துன்புறுத்துவாங்க. இவ விவரம் புரியாமல் பேசறா. நீ பாட்டுலே சரி சரின்னு சும்மா இரு" என்று தடை போட்டாள்.

மகளிடம் அவள், "அவங்க அப்பன் பேச்சைக் கேட்டு அப்படிப் போய் வாக்கு மூலம் கொடுத்தவன் இப்போ நீயாகப் போனா உன்னை அவன் காலடி மண்ணுக்குத்தான் மதிப்பான். நான் சொல்றதைக் கேளு. மறுபடியும் நாடகத்துலே இறங்கு. வேண்டாம்னா சினிமாவிலே சேர்ந்துக்க. ஒரே வருடத்திலே அவனே உன் காலடியிலே வந்து விழுவான் பாரு" என்று ஆசை காட்டித் தூண்டினாள்.

ஆனால் முத்துலட்சுமி அதற்கு இசையவே இல்லை. பேரும் புகழும் பெற்று, ஊர்ப் பெண்களெல்லாம் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு ஒளி வீசி, போக போக்கியங்களை அனுபவிக்கத் தகுதி பெற்ற மகள் அப்படிப் பிடிவாதமாக முடியாதென்கிறாளே என்ற ஏக்கத்திலேயே ரத்தினம் கண்ணை மூடினாள்.


தாய் என்ற தடைக் கட்டு விலகியவுடன் ஜெகந்நாதனைப் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி முத்துலட்சுமி மாமனை விரட்டினாள். பொன்னையா போய் வந்து, "உன்னை ஒதுக்கி அனுப்பிவிட்டு அந்தப் பையனுக்கு அவங்க வகையிலே ஒரு பெண்ணைக் கட்டி வச்சிருக்காங்க. இன்னும் கொழந்தை குட்டி ஒண்ணும் இல்லே. இப்போ அவன் தான் தொழிலை நடத்தறான். ரெண்டு நாள் அவன் ஆபீஸ் வாசல்லேயும், ஒரு நாள் வீட்டு வாசல்லேயும் காத்துக் கிடந்து, கடைசியிலே அவனைப் பார்த்தேன் முத்து. ஒரே ஒரு நிமிஷம்தான் நின்னு பேசினான். நான் யாரு எதுக்காக வந்தேன்கிறதைச் சொன்னவொடனேயே சிரிச்சு, 'அது ஏதோ அறியாப் பிள்ளை விளையாட்டுலே செய்த தப்பு. அவளுக்குத்தான் வாழ வழி செய்து பணம் கொடுத்தாச்சே. நான் அவளை எப்போதோ மறந்துட்டேன்'னு சொல்லிட்டுப் போயிட்டான். வீட்டு வாசல்லே காவல் நிக்கிற கூர்க்காக்காரன் 'ஜாவ் ஜாவ்'னு என்னை வெளியே தள்ளி இரும்புக் கம்பிக் கதவை அடைச்சுப்பிட்டான்" என்றார்.

முத்துலட்சுமி விம்மி விம்மி அழுதாள். இடையில் ஒரு நாள் பொன்னையாவிடம், "நானே அவரைப் போய்ப் பார்த்துக் கேட்கிறேன்" என்று சொல்லிக் கிளம்பத் தயாராகிவிட்டாள். அவளை அடக்கி அவள் கருத்தை மாற்றுவது பொன்னையாவுக்குப் பெரும் பாடாகி விட்டது.

அதன் பிறகு அவள் அழுவதை நிறுத்தி விட்டாள். திருநாளைப் போவாரைப்போல்,

குளிர்ந்த காற்றைத் தருகிறது

ராலிஃபேன்



ஒவ்வொரு ராலிஃபேனும் 2 வருட உத்தரவாதத்துடன் வருகின்றன. இன்றைய தேதியில் மிக நம்பகமான மேஜை விசிறி இதுவே என்பதை நிரூபிக்கும் மிகக் கடும் பரிசோதனைகளில் தேறியதாயிற்றே.

ராலிஃபேன் வகைகளைப்பற்றி மேலும் விவரங்கள் தேவையா? இதோ உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து, "ராலி ஹாப்லண்ட் லிமிடெட், 21, ரவெலின் ஸ்ட்ரீட், பம்பாய்" என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

ராலிஃபேன்களைப்பற்றிய முழு வர்ண இலவச வெளியீட்டை எனக்கு அனுப்புமாறு கோருகிறேன்.

பெயர் ....

....

விலாசம் ....

....

சென்னை, கேரளம் ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் மஹமத் இப்ராஹீம் & கோ.,
ப்ரைவேட் லிமிடெட்.
7/8, மவுண்ட் ரோட், சென்னை.

"ஒரு நாள் நான் அவர் முன்னே போய் நின்று என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டது நியாயம்தானான்னு கேட்கத்தான் போறேன்" என்று இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அவள் செகந்தரத்துக்கு விடுதலை அளித்து ஒதுங்கி வந்து ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் ஆனபொழுதில்தான் அந்தக் கருத்து செயலாக மாறுமளவுக்கு அவள் மனம் கெட்டுப்பட்டு வலுப்பெற்றது. பொன்னையாவிடம், "நாளைக்கு நான் சென்னைக்குப் புறப்பட்டுப் போகிறேன். அவர் அங்கே இல்லை என்றால் எந்த ஊரில் இருந்தாலும் தேடிக் கொண்டு போய்ப் பிடித்து 'என் தலையெழுத்து இவ்வளவுதானா?' என்று கேட்கப் போகிறேன்" என்று உறுதியான குரலில் சொன்னாள். "நீ என்கூட வர விரும்பினால் வா. இல்லையென்றாலும் சரிதான். நான் போகத்தான் போகிறேன்" என்றும் பிடிவாதமாகச் சொன்னாள்.

கண்ணாடியில் தெரிந்த முகத்தைக் கால் நிமிஷ நேரம் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். "என் முகம் மட்டும்தான் மாறிப் போயிருக்கிறதா? அவரும்தான் மாறியிருப்பார்" என்று தனக்குத்தானே தேறுதல் சொல்லிக் கொண்டு எழுந்தாள். அங்கிருந்தே "என்ன மாமா, என்கூடப் புறப்பட விருப்பமா, இல்லையா?" என்று கேட்டாள்.

பொன்னையாவும் இருந்த இடத்திலிருந்தே, "இத்தினி காலமும் உன்னைக் கட்டிக் காவல் காத்துக்கிட்டிருந்துட்டு இப்போ மட்டும் ஒதுங்கிட முடியுமா? வரேன் முத்து. என்ன ஆகுதோ, பார்ப்போம்!" என்றார்.

சென்னையில் அவள் போக்கைக் கண்ட பொன்னையா, 'எத்தனை ஆண்டுகளாக இவள் இதைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து மனசுக்குள்ளேயே என்னென்ன செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும்' என்று எண்ணித் திகைத்தும் போய்விட்டார்.

சென்னைக்குப் போனவுடன் முத்து லட்சுமி இருபதினாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதி எடுத்துக் கொண்டு மாமனுடன் தானே பாங்குக்குப் போய் மாற்றினாள். நகரில் பெரிய ஹோட்டலில் அறை எடுத்தாள். கடைத் தெருவுக்குப் போய்த் துணிமணிகள், அலங்காரப் பொருட்கள் எல்லாம் வாங்கி வந்திருந்தாள். தன்னிடம் இருந்த நகைகளை யெல்லாம் எடுத்து அணிந்து கொண்டாள். சிலவற்றை மாற்றினாள். நடப்புப்பாணி நகைகள் சிலவற்றைப் புதிதாக வாங்கினாள். அறையில் அவள் கண்ணாடிக்கு எதிரில் மணிக் கணக்கில் உட்கார்ந்து அலங்காரம் செய்து கொள்ளுவதைக் கண்டு பொன்னையா ஒன்றும் புரியவில்லையே என்பது போலத் தலையை ஆட்டினார்.

அவர்கள் சென்னைக்கு வந்து சேர்ந்த அன்றே பொன்னையா போய்ச் செகந்தரத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டு வந்தார்.

பெண் ஒரு பூ. ஆனால் அவள் மனம் மணம் மிகுந்த மலர். இக் கதையை மணத்துக்கு மண மேற்றுவது போல புனைகிறார் ஸ்ரீமதி கல்யாண சுந்தரி ஜகந்நாத்.

உதிர்ந்த மலர் முழு நாவல்

கல்கி

அடுத்த இதழில் வெளி வருகிறது



அவன் நாலைந்து மாதங்களாகச் சென்னையிலே தான் இருக்கிறான். அவனுடைய இரண்டாம் தாரம் குழந்தை பெறும்போதே மூன்று ஆண்டுகளுக்கு முன் போய் விட்டாள். அவன் மறுபடியும் மணம் செய்துகொள்ளவில்லை. இப்போதெல்லாம் அவனுக்குத் தன் தொழில் சொத்துக்களைத் தவிர வேறு நினைப்பே கிடையாது என்று தோன்றியது, அவனைச் சுற்றி இருந்தவர்களுக்கு.

ஆனால் ஒரு வாரமாக அவன் தொழிலைக் கூட மறந்து ஒரு வக்கீலுடன் ஏதோ ஓர் ஆலோசனை இரகசியமாக நடத்தி வருவதாகத் தெரிந்தது. அது என்ன என்பது பொன்னையாவுக்குத் தகவல் கொடுத்தவர்களுக்குத் தெரியவில்லை. இன்னும் கொஞ்சம் உள் வட்டத்துக்குள் போய் விசாரித்தால் தெரியும்.

அந்த விவரங்களைக் கேட்டுக் கொண்டு முத்துலட்சுமி, "அவர் தினம் காலையிலே எவ்வளவு நேரம் வரை வீட்டிலே இருக்கிறார், மாலையிலே எத்தனை மணிக்குத் திரும்பி வருகிறார் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு வா மாமா!" என்று பொன்னையாவை மறுபடியும் விரட்டினாள்.

அவர் போய்த் தெரிந்து கொண்டு வந்த விவரங்களிலிருந்து செகந்தரம் தினம் மாலை

ஆறு மணிக்குப் பங்களாவுக்குத் திரும்பி விடுகிறான். அதன் பின் மறுநாள் காலை பத்து மணிவரை வீட்டை விட்டு வெளியேறுவதே இல்லை. மிக மிக அருமையாகத்தான் என்று வது ஒரு நாள் இடையில் வெளியே போகிறான். அது தான் மட்டும் தனியாகக் கடற்கரைக்குத்தான் போய் வருகிறான் என்பது தெரிய வந்தன.

அன்று காலையில் எழுந்தவுடன் முத்து லட்சுமி பொன்னையாவிடம் "இன்று மாலையில் அவர் பங்களாவுக்குத் திரும்பும் நேரத்துக்குச் சரியாக நான் போய் அவரைப் பார்க்கப் போகிறேன். எனக்கு விதித்திருப்பது இந்த வாழ்வுதானா, இல்லை என்னைப் பெற்றவள்தான் ஏமாந்து எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய வாழ்வைப் பறி கொடுத்து விட்டாளா என்பது எனக்குத் தெரிந்துவிடும். நீயும் என்னுடன் வருகிறாயா மாமா?" என்று கூறினாள்.

பொன்னையா, "உன்கூட வாறதுக்குத் தானே முத்து உன்கூடப் புறப்பட்டு வந்திருக்கேன்" என்றார்.

அன்று பகல் மூன்று மணிக்கே முத்து லட்சுமி கண்ணாடியின் எதிரில் போய் உட்கார்ந்து விட்டாள். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவளுக்குக் கூந்தல் அலங்காரம் செய்துவிட அந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் யார் என்பதை அறிந்த பொன்னையா, "இந்தப் பெண் இதைப் பத்தியெல்லாம் எங்கேயிருந்து எப்போ தெரிஞ்சுக்கிட்டா?" என்று தம்மைத் தாமே கேட்டுத் தலையைச் சொறிந்து கொண்டார்.

மாலை ஐந்தரை மணிக்கு அலங்காரத்தை முடித்துக் கொண்டு அறையிலிருந்து வெளியே வந்த முத்துலட்சுமியைக் கண்டு பொன்னையா பிரமித்து நின்றார். அவள் இழந்து விட்ட இளமையும், கவர்ச்சியும் திரும்பி வந்து சேர்ந்துவிட்டதோ என்றுகூட நினைக்கும்படி இருந்தது அவள் தோற்றம். வயதில் கூட ஐந்து ஆண்டுகள் குறைத்துக் காட்டியது. மேடையில் ராணி வேடம் தாங்கி வந்து அதற்குரிய கம்பீரத்துடன் திரும்புபவள் போல் அவள் தலையை நிமிர்த்திப் பொன்னையாவைப் பார்த்துப் புன்னகை செய்த போது, 'ஐயோ! இவ்வளவு அழகையும் வீணு அடிக்கவிட்டிருந்திட்டாளே இவ' என்று எண்ணித் தவித்தது அவர் மனம்.

ஒரு டாக்ஸியில் அவர்கள் ஜெகந்நாதத்தின் பங்களா வாசலை அடைந்து அதிலிருந்து இறங்கக் கூட நேரமில்லை. ஜெகந்நாதத்தின் பெரிய கார் வந்து வாசலின் முன் நின்றது. அதிலிருந்து இறங்கிய ஜெகந்நாதம் காரிலிருந்த ஒரு பதினொன்று வயதுப் பையன் கையைப் பற்றி இறக்கினார். அவன் மிரண்டு மிரண்டு சுற்றிப் பார்த்துக் கொண்டே இறங்கினான். வண்டியின் மறு பக்கத்திலிருந்து அவருடைய வக்கீல் இறங்கினார். மூவரும் பங்களாவுக்குள் போனார்கள்.

முத்துலட்சுமியும் பொன்னையாவும் டாக்ஸியிலிருந்து இறங்கத் தயாரானார்கள். அதே சமயம் பெரிய காரின் டிரைவர் முன்னால் வந்தான். வீட்டு வாசல் காவல்காரன் டிரைவரிடம் "யார் அண்ணே பையன்?" என்று கேட்டான்.

டிரைவர் வீட்டின் புறம் திரும்பிப் பார்த்துவிட்டு, "ஐயாவினுடைய மகனாம். இவருக்குத் தெரியாமே எங்கேயோ பிறந்து பதினொறு வருஷத்துக்கு மேலே யாருகிட்டேயோ வளர்ந்தானாம். இப்போ அவனைக் கண்டுபிடிச்சு அழைச்சு வந்திருக்காரு. அந்தக் [illegible] போடப் போறாரு" என்று கேலிக் குரலில் பேசிச் சிரித்தான். அதன் பிறகுதான் அவன் டாக்ஸியிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த இருவரையும் கவனித்தான். அவன் முகம் சட்டென்று மாறியது. முத்துலட்சுமியை வியந்த கண்களுடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு அவன் பொன்னையாவிடம், "யாருங்க?" என்றான்.

பொன்னையா பதில் சொல்லு முன் முத்து லட்சுமி குறுக்கிட்டு, "உங்க முதலாளி இப்பொழுது காரிலிருந்து அழைத்துச் சென்றது அவருடைய சொந்த மகனா?" என்று கேட்டாள்.

டிரைவர், "ஆமாம், அப்படித்தான் சொல்றாங்க" என்றான்.

முத்துலட்சுமி தயக்கத்துடன், "அவருக்குக் குழந்தையே இல்லை. மனைவிகூடத் தவறிப் போய் விட்டாள் என்று கூறினார்களே?" என்றாள்.

டிரைவர், "தவறிப்போன அம்மாவுக்கு முந்தியே அவர் வேறு யாரையோ கலியாணம் கட்டியிருந்தாராம். நீங்க ஐயாவைப் பார்க்கத்தான் வந்திருக்கீங்களா?" என்று கேட்டான்.

முத்துலட்சுமி மறுபடியும் ஒரு நொடி தயங்கினாள். பிறகு "ஆமாம். அவரைப் பார்க்கத்தான் வந்தேன். இன்னொரு நாள் வருவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. மாமா! அந்த டாக்சிக்காரனை நிறுத்தச் சொல்லுங்கள்" என்றாள்.

டிரைவர் அவர்களைத் தொடர்ந்து வந்து அவள் யார் என்பதை அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகள் வீணாயின. "ஐயா கேட்டால் யார் வந்தாங்கன்னு சொல்றதுங்க" என்று கூடக் கேட்டான். முத்துலட்சுமி "பரவாயில்லை. நானே நாளை மறுநாள் வந்து அவருக்கு விளக்கிச் சொல்லுகிறேன்" என்று சொல்லி டாக்ஸி டிரைவருக்குப் போகும்படி கைகாட்டினாள்.

ஹோட்டலுக்குத் திரும்பும் வழியிலேயே பொன்னையா, "என்ன நடந்தது முத்து? அந்தப் பையன் உன்னை ஏமாத்திட்டு அப்பனுக்குத் தெரியாமே வேறே ஒரு பெண்ணையும் கலியாணம் கட்டியிருப்பானோ?" என்று கேட்டார்.

முத்துலட்சுமி, "ஏன் மாமா அவசரப் படுகிறாய்? நீயேதானே போய் அந்த விவரங்களையெல்லாம் விசாரித்து அறிந்து வர வேண்டும்" என்றாள்.

பொன்னையாதான் போய் யார் யாரையெல்லாமோ கேட்டு அந்தத் தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வந்தார். அவர் முத்து லட்சுமியிடம், "இதென்ன ஓரே வாயிலே

பிள்ளை முழுங்கற கதையா இங்கே இருக்கு! அந்தப் பையன் தாய் பேர் முத்துலட்சுமி யாம். பத்துப் பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னே அவ ஆஸ்பத்திரியிலே அந்தப் பையனைப் பெத்துண்டுச் செத்துட்டாளாம். நாலைந்து மாசத்துக்கு முன்னே வேகந்தரத்தி னுடைய வக்கீல் வேறே ஏதோ கேஸுக்காக கார்ப்பரேஷன்லே பதினைஞ்சு வருஷங்களுக்கு முந்தியே பிறப்பு இறப்புப் பதிவைப் புரட் டிப் பார்க்கச் சொன்னாராம். அதிலே 'தாய் பேர் முத்துலட்சுமி, தகப்பன் வேகந் தரம். பிறந்தது ஆண் குழந்தை'ன்னு குறிச் சிருக்காம். வேகந்தரம் வீட்டு விலாச மெல்லாம் கூடச் சரியாக இருக்காம். அதைப் பார்த்துட்டு வந்து வக்கீல் அவர்கிட்டச் சொல்லியிருக்கார்.

''ரெண்டு பேருமாச் சேர்ந்து அநாதி ஜுங்களாம். ஆஸ்பத்திரியிலேருந்துதான் பிறப்பு இறப்புப் பதிவு ஆகியிருக்குன்னு கண்டு அங்கே போய்த் தேடியிருக்காங்க. அந்த முத்துலட்சுமி பேருகாலம் ஆன எட்டாம் நாளு ஏதோ நோய் கண்டு போயிட்டா. யாரோ செல்லமாகன்னு ஒருத் தன் வந்து அந்தக் குழந்தைக்குத் தான்தான் உடையைக்காரன்னு சொல்லி எடுத்துக் கிட்டுப் போனான்னு தெரிஞ்சுக்கிட்டாங்க. அந்தச் செல்லமாகனைத் தேடிப் போனாங்க. பையன் அவன்கிட்டேதான் இருக்கான். அவன், '''இது என் மூத்த தாரத்துக்குப் பிறந்த மகன்தான்'னுன். வக்கீல், 'வட்டாதி பதி வீட்டுக் குழந்தையை என்னதுன்னு பொய் சொல்லிக் கொண்டு வந்து மறைக்க வைச்சிருக்கிற குத்தத்துக்கு உன்னே ஜெயி லுக்கு அனுப்பிடுவோம்'னு சொல்லி அவனே மிரட்டிப் பையனே வீட்டு வந்திருக்காங்க. எனக்கு ஒண்ணுமே புரியல்லே, முத்து!'' என்று சொல்லி முடித்தார்.

அதைக் கேட்டு முத்துலட்சுமி திகைபோய் உட்கார்ந்து விட்டாள். ''நானின் பெயர் முத்துலட்சுமி, தகப்பன் பேர் வேகந்தரம். அவன் பிள்ளையைப் பெத்துவிட்டு இறந்து போய் விட்டான்!''

இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் அந்த விடுகதை உடைந்து அவளுக்கு அதன் விடை தெரியலாயிற்று.

போலீஸிலே முறையிட்டு கொடுத்து அவர் களை மிரட்டி முத்துலட்சுமியிடமிருந்து வேக ந்தரத்துக்கு விடுதலையை விலைக்கு வாங்கிக் கொண்டு விரட்டிய பொழுதில் ரத்தினம், ''என் மகனுக்கு இப்படி அநியாயம் செய் துட்டு அவன் மட்டும் வாழ்ந்து விடுவானு! அவன் சொத்தையெல்லாம் அவன் வயிறும் அனுபவிக்காது. பார்த்துக்கிட்டே இரு'' என்று சாபம் கொடுத்தான். சபதமும் செய்தான்.

அந்தச் சபதத்தை அவன் நிறைவேற்றியும் விட்டான். மதுரத்தைப் பேறு காலத்துக்கு ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்த போது அவன் அந்தப் பெண்ணின் பெயரை முத்துலட்சுமி, அவள் கணவன் பெயர் வே கந்தரம் என்று பதிவு செய்து வைத்துவிட் டான்! மதுரத்தின் கணவன் குழந்தையை வாங்கிக் கொள்ளப் போனபோது ரத்தின மும் அவனுடன் போய், அவன்தான் வேகந் தரத்தின் ஆள் செல்லமாக என்று சொல்லி, தான் முத்துலட்சுமியின் தாய் குழந்தை யைப் பெற்றுக் கொள்வதாகக் கையெழுத்துப் போட்டிருக்கிறான்.

செல்லமாகனைப் போய்ப் பார்த்துப் பேசி இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டு வந்தார் பொன்னையா.

அதை முழுவதும் முத்துலட்சுமியிடம் சொல்லி, ''இப்ப என்ன செய்யப்போறே முத்து?'' என்று குழப்பமாய் நாயீம் கேட் டார் அவர்.

முத்துலட்சுமி, ''எங்க அப்பா சொன் னதுதான் பொய்யாகி விட்டது மாமா! மனசிலே கோட்டை கட்டனாம். ஆனால் அதிலே வாழ்ந்துவிட முடியாது. என் தலை விதியை என்னைப் பெற்றவன் இறுக்கி வைத்து விட்டுப் போய்விட்டான். இனி அதை யாராலும் மாற்றிவிட முடியாது. ஊருக்குத் திரும்புவோம்'' என்றாள்.

பொன்னையா, ''வேகந்தரத்தைப் போய்ப் பார்க்கப் போறதில்லையா நீ?'' என்றார்.

முத்துலட்சுமி, ''என்னே இக்கோலமாக்கி, என்னைப் பெற்றவன் மதுரம் மகனுக்குப் பெரிய சொத்தை விடுத்து வைத்துவிட்டுப் போயிருக்கிறான். அதை நான் காத்திடலாம். ஆனால் மாற்றப் போறதில்லே. இன்னைக்கு இரவே புறப்பட்டு விடுவோம்'' என்றாள்.

புனிதம்.

அவள் இப்போது முன்போல் இல்லை. கரிய பெரிய கண்கள் வெளுத்துச் சிறுத்தும், ஈனமான முகம் சாம்பிப் போயும்.... அவள் முன் போலவே இல்லை. இருக்கிற இடமெல்லாம் ஓர் எழிலை நிரப்பும் அந்த அழகு. பூவாய்ப் பூத்து மலர்ந்த பெண்மையின் தனிக் கவர்ச்சி. பெண்மென்றாலும், கோபுரத்து விதானம் போல் கம்பீரமாய் இருப்பாளே! இவையெல்லாம் எங்கே?

அதென்னவோ விதியின் கண்களுக்கும் பெண்கள்தான் விளையாட்டுப் பொருளாய்க் கிடைக்கிறார்கள். இல்லாவிட்டால், இந்த நேரத்துக்குப் புனிதம் அவனுக்கு மனைவியாயிருப்பாள்.

பெரிய வாலைதான். ஆனால், தானே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் சிறு அறிவீனம் அதற்கு இடந்தையாய் அமைந்து விட்டதே!

புனிதம் புத்திசாலிதான். சிறு வயதிலிருந்து எதிலும் அவளுக்கு அப்படி ஒரு நாட்டம். அஷ்டாவதானியைப் போல் கை ஒன்றைச் செய்யும். கண் ஒன்றைப் பார்க்கும். மனம் ஒன்றை எண்ணும். படிக்கும் போது வகுப்பில் எல்லாவற்றிலும் அவள்தான் முதல் பெண். அறிவான பெண். துருதுருவென்றிருக்கும் முயல் குட்டியைப் போல். வெகு சுலபமாக பி. ஏ. பாஸ் செய்துவிட்டு, வீட்டில் வீணாகப் பொழுதைக் கழிக்காமல் ஒரு வேலையிலும் சேர்ந்து விட்டாள். அது முதல் வீட்டு நிர்வாகம் அவள் கையில்தான். படிக்கிற தம்பிக்கு— வேலையிலிருந்து ஓய்வு பெற்று வீட்டோடு இருக்கும் தந்தைக்கு — தொட்டதற்கெல்லாம் அலுத்துக் களைத்துப் போகும் அன்னைக்கு — மொத்தத்தில் அந்தக் குடும்பத்துக்கு அவளே நிர்வாகி. அப்படி இருப்பதில் அவளுக்கு ஒரு பெருமையுங்கூட...

வேலைக்குச் சேர்ந்த சிறிது காலத்தில் புனிதத்துக்கு ஒரு புதிய அனுபவம் நேர்ந்தது. உடன் பணியாற்றும் ஆடவர்கள் பலபேர் இருக்க மூர்த்தியிடம் மட்டும் அவளுக்கு ஒரு தனி நெருக்கம். காரணம் அவனுடைய குழந்தைத் தன்மை. எம். ஏ. படித்துவிட்டானே தவிர, நடை உடை பாவனைகள் முதிராத தன்மை. தானும் சரியாக வேலை செய்யாமல் மற்றவர்களையும் வேலை செய்ய விடாமல், அலுவலகத்தை அரட்டைக் கூடமாக்குவதும், அடிக்கடி மேலதிகாரிகள் கண்டிப்பதும் நித்தப் பழக்கம்.

இரண்டு துருவங்கள் ஒன்று சேர்ந்தன. இல்லை; விநோதமான அந்த இரண்டு மனங்களும் ஒன்று சேர்ந்தன. அவன்மேல் ஒரு மதிப்பு. அவள் மேல் ஒரு பாசம். அலுவலகத்தில் உள்ளவர்கள் அவர்களை வாழ்த்தாமல் இருந்ததில்லை. வேலை முடிந்ததும் இருவரும் சேர்ந்தே வெளிப்புறப்படுவார்கள். பஸ் நிலையம் வரையில் சேர்ந்தே வருவார்கள்.

"சரி, அங்கே இங்கே என்று ஊர் சுற்றப் போகாமல் நேரே வீடு போய்ச் சேருங்கள்" என்பாள் அவள்.



பறிக்கத் தவறிய பழம்

டி.கே.டி. துரைராசன்

போனான். தன்னைத் தவிர அவன் வேறு யாரைக் குறை சொல்ல முடியும்?

வீட்டுக்குப் போக அவனுக்கு "போர்" அடிக்கும். இந்நேரத்துக்கு அங்கே போய் என்ன செய்வது?

''ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படியுங்கள்.''

படிப்பதா? இனிமேல் படிப்பதா? அவன் எவ்வளவு வேண்டாவெறுப்போடு எம்.ஏ. படித்து முடித்தான் என்பது கடவுளுக்கல்லவா தெரியும்! இருந்தாலும் நிர்மலா ஆட்டி விட்டுப் பஸ் ஏறிப் போவாள்.

ஒரு நாள். பஸ் நிலையம் வந்தடைந்ததும் அவள் வழக்கமான தன் உத்தரவைப் போட்டாள். அவன் செல்கிற வழியா இல்லை. தலையைக் குனிந்து கொண்டு "பாண்ட்" பாக்கெட் இரண்டிலும் இரண்டு கைகளை நுழைத்தபடி இடது காலை மட்டும் ஆட்டிக்கொண்டு நின்றான்.

''என்ன பேசாமல் நிற்கிறீர்கள்? எனக்கு பஸ் வந்து கொண்டிருக்கிறது. நான் போக வேண்டும்'' என்று அவசரப்படுத்தினாள் புனிதம்.

அவன் அப்போது தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். அந்தப் பார்வை இரக்கத்தின் சாயலின்–கோடி கோடியான எண்ணங்களின் மின்னல் கீற்றுக் கொட்டியது.

''இன்றைக்கு நீயும் என் வீட்டுக்கு வாயேன்''–அவன் பார்த்தபடியே தயக்கத்தோடு அழைத்தான்.

ஒரு வினாடி திகைத்துப் போன புனிதம் ஒன்றும் சொல்லாமல் நின்றாள். ஆண்மையின் பூரண காம்பீர்யம். இளமைக் குரலில் தெறித்தபோது பெண்மை ஒரு நிமிஷம் நெகிழ்ந்துதான் போனது. ஓ! என்னிடம் தான் இவருக்கு எத்தனை அன்பு..... அடக்கம். புனிதம் சமாளித்தாள். இருந்தாலும் ஒரு சந்தேகம்..... ''உங்கள் வீட்டில்...'' என்று அரை குறையாக இழுத்து நிறுத்தினாள்.



"எல்லாருக்கும் எல்லாரும் தெரியும். அவர்களே உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள்" என்றான் மூர்த்தி.

"பொல்லாதவர் நீங்கள்" என்று கூறியபடி புனிதம் ஒரு புன்னகையைச் சிந்தினாளே, அது கோடிப் பொன் பெறும்.

மூர்த்தி — மூர்த்தியின் வயதான பெற்றோர்கள் — தமக்கை — இரண்டு தம்பிமார்கள். இதுதான் அந்தக் குடும்பம். எங்கேயோ இருக்கும் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் — மூர்த்தியின் சம்பளம் இவற்றைக் கொண்டு அந்தக் குடும்பம் வளமாகவே வாழ முடிந்தது.

அவர்களுக்கும் — புனிதத்துக்கும் இதுதான் முதல் சந்திப்பு. ஆயினும் சிறிது நேரத்துக்குள்தான் எவ்வளவு ஆழமான பரிச்சயம் ஏற்பட்டு விட்டது. மண்ணின் வளப்பமும் — விதையின் தரமும் இருந்தால் அது எவ்வளவு விரைவில் முளை விட்டுக் கொள்ளும்? அவள் அவர்களைத் தன்னவர்களாக நினைத்தாள். அவர்கள் அவளைத் தங்களவளாக நினைத்தார்கள்.

அதிலும் மூர்த்தியின் தமக்கை — புனிதத்தைவிட எவ்வளவோ மூத்தவளாய்த் தோன்றினாலும், புனிதத்திடம் எப்பவும் பணிவோடு நடந்து கொண்டாள். விலகி விலகி நின்றாலும், மூர்த்தியின் தம்பிமார்கள் புனிதத்திடம் உணர்வு ரீதியில் நெருங்கி நெருங்கியே வந்தார்கள்.

இருட்டிக் கொண்டு வந்ததும், மன நிறைவோடு விடைபெற்றுக் கொண்டாள் புனிதம். அவளை வழி அனுப்புவதற்காகப் பஸ் நிலையம் வரை வந்தான் மூர்த்தி.

மானைக் கிழவி போல் பேச்சை ஆரம்பித்தாள் புனிதம்:

"உங்களுடைய அக்காவுக்குச் சீக்கிரம் ஒரு கல்யாணம் செய்து வைக்கக் கூடாதா?"

மூர்த்தி அதற்கும் பதில் சொல்லாமல், "ஒரு டாக்ஸியில் போய் விடேன். உன் வீட்டில் தேடுவார்கள்" என்றான்.

"நான் கேட்டதற்கும் பதில் சொல்லுங்கள்" என்று தன் வட்டத்துக்குள் சுழன்றாள் புனிதம். தொடர்ந்து, "அவர்களுக்கு நிறைய வயதாகும்போல் தெரிகிறதே!" என்றாள்.

அந்தத் தலைப்பு கசப்பாக இருந்தது போலும் மூர்த்திக்கு. "ச்சோ! அதைப் பற்றி நினைத்து நாமென்ன செய்ய முடியும்?" என்றான் வெறுமையான தொனியில்.

விக்கென்று ஆகி விட்டது புனிதத்துக்கு. ஒரு முழு ஆண் பிள்ளை பேசக் கூடிய பேச்சா இது? அவளுக்கு விளங்கவில்லை. தாய் தந்தையர்களின் பொறுப்புக்களை, வளர்ந்து ஆளாகி விட்ட மூத்த ஆண் மகன்தானே ஏற்றுக் கொள்ள வேண்டும்? அப்படியிருக்க இதென்ன பொறுப்பில்லாத்தனம்? புனிதத்துக்கு விளங்கவேயில்லை.

"இதோ பாருங்கள். நெட்டையோ குட்டையோ ஒருவரைப் பார்த்து அவரிடம் உங்கள் தமக்கையை ஒப்படைக்க வேண்டியது உங்கள் கடமை" என்றாள் அழுத்தமாக.

"எல்லாம் பார்த்தாகி விட்டது புனிதம். இந்தப் பத்து வருஷங்களாக யார் யாரோ வந்து பார்த்து விட்டுப் போய் விட்டார்கள். ஆனால்......"

உலகத்தின் பாரமெல்லாம் உள்ளத்தில் வந்து தங்கி விட்டது போன்ற கனம். அதற்கு மேல் புனிதம் ஒன்றும் பேசாமல் பஸ் ஏறிப் போனாள்.

மறு நாள்.

அலுவலக வேலையில் அவள் முழு மனத்தோடு ஈடுபடவே இல்லை. நெஞ்சின் நினைவுகள் எங்கேயோ போய் — எப்படி எப்படியோ மறுகின. பகல் கனவுக்குக்கூடப் போகாமல் பிடித்து வைத்த பிள்ளையாகி விட்டிருந்தாள்.

அனைவருக்கும் அது ஒரு புதிராக இருந்தது. ஆனால் மூர்த்தி...? ஹூம். அவன் ஒரு யோகி. அற்பப் பிரச்னைகள் அந்த இதயத்தை அணுகா. வழக்கம் போல் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தான்.

மணி ஐந்தாயிற்று.

கடையைக் கட்டிவிட்ட மூர்த்தி, புனிதம் புறப்படுவதற்காகக் காத்திருந்தான். ஆனால் அவள் புறப்படவில்லை. மோவாயைக் கையில் தாங்கி முடிவில்லாச் சிந்தனையில் இருந்தாள். ஒருவர்பின் ஒருவராக அனைவரும் போனபின், மூர்த்தி எழுந்து வந்து, "போகலாமா புனிதம்?" என்றான்.

"இப்படி உட்காருங்கள்." ஒரு நாற்காலியைக் காட்டிய புனிதம் "உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும்" என்றாள்.

சினிமாவுக்குப் போகத் திட்டமிட்டிருந்தவன் தயங்கித் தயங்கி அமர்ந்தவாறு "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"கல்யாண விஷயம்" என்றாள் புனிதம் தீர்மானமான குரலில்.

மூர்த்தியின் முகம் விகசித்துப் போயிற்று. "எங்கள் வீட்டில் எந்த ஆட்சேபணையும் இல்லை. உன் வீட்டில்தான்....." என்றான் நமட்டுச் சிரிப்போடு.

"நான் சொல்வது உங்கள் அக்காவின் கல்யாணத்தைப் பற்றி." — புனிதத்திலிருந்து எரிச்சலோடு வந்தன வார்த்தைகள். மூர்த்திக்கு முகம் கன்றி விட்டது. கூடவே கொஞ்சம் கோபமும் வந்தது. 'இவள் என்ன பெரிய இவளைப் போல் பேசுகிறாள்' என்ற கோபம்.

"என் அக்காவின் கல்யாணத்தைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அது நடக்கிறபோது நடக்கட்டும்" என்றான் அதே கோபத்தோடு.

"அப்படியானால் நீங்கள் அதற்காக ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளப் போவதில்லையா?" என்று கேட்டாள்.

"அதுதான் சொன்னேனே பத்து வருஷங்களாய்த் தேடுகிறோம் என்று. இதோ பார் புனிதம். என் அக்காவுக்குக் கல்யாணம் நடக்கும் என்ற நம்பிக்கை எங்களில் யாருக்குமே இல்லை. பெண்களின் கூந்தலையோ — அல்லது தெய்வத்தின் திருவடிகளையோ சென்று சேராமல், வெறுமனே உதிர்ந்துவிட்ட ஒரு பூவைப் போல்...." அவனுக்கு ஏனோ குரல் கம்மியது. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு, "கல்யாணம் என்று முதலில் ஒரு விசேஷம்


குழந்தை சிரித்தது - பிரிந்தவர் கூடினர்!
சென்னை
பிளாஸா
கிரௌன் &
மகாலக்ஷ்மி
மற்றும் தென்னகமெங்கும்
ஆர்.ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்
டைரக்ஷன் ராமண்ணா

EASTERNS

எங்கள் வீட்டில் நடப்பதென்றால் அது நம் கல்யாணமாகத்தான் இருக்கும்'' என்றான்.

''அதுதான், கல்யாணமாகாத தமக்கை வீட்டிலிருக்கும் பொழுது தம்பி கல்யாணம் செய்து கொண்டான்....'' புனிதம் வெறுப்போடு பேச்சைப் பாதியில் நிறுத்தினாள்.

மூர்த்திக்கு ஒரு சிக்கல் பிடிபட ஆரம்பித்தது. புனிதத்தைத் திட்டவட்டமாகப் பார்த்தபடி, ''அப்படியானால் என் அக்காவுக்குக் கல்யாணம் நடக்காத வரையில் நம் திருமணத்துக்கு நீ ஒத்துக் கொள்ளப் போவதில்லையா?'' என்று அம்புக் கூர்மையோடு ஒரு கேள்வி கேட்டான். அது புனிதத்தின் நெஞ்சில் பாய்ந்தது. அந்த வலியில் அவள் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன.

மனத்துக்கினியவள் அழுவதை எந்த ஆடவன்தான் சகித்திருக்கிறான்? புனிதத்தை அள்ளி அணைத்து, நீர் வழிய அந்த விழிகளைத் தன் விரல் நுனியால் ஒத்தியெடுக்கத் துடித்து விட்டான் மூர்த்தி. ஆனால் அந்தக் காதல் வேகத்தை அடக்கி, ''நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா புனிதம்?'' என்று மறுகிய குரலில் கேட்டான்.

''நான் சொல்வதுதான் உங்களுக்குப் புரியவில்லை. பெண்மை என்பது ஓர் அர்ப்பணப் பொருள். ஆடவர் ஒருவரின் கைத்தலத்தில் அது சென்று சேர்கிற வரையில் அதற்கு மதிப்பே இல்லை. புனிதமான அந்த விழாவுக்கு முன்பு வரை அது வெறும் சதைப் பிண்டம்தான். உங்கள் தமக்கைக்குக் கல்யாணமே நடக்காது என்று நீங்கள் கைகழுவி விட்டால்...... பிறகு நீங்கள் அவளை உங்கள் தமக்கை என்று நினைக்காமல் வெறும் ஒரு சதைப் பிண்டமாக நினைக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்?'' என்று அதர உணர்ச்சியோடு அழுகையும் பீறி வர அவள் கேட்ட பொழுது....

மூர்த்திக்குத் தலையே சுற்றுவதுபோல் இருந்தது. வலது உள்ளங்கையை நெற்றிக்கு முட்டுக்கொடுத்துத் தளர்ந்து அமர்ந்து விட்டான். அப்படி எவ்வளவு நேரம் இருந்தானோ.... ஒரு தீர்மானத்தோடு அவன் எழுந்தான்.

''நான் போய் வருகிறேன் புனிதம். என் அக்காவுக்குத் திருமணம் நிச்சயமாகிறவரையில் நான் கண்ணயரப் போவதில்லை. அலுவலகத்துக்கும் வரப் போவதில்லை. உன்னைப் பார்க்கப் போவதுமில்லை'' என்று ஒரு வேகத்தோடு நடந்தான்.

புனிதம் அவனைத் தடுக்கவில்லை; அழைக்கவில்லை. காதலனுக்குக் கடமையை உணர்த்திய நிறைவு அவள் கண்களில் மின்னியது.

இருபது நாட்கள். அது எப்படியோ சென்று மறைந்தது. மூர்த்தி அலுவலகத்துக்கே வராமல் லீவு போட்டு விட்டான். விளங்காமல் கேட்டவர்களுக்கும் புனிதம் சொன்ன பதில்: ''அவர் அக்காவின் திருமண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்'' என்பதுதான்.

ஆனால் உள்ளுக்குள் மட்டும் ஓர் ஏக்கம்: 'என்னதான் சபதமென்றாலும், எனக்கு ஒரு போன் கூடவா செய்யக் கூடாது?''

ஒரு நாள். வேலையில் மூழ்கியிருந்த புனிதத்தின் கைக்கு ஒரு கடிதம் வந்தது. மூர்த்தியின் கையெழுத்தை இனம் கண்டு கொண்டதும் புனிதத்துக்குச் சொல்லொணா மகிழ்ச்சி. பரபரப்போடு கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள புனிதம்,

என் தமக்கைக்கு வாழ்வு கொடுத்த தெய்வம் என்ற நன்றி உணர்ச்சியோடு நானுனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஆம், டாக்டர்களெல்லாம் உதட்டைப் பிதுக்கி, கைவிரித்துவிட்ட பல நோயாளிகளைத் தெய்வம்தானே காப்பாற்றியிருக்கிறது.

பெண் ஓர் அர்ப்பணப் பொருள் என்று நீ சொன்னாய். இன்னும் ஒரு வாரத்தில் என் தமக்கையை ஒருவருக்கு அர்ப்பணம் செய்யப் போகிறோம். நான் அவளை வெறும் சதைப் பிண்டமாக நினைக்கவில்லை என்பது அந்த நாளில் நிரூபணமாகி விடும். இது உனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

பெண்ணாகப் பிறந்த நீ இன்னொரு பெண்ணின் தவிப்பை எண்ணிப் புழுங்கினாய். ஆனால் உனக்குத் தெரியுமா, நிறையப் பெண்கள் என் தமக்கையைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று. என் மைத்துனராக வரப்போகிறவருக்கும் அப்படி ஒரு தமக்கை, அருணா என்று பெயர். என் தமக்கையைப்போலவே, அவளும் அங்கே ஒரு பிரச்னையாக இருந்தாள். ஆனால் என் மைத்துனர் என்னைப் போல் இன்னொருவர் புத்தி புகட்டித் தம் கடமையை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு மோசமாக இல்லை. கூன், குருடு, நொண்டி எதையும் ஏற்றுக் கொள்ள அவர் தயாராக இருந்தார். அதற்குக் கைம்மாறாக அவர் விரும்பியது தம் தமக்கையின் வாழ்வு.

என்னுடைய இரண்டு கண்களை நீங்கள் இரண்டு பேர்களும் திறந்து விட்டீர்கள். நீ எனக்கு என் கடமையை உணர்த்தினாய். அந்தக் கடமையைச் செய்வதற்கான வழியை அவர் எனக்கு உணர்த்தினார்.


ஆனாலும் அவரினும் நீயே மேலானவள். ஏனென்றால், உன் ஒருத்தியால் இரண்டு பெண்களுக்கு வாழ்வு கிட்டியிருக்கிறது. ஆம், அந்த அருணாவையும் அவர்கள் அர்ப்பணப் பொருளாகச் சமர்ப்பிக்கிறார்கள்.... அவளை நான் ஏற்கிறேன்.

உன்னுடைய மனம் எனக்குத் தெரியும். அந்த நம்பிக்கையில் எல்லா ஏற்பாடுகளும் நடந்தாகி விட்டன. இனி நடக்க வேண்டியது எங்கள் திருமணம்தான். — **மூர்த்தி**''

கடிதத்தைக் கையில் வைத்தபடியே புனிதம் செயலற்றுப் போனாள். தன்னைத் தவிர அவள் வேறு யாரைக் குறை சொல்ல முடியும்?

பூ காய்க்கிறது. காய் பழுக்கிறது. அது காலத்தின் வேகம். பழுத்த பழத்தை உரிய காலத்தில் பறித்து உண்ணாவிட்டால் அது கீழே உதிர்ந்து அழுகிவிடாமலா போகும்!

புனிதம் அந்தப் பாடத்தை இப்போது புரிந்து கொண்டாள். ஆனால் பயன்? இனி ஒரு முறை அவள் நெஞ்சில் காதலுக்கு இடமேது? அது கனிவதற்கு வாய்ப்பேது?



சிவப்பு கார்டினல்
பாலிஷ்
தரைகளையும் படிக்கட்டுகளையும் பளபளப்பான செக்கிற ஒளிபெறச் செய்கிறது!
Cardinal
உங்கள் வீட்டுத் தரைகள் உயிருடன் கூடிய ஒளிபெற, இன்றே சிவப்பு கார்டினல் பாலிஷை உபயோகியுங்கள்!

பூ பூத்து மலர்ந்தது. சோலையும் மணந்தது! ஆற்றங்கரையை அடுத்து இருந்த அந்த ... வண்ண மலர்களின் நறுமணந்தான் நிறைந்து பன்னீர்ப் பூக்களைக் கலந்து அழகுற நின்றது.

“அதோ, கீழ்வானத்தில் தோன்றி, ஒளிக் கதிர்களைப் பரப்பி, உலகினைத் துயில் எழுப்பும் அக்கதிரவனின் எழில்தான், எவ்வளவு! ‘சலசல’ வென்று நதியில் நீர் நாட்டிய ஒலி! மரங்களிலிருந்து கூவிடும் பல பறவைகளின் இனிய பாடல்! அடடா! உலகமே இன்பத்தில் நிறைந்து மூழ்கி விருக்கிறதே! இறைவனின் கருணையே கருணை!” மலர் வனத்தின் வேலிக்கருகே வளர்ந்து நின்ற ரோஜா மொட்டுதான் இவ்வாறெல்லாம் எண்ணியது. ‘ஜில்’ லென்று மெல்லிய தென்றல் வீசியது. ரோஜா மொட்டு மகிழ்ச்சியினால் தலை அசைத்தது. இறைவனின் திருநாமம் பாடி ஆடும் பக்தரைப் போல.

அரும்பியது முதலே அனுதினமும் அது பார்த்து வந்த காட்சிதான் இவை. கதிரவனின் உதயம், காலையின் வருகை, மலர்களோடு குலவும் வண்டினம், மெல்லத் தவழும் தென்றல், இரவும் காலையில் பட்டை பட்டையாகத் திருநீறணிந்து இறை வழிபாட்டுக்கு மலர் கொய்ய வரும் பண்டாரம் யாவும் அதற்குப் பழக்கமானவையே. சின்னஞ்சிறு மொட்டாக அரும்பிச் சிறிது சிறிதாக வளர்ந்து இன்று அது போதும் பருவம் எய்தி விட்டது. நாளை இதழ்விரிந்து மலர்ந்து மணம் வீசத் தொடங்கி விடும். அரும்பியது முதல் அது எத்தனையோ மலர்களைப் பார்த்திருக்கிறது. பண்டாரத்தின் மலர்க்கூடையில் பல வண்ண மலர்கள் கண்ணைப் பறிக்கும் வண்ணம் கலந்திருக்கும். ஆனால் அந்த வெள்ளை ரோஜாவுக்கு

புஷ்பாஞ்சலி



சின்னி

ஒரு தனிப் பெருமை. அந்தத் தோட்டத்தில் ஒரே ஒரு வெள்ளை ரோஜாச் செடிதான் இருந்தது. அந்தச் செடியில்தான் முளைத்திருந்தது நம் ரோஜா மொட்டு. “மற்ற பூக்களையெல்லாம் மாலையில் வைத்துத் தொடுக்கும் பண்டாரம் வெள்ளை ரோஜாவை மட்டும் தனியாக இறைவனின் சிரத்தில் சூட்டுவான். அந்தப் பெருமையை நானும் அடையப் போகிறேன்” என்று மகிழ்ந்தது மொட்டு. “நான் இறைவனை அலங்கரிக்கப் போகிறேன். அரும்பியதன் பயனை எய்தப் போகிறேன்.” இந்த எண்ணம்தான் அந்த மொட்டின் சிந்தனையை நிறைத்துக் கொண்டு நின்றது. ஆனால் அதே செடியில் மலர்ந்த இன்னொரு மலர் இந்த எண்ணத்தை ஏற்கவில்லை. செடியிலேயே தன் வாழ்வு முழுவதையும் கழிப்பதே இன்பம் என்று அது யோசித்தது. காரணம் — காலையும் மாலையும் அதனைக் கொஞ்ச வரும் அதன் காதலன் வண்டு.

‘டீட்’ டென்று ஏதோ மொட்டின் மீது இடித்தது. வேறு ஒன்றுமில்லை. நேற்று மலர்ந்த அந்த மலர்தான் காற்றில் உல்லாசமாகத் தலையசைத்துக் கொண்டிருந்தது. அதன் இதழ்களில்தான் என்ன பளபளப்பு! காலைப் பனியில் நனைந்து எழிலே உருவாக நின்ற அம்மலர் கண்களைக் கூசச் செய்தது. ‘என்ன அக்கா, இன்னும் கொஞ்ச நேரத்தில் வண்டு அத்தான் வந்து விடுவார் என்றுதான் இந்த இன்பக் களியாட்டமோ?’ என்று கேலியாக வினவியது மொட்டு. செக்கச் சிவந்திருந்த மலர் மேலும் சிவந்து நாணியது. ‘கேலியா செய்கிறாய்? நாளையே நீயும் மலரப் போகிறாய். உனக்கும் ஒரு காதலன் கிடைப்பான். அப்போது நீ என்ன செய்கிறாய் என்று பார்ப்போம்’ என்று மலர் பதிலுக்குச் சவால் விடுத்தது. ‘காதலனா? எனக்கா? நன்றாய்ச் சொன்னாய் போ! இறைவனின் திருவடிகளில் அர்ச்சிக்கப் போவதற்காக நான் ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கிறேன். காதலுக்கு நான் வசமாகி விடுவேன் என்று நினைக்கிறாயா?’ மொட்டு உறுதியோடு பேசியது. தேன் துளிகளைச் சிந்தியவாறு மலர் ‘கல கல’ வென நகைத்தது.

“தங்காய், அனுபவமில்லாது பேசுகிறாயடி நீ. நாளை உன் இதழ்களை விரித்தபின் பார். உலகமே வேறாகத் தோற்றமளிக்கும். வண்டு உன்னை நாடும் போது உன்னையுமறியாது காதலின் இன்பத்தில் மூழ்கி விடுவாய்.”

“நான் இன்பம் காணத்தான் போகிறேன், அக்கா. ஆனால் அது காதல் இன்பமல்ல, இறைவனின்பம்.”

“போடி, பைத்தியக்காரி. இறைவனுக்கு அர்ச்சனை செய்யும்போது மலர்

களைக் கொத்தாக அள்ளி அள்ளி வீசுகிறார்கள். அப்போது உன் தனித் தன்மை என்னவாகும்? ஒரு லட்சம் பேரில் ஒருத்தியாக் நீ தனிப் பெருமை இழந்து வாட வேண்டியது தான். செடியில் இருந்தால் அப்படியல்ல. வண்டு அத்தான் நேற்று வந்தாரே. என்னிடம் என்னென்ன இன்ப மொழிகளெல்லாம் புகன்றார், தெரியுமா ? ஆகா! அவரது ரீங்காரத்தின் இனிமை என் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் என்னைப் போல் அழகி இவ்வுலகிலேயே இல்லை என்று என் இதழ்களில்....'' மேலே சொல்ல முடியாது நாணியது மலர். மொட்டுசிரித்தது.

''எனக்கா, இதே மொழிகளை அதோ, அந்தக் குளத்துத் தாமரையிடத்திலும் அந்த மல்லிகை மலர்களிடத்திலும் வண்டு

''உங்களுக்கு அவர் மீது ஏதோ பொறாமை: அதனால்தான் இப்படியெல்லாம் நீங்கள் பேசுகிறீர்கள்!''

தென்றலுக்குக் கோபம் வந்து விட்டது.

''மகளே! உன்னிடம் பொய் சொல்லி எனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நான் வருகிறேன்.'' தென்றல் கோபத்துடன் விரைந்து சென்று விட்டது.

மலர் துயரத்துடன் அசையாது நின்று விட்டது.

''இப்போது சொல் அக்கா, எது நிலையான உயர்ந்த இன்பம்?''

மலர் நெட்டுயிர்த்தது. அதற்கு இன்னும் தென்றல் மீது முழுவதும் நம்பிக்கையில்லை; தன் காதலனை விட்டுக் கொடுக்கவும் அது தயாராக இல்லை.



அத்தான் சொல்கிறாராமே, அதற்கு நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டது.

''சீச்சீ! நீ பொய் சொல்கிறாய். யார் இவ்வாறு கூறியது ?'' சற்றுக் கோபமாகக் கேட்டது மலர்.

''தென்றல் மாமாதான்.''

''நிஜமாகவா?'' மலரின் முகத்தில் கலவரம் ஏற்பட்டது.

''ஆமாம். அதோ அவரே வருகிறார். நீயே அவரிடம் கேட்டுப் பாரேன்.''

தென்றல் வீசியது.

''என் தென்றல் மாமா, என் காதலர் மற்ற மலர்களிடத்தும் அன்பு கொண்டிருக்கிறார் என்று கூறினீர்களாமே!'' என்று சற்று எரிச்சலுடன் பேசியது மலர்.

''ஆமாம், மகளே! அதை நான் என் கண்ணாலே பார்த்தேன்.''

''இல்லை. இதை நான் நம்ப மாட்டேன்.'' மலர் பேசியது.

''தங்காய்! அவர் வேறு மலர்களை நாடலாம். ஆனால் என்னிடம் வரும் போது அன்பைத்தானே சொரிகிறார்! அந்த அன்பில் தான் நான் வாழ்கிறேன்!''

''அது சரி. நாளையே நீ வாடத் தொடங்கினால் அவர் உன்னை மறந்து விட்டுப் பறந்து போய் விடுவாரே! அவர் இளமையையும் எழிலையும் அல்லவா தேடிப் போகிறார்! அவரிடம் எங்ஙனம் உண்மை அன்பு மலர முடியும்?'

''அரும்பி விரியும் நாம் ஒரு நாள் வாடத் தான் வேண்டும். ஆனால் தங்காய், நம் வாழ்வில் பொன்மயமான நாட்கள் மலர்ந்து இளமையுடன் விளங்கும் இந்த ஓரிரண்டு நாட்கள்தான். இந்த நாட்களை இன்பத்தால் நிறைத்து விட்டார் அவர்; எழிலின் அரசி என்று என்னைப் புகழ்ந்தார். தனி ஒரு மலரான எனக்கு ஏற்றம் தந்தார். அந்தப் பெருமையில், அவரது அன்பின்



நினைவிலே என் இறுதி நாட்களைக் கழித்து விடுவேன். அதுவே நான் வேண்டுவது.''

''அக்கா! மலரும் நாம் மடிவது உண்மையானால் சிறப்பாக மடிய நீ ஏன் தயங்குகிறாய்? இறைவனின் இணையடிகளில் இதயத்தை அர்ப்பணிப்பதைவிட இனிய சாவு வேறு உண்டா ?''

''தங்காய்! உன் தத்துவம் எனக்குப் பிடிக்கவில்லை. என் கருத்து உனக்கு விளங்கவில்லை. இனி அதைப் பற்றிப் பேசாதே. இன்னும் சிறிது நேரத்தில் அவர் வந்து விடுவார். என்னை என் கனவுகளிடம் விட்டுவிடு.'' மலர் கனவுகளில் அழுந்தியது. இடீரென்று மொட்டு கூவியது.

''அக்கா, அதோ அவர்......''

மலரின் முகத்தில் மகிழ்ச்சி ததும்பியது.

''எங்கே, எங்கே?'' மலருக்கு ஒரே பரபரப்பு;

''வண்டு அத்தானல்ல அக்கா. பண்டாரம் வருகிறார்.'' மலரை அச்சம் சூழ்ந்தது. ''தென்றல் மாமா, சற்று வேகமாக வீச மாட்டாயா?'' என்று தென்றலைக் கெஞ்சியது. தன்னைச் சினந்ததற்காகத் தென்றலுக்கு மலரின் மீது கோபம். ''மகளே! என்னைப் பொய்யன் என்றாயல்லவா? அதற்கு இதுதான் தண்டனை. நன்கு அநுபவி'' என்று கூறி விட்டது.

தமக்கைக்காக வருந்தியது மொட்டு.

''தென்றல் மாமா! பாவம் சிறியவள். அறியாமல் பேசியதற்காக ஆபத்தில் உதவாமல் போவது முறையா?'' என்று இறைஞ்சியது. தென்றலுக்கு இரக்கம் பிறந்தது.

மெல்ல வீசி மலரை இலைகளினூடே மறைத்தது. இருப்பினும் மலர் பண்டாரத்தின் கண்களுக்குத் தப்பவில்லை. எப்படித் தப்ப முடியும்? அவனது இளம் மனைவியல்லவா தனக்குச் சிவப்புரோஜா வேண்டும் என்று கேட்டிருந்தாள்! பண்டாரத்தின் விரல்கள் மலரைக் கிள்ளிக் கூடையில் இட்டன. மலர் கதறியது. மொட்டு துயரத்தால் மௌனமாக நின்றது. பின் தேற்று முகமாக, ''அக்கா! வருந்தாதே! இறைவனின் பாதங்களைச் சேரப் போகிறாய். இன்முகம் காட்டு'' என்றது.


ஆனால் மலரோ! அது மலர்க் கூடையிலா விழுந்தது? துயரக் கடலில் அல்லவா விழுந்துவிட்டது! அதற்கு எப்படித் தங்கையின் சொற்கள் செவியில் ஏறும்? ''தங்காய். என் காதலர் வந்தால் சொல். அவரை நினைத்துக் கொண்டே நான் சென்றேன் என்று சொல்.....'' மலரின் மற்ற சொற்கள் மொட்டுக்குக் கேட்கவில்லை. அதற்குள் பண்டாரம் கூடையுடன் . நந்தியாவட்டைச் செடியை நோக்கி நகர்ந்து விட்டான். மொட்டு மனத்துக்குள் நினைத்துக் கொண்டது. ''பாவம்! நிலையற்ற இன்பத்தில் மூழ்கித் திளைத்து விட்டு இன்று உண்மை இன்பம் வரும்போது மகிழ்ச்சியுடன் அதை எதிர்நோக்காது மனமுடைந்து மறுகுகிறாள்'' என்று.


பூப்பறித்து முடித்துவிட்ட பண்டாரம், மீண்டும் அந்தச் சிவப்பு ரோஜாச் செடியினருகே வந்தான். அவன் அரும்பாடு பட்டுக்கொண்டு வந்து ஆசையுடன் நட்ட செடி அது. இப்போது பூக்க ஆரம்பித்து விட்டது. இன்று பறித்த மலரைத் தன் வீட்டிலிருக்கும் சின்னச் சிட்டின் கூந்தலில் சூட்டும் காட்சியை மனத்தினுள் கண்டு களித்தான் அவன். இந்த மொட்டு நாளை உலர்ந்து விடும். அடாடா! எத்தனை பெரிய மொட்டு! அது அவனது மனைவியின் கூந்தலில் எவ்வளவு அழகாகக் காட்சி அளிக்கும்! இன்ப நினைவுகளுடன் செடியை நோக்கினான். அங்கே சில இலைகள் அரிக்கப்பட்டிருந்தது அவன் விழிகளுக்குப் புலப்பட்டது. ''அட பாவமே! பூச்சி விழுந்து விட்டது போலிருக்கிறதே? நாளையே வந்து இதைக் கவனிக்க வேண்டும்'' என்று எண்ணியவாறு நகர்ந்தான் அவன்.

''அடாடா! அவனுக்குத்தான் என்ன பக்தி! என்னை இறைவனுக்குச் சூட்டி அழகு பார்க்கலாம் என்று என்ன மகிழ்ச்சி!'' என்று


பண்டிட்
கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்


உங்கள் பெண்
அவளது வருங்காலத்திற்கு
உரியதைப்
பெறவேண்டும்!
அதற்கு
பணச் சேமிப்பு
மூலம் அவளுக்கென்று
உறுதிப் படுத்துங்கள்
சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்டை எங்கள் பாங்கில் ஆரம்பியுங்கள்
யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.
தலைமை ஆபீஸ்: கல்கத்தா


கோபால் பல்பொடி
பல் வலி, பல் சொத்தை, வாய் நாற்றம்
பாசில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பற்களுக்கு வெண்மையும்
பளபளப்பும் தருகிறது.


A Pump for Every Purpose
Water all day at any height, with or without overhead tanks, for homes, offices, hotels, hospitals, gardens, garages, stables, municipalities and public utility concerns.
Pumping of every type of industrial fluid—
Oils, acids, alkalis, etc., for factories and workshops Drainage pumps for swimming pools, trenches and sewers.
Myers
or
Wasp
PUMPS
for unfailing water supply
MYERS
Deep well pumping our speciality
WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.
330, THAMBU CHETTY STREET, MADRAS-1

எண்ணிக் கொண்டது அவனது சிந்தனையை அறியாத மொட்டு.

வண்டைப் பிரிந்த மலர் துயரில் வாடியது. ஆனால் பண்டாரத்தின் மனைவி அதைத் தன் கூந்தலில் சூடும்போது அதற்கு ஒரு விதத்தில் திருப்தியும் ஏற்பட்டது. 'எத்தனை அழகான மலர், அத்தான்' என்று அவள் பெருமிதம் கொண்ட போது, தன் காதலனின் சொற்களே அதற்கு நினைவுக்கு வந்தன. ஆயிரத்தில் ஒரு மலராக இராது ஒற்றை மலராக ஓர் இளமங்கையின் கூந்தலை அலங்கரிக்கிறோம் என்ற எண்ணம் அதற்கு அமைதியை அளித்தது.

காலை கடந்தது. 'இன்னும் ஓர் இரவுதான். நானே நான் மலர்வேன்' என்று மகிழ்வுடன் தனக்குள் கூறிக் கொண்டது மொட்டு. அந்தச் சமயத்தில் 'ஆ' என்று கதறித் துடித்தது. அதன் இதழ்களை ஒரு புழு கொஞ்சம் கொஞ்சமாகக் குடைந்து தின்ன ஆரம்பித்தது. தென்றல் எத்தனை முயன்றும் அதனால் புழுவை மொட்டிலிருந்து தள்ள முடியவில்லை.

மொட்டு துயரத்தின் சிகரத்தில் நின்று தவித்தது. அதன் தெய்வக் கனவுகள் சிதறின. 'நாளை பண்டாரம் வருவான், புழு அரித்த மலர் இறைவனுக்கு ஆகாது என்று விட்டு விட்டுச் சென்று விடுவான்'— துன்ப நினைவுகள் அதனை வாட்டின.

கொடிய இரவொன்று கழிந்தது. காலை வந்தது. துயரப் புன்னகை விரித்து மொட்டு மலர்ந்தது. குரூர நெஞ்சினை உடைய அப்புழுவோ ஐந்து இதழ்களைத் துளைத்து அழகை யெல்லாம் அழித்துவிட்டு ஆறுவது இதழைச் சுவைத்து உண்டு கொண்டிருந்தது. தென்றல் வந்தது. "மகளே! உன் கதி இவ்வாறு ஆக வேண்டும்! இனி உன்னை வண்டுகளும் தீண்டா. பண்டாரமும் கிள்ளித் தூர எறிந்து விடுவானே!" வருந்திக் கூறியது தென்றல்.

"மாமா! உண்மையிலே என்னைக் கடவுள் ஏற்றுக் கொள்ள மாட்டாரா?" மலர் பனி நீரைக் கண்ணீராய்ச் சிந்தியது.

தென்றல் துயரத்துடன் மௌனமாய்ச் சென்று விட்டது. பண்டாரம் வந்தான். சிவப்பு ரோஜாவை ஆவலுடன் தேடி வந்த அவனுக்குப் பெருத்த ஏமாற்றம். புழு அரித்த மலரைக் கிள்ளி வெறுப்புடன் வேலிக்கு வெளியே எறிந்தான். மலர் கதறியது. "இறைவா! உன்னைச் சேரத்தான் எத்தனை ஆவலாகக் காத்திருந்தேன். நீயோ அதனை விரும்பாத என் அக்காவை உன் பாதங்களை அலங்கரிக்க அழைத்துக் கொண்டாய். என்னை வேலிக்கு வெளியே வாட விட்டு விட்டாய். எனக்கு விமோசனமே இல்லையா?"



"என்னென்னமோ ஆயில் போட்டும் ஓடாத விசிறி இப்போ ஓடுதே!"

"சும்மாவா ஓடுது; சர்வரோக நிவாரணத் தைலம் அல்லவா அதற்குப் போட்டிருக்கேன்!"

நிஜமாகவே அதற்கு விமோசனம் வந்து விட்டது. எறியப்பட்ட வேகத்தில் மலரில் ஒட்டிக் கொண்டிருந்த புழு தனியே தெறித்து விழுந்தது. மெதுவாக ஊர்ந்து சென்று அருகிலிருந்த மற்றொரு செடியில் ஒட்டிக் கொண்டது. மலர் தன் உடல் வலியினின்றும் விடுபட்டது. ஆனால் இதயத்தில் — வலி வளர்ந்து கொண்டே போயிற்று.

சிறிது நேரம் ஓடியது; மலர் கேட்பாரற்றுக் கிடந்தது. ஆற்றங்கரையில் கூட்டம் சேர ஆரம்பித்தது. வழக்கம் போல் சிறுவர்கள் மணலில் விளையாடத் தொடங்கி விட்டார்கள்.

"ஏண்டா, இன்னிக்குக் கோவில் விளையாட்டு விளையாடலாமா?" என்று கேட்டான் ஒருவன். அனைவரும் ஆமோதித்தனர். பிஞ்சுக் கரங்கள் பல ஒன்று சேர்ந்து மணற் கோயிலைச் சமைத்தன. இறைவனின் திருவுருவச் சிலைக்குப் பதில் ஒரு கல்லை நாட்டி வைத்தார்கள். "பாலு, நீதான் அர்ச்சகராம். நான்தான் விபூதி கொடுப்பேனும். இவாளெல்லாம் கும்பிட வருவாளாம்" என்றான் சோமு. 'சரி' என்ற பாலுவுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் முளைத்தது. "ஏண்டா, அர்ச்சனை செய்யப் பூ இல்லேயேடா" என்றான். "இதோ, கொண்டு வரேன்" என்று நந்தவனத்தை நோக்கி ஓடிய சோமுவுக்கு ஏமாற்றம். தோட்டத்தின் கதவு பூட்டப்பட்டிருந்தது. ஏமாற்றத்துடன் வேலியோரமாக நடந்த அவன் கண்களில் அந்தப் புழு அரித்த மலர் தட்டுப்பட்டது. அதை எடுத்து வந்தான். 'அடேடே, ரோஜாப்பூ' என்று ஆவலுடன் வாங்கிக் கொண்ட பாலு, 'கஜானனம், பூதகணாதி சேவிதம்' என்று தனக்குத் தெரிந்த சுலோகத்தை மழலைச் சொற்களில் கூறியவாறே தாங்கள் செய்து வைத்த கடவுளின் மீது ஒவ்வொரு இதழாகப் பிய்த்துப் பூஜை செய்தான். புழு அரித்த மலர் புளகித்தது. குறைவுற்ற தான் அடைந்த பேற்றை எண்ணிப் பெருமிதம் கொண்டு இறைவனை நன்றிப் பெருக்கோடு தழுவியது. பண்டாரத்துடன் சென்றிருந்தால் அது ஒரு பெண்ணின் கூந்தலைத்தான் அலங்கரித்திருக்கும். குழந்தைகளே இறைவனின் வடிவங்கள்தான். அந்த இறைவுருவங்கள் சமைத்த இறைவனுக்கு இப்போது அந்த மலர் அர்ப்பணமாயிற்று. பண்டாரத்தின் கைகளில் சிக்காமல் இந்தச் சிறுவர்களின் கைகளில் கிட்ட வேண்டும் என்றுதான் இறைவன் அந்தப் புழுவை மலரிடம் அனுப்பி வைத்தாரோ?



திறந்த விழிகள்

பூவுலகில் ஒரு பாழடைந்த கோயில் பிராகாரம். ஒரு மனிதன். பிறவிக் குருடன் அவன். கைகள் கும்பிட்டபடி அண்ணாந்து பார்க்கிறான். வாய், 'கண்ணா! மணிவண்ணா, கருணாநிதி... கடைத்தேற்றடா, காளிங்கா...' என்று கூவுகிறது. குருட்டுக் கண்களினின்று நீர் வழிந்தோடுகிறது.

''கண்ணா... உன்னை நான் தினமும் காண்கிறேனே! என்னுடன் பேசவாயேன்! என் கன்னத்தைத் தடவுவாயே! இன்று ஏன் வரவில்லை?'' குருடன் கதறினான்.

வான வழியே வைகுந்தநாதனுடன் வந்த தேவியர் சிரித்தனர். கண்ணன் ஓரக் கண்ணால் இருவரையும் பார்த்தான். விஷமப் புன்னகை உதிர்த்தான்.

''தினமும் உங்களைப் பார்ப்பதாகக் கூறும் இக் குருடன் நீங்கள் எதிரே வந்து நிற்கும்போது, நேரில் வராததேன் என்று கத்துகிறானே?'' கண்ணன் கரத்தில் தன் கரத்தைக் கோத்துக் கொண்டு ராதை கேட்டாள்!

''பைத்தியக்காரன் போலும்!'' என்றாள் ருக்மிணி. ராதைக்கும் ருக்மிணிக்கும் தாங்கள்தாம் கண்ணனை அதிகம் நேசிப்பதாகக் கர்வம். அந்தக் கர்வத்தையொடுக்க, ''உங்கள் மூவருக்கும் இடையே ஒரு போட்டி வைக்கப் போகிறேன். அப்பொழுது அவன் பைத்தியக் காரத்தனம் விளங்கும். வாருங்கள் போகலாம்!'' என்றான் கண்ணன்.

கண்ணனது மாளிகையில் ஓர் அலங்கார அறை. ஓர் ஓரத்தில் கண்ணனின் திருவுருவப் படம் இருந்தது. அந்த ஓவியத்தில் கண்கள் மட்டும் வரையப்படாமல் இருந்தது. ஆம், கண்கள் இன்னும் திறக்கப்படவில்லை.

கண்ணன் மஞ்சத்தில் அமர்ந்துள்ளான். கண்ணனின் தேவியர் இருவரும் அருகில் இருந்தனர். ஒரு மூலையில் பூவுலகத்தில் கண்ட குருடன் முன்பு பார்த்த நிலையிலேயே இருந்தான்.

''என்ன கண்ணா, இது வேடிக்கை? என்னவோ போட்டி வைக்கப் போகிறேன் என்றீர்கள். இக்குருடனை இங்கு அழைத்து நிறுத்தியிருக்கிறீர்கள். குறை ஓவியம் ஒன்று தொங்குகிறது அங்கே...'' என்றாள் ராதை.

''என்ன செய்ய வேண்டும்?'' என்றாள் ருக்மிணி.

குருடன் பேசவில்லை. அவன் வாய் 'கண்ணா, கண்ணா' என்று கூறியவாறு இருந்தது.

''அதோ அந்தக் கண்கள் வரையப்படாத ஓவியத்தில் நீங்கள் ஒவ்வொருவராகச் சென்று சரியான இடத்தில் கண்களை வரைய வேண்டும்'' என்றான் கண்ணன்.

''இப்படியேவா.... கண்களைத் திறந்து கொண்டா?''

''திறந்த கண்களுடன்தான்... இந்தா தூரிகை.''

''ப்பூ... இவ்வளவுதானே... இந்த அந்தகன் ஏன்?''

''அவனும் போட்டியில் கலந்து கொள்கிறான்.''

சிரித்தனர் தேவியர். 'அல்லும் பகலும் கண்ணனைக் கண்ணுற்று நிற்கும் நமக்கு இதென்ன பெரிய வேலை?' —ராதை கையில் தூரிகையுடன் ஓவியத்தருகில் வந்தாள்.

ஓவியத்தை உற்றுப் பார்த்தாள். அவள் பார்க்கப் பார்க்க ஓவியம் அவள் கண்களிலிருந்து மறையத் தொடங்கியது. கண்களைக் கையால் கசக்கிக் கொண்டு பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. சற்றுப் பிரமித்து நின்றாள். தன் தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. ஓவியத்தில் எதுவும் புலப்படாத போதே தூரிகையால் உத்தேசமாக இரு கண்களை வரைந்தாள்.

'களுக்'கெனச் சிரித்தாள் ருக்மிணி. வேகமாகக் கண்ணன் அருகில் வந்த ராதை ஓவியத்தை நோக்கினாள். திருஉருவத்தின் தலைக்கு மேல் எங்கேயோ கண்களை வரைந்திருந்தாள். சிரித்த ருக்மிணியை எரிய நோக்கி விட்டுத் தலை குனிந்தாள் ராதை.

இப்பொழுது ருக்மிணி தூரிகையுடன் ஓவியத்தின் அருகில் வந்தாள். ராதை ருக்மிணியைக் கூர்ந்து பார்த்தாள், தன்னைப் போல் அவளும் தடுமாறுகிறாளா என்று. ருக்மிணி மட்டும் சரியாய் வரைந்துவிட்டால் பிறகு தன் நிலை?

ருக்மிணி தூரிகையால் கண்கள் வரைந்தாள். எங்கு? கண்ணன் உருவத்தின் பாதங்களுக்குக் கீழ் ஏதோ ஒரு மூலையில் வரைந்தாள். ராதையால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.


கண்களை வரைந்த ருக்மிணி கண்ணன் அருகில் நின்று ஓவியத்தைப் பார்த்தாள். தாங்கொணாத வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

குருடன் தூரிகையுடன் ஓவியத்தை நெருங்கினான். வாய் 'கண்ணா' என்று கூவியது.

குருடன் தூரிகையால் ஓவியத்தில் சரியான இடத்தில் அழகாகக் கண்களைத் தீட்டினான். அவன் கண்களிலே நீர் கசிந்தது.

''கண்ணா! இப்போதே கண்டேன் உன்னை'' என்றான் குருடன்.

புன்முறுவல் பூத்தான் கண்ணன். தேவியர் இருவரும் பிரமித்தனர்.




''உங்கள் புறக் கண் திறந்திருக்க அகக் கண்கள் மூடிக் கிடக்கின்றன. அவன் அகக் கண்களால் என்னைப் பார்க்கிறான். ஆகவேதான் திறந்த விழிகளுடன் நீங்கள் செய்ய முடியாததைக் கண் இல்லாமலே அவன் சாதித்து விட்டான்'' என்றான் கண்ணன். தலை கவிழ்ந்தனர் தேவியர். —பேனாமுனை

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


"என் முழுத்திறமையையும் உபயோகித்து வேலை செய்து வருகிறேன் சார்!..."
"இவ்வளவு தான் உன் முழுத்திறமை என்றால் போதவே போதாது!"
HORLICKS
ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



CLEVITE 77

IS THE TOUGHEST AUTOMOTIVE ENGINE BEARING EVER DEVELOPED.



The steel and alloy make the **CLEVITE** bearings exceptional—better fatigue strength, excellent corrosion resistance especially at high temperatures and good surface behaviour. **CLEVITE** bearings guarantee outstanding performance and better load carrying capacity. It is more in the making of bearing materials that **CLEVITE** has got ahead—***to stay ahead.***

BIMETAL BEARINGS LIMITED
SEMBIAM MADRAS-11